www.padippakam.com

# அதிபர் ஒருவரின் கூரிய பார்வையில்



அதிபர் பொ. கனகசபாபதி மணிவிழா நினைவான
கனடா - 'தமிழர் தகவல்' கட்டுரைகளின் தொகுப்பு.
இலண்டன் - பாரீஸ் மகாஜனாவினரின் வெளியீடு
1996 யூலை 20

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அதிபர் ஒருவரின் கூரிய பார்வையில்

*தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின்*
*முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி*
*அவர்களால் எழுதப்பெற்று*
*கனடிய 'தமிழர் தகவல்' சஞ்சிகையில்*
*வெளியானவைகளிலிருந்து*
*தெரிந்தெடுக்கப்பட்ட*
*பத்துக் கட்டுரைகளின் தொகுப்பு.*

மணிவிழா நினைவாக
பெரிய பிரித்தானியா, பிரான்ஸ்
மகாஜன பழைய மாணவர் சங்கங்களால்
வெளியிடப்பெற்றது.
1996 யூலை 20

படிப்பகம்

www.padippakam.com

# அதிபர் ஒருவரின்
# கூரிய பார்வை

பொ. கனகசபாபதி

முதற் பதிப்பு:
1995 செப்டெம்பர் 04

இரண்டாம் பதிப்பு:
1996 யூலை 20

வெளியிடுவோர்:
மகாஜன பழைய மாணவர் சங்கங்கள்
பெரிய பிரித்தானியா - பிரான்ஸ்
27 Orpheus Tower
Desmond Street
London SE14 6HY

பதிப்புரிமை:
தமிழர் தகவல்
கனடா

படிப்பகம்

www.padippakam.com



## பதிப்புரை

வை. தயாளன்
தலைவர், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐஇ)

இன்று உலகம் முழுவதும் மகாஜனாவின் மாணவர்களும், ஆசிரியர்களும் பரந்து வியாபித்து உள்ளார்கள். 1910ம் ஆண்டு தெல்லிப்பழை என்கிற கிராமத்தில் மகாஜன பாடசாலையை உருவாக்கியவர் அமரர் துரையப்பாபிள்ளை அவர்கள். அன்றைய அடிமை வாழ்க்கைக் கால கட்டத்தில் எங்கள் ஸ்தாபகர் துரையப்பாபிள்ளை அவர்கள் ஒரு பத்திரிகையாளராக, எழுத்தாளராக, கவிஞராக அறியப்பட்டு சமகால சமூக, அரசியற் பிரச்சனைகளை வெளிக்கொண்டு வருவதில் மிகக் காத்திரமாக செயற் பட்டிருக்கின்றார். பாவலர் துரையப்பாபிள்ளை என அறியப்படுகின்ற எங்கள் ஸ்தாபகரைத் தொடர்ந்து அதிபராகிய திரு. கா. சின்னப்பா அவர்களும் ஒரு கவிஞராவர்.

ஈழத்து இலக்கியத்தில் ஆக்க நிலைப்பட்ட தேசியப் பரிமாணம் நன்கு புலனாகிய, நிலைநிறுத்தப்பட்ட காலமாக மறுமலர்ச்சிக் காலம் கருதப்படுகிறது. இதனால் . இக்காலத்து இலக்கியப் படைப்பாளிகள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறப்பான கவனத்தைப் பெறுகிறார்கள். இந்த மறுமலர்ச்சிக் கால மும்மணிகளாக கருதப்படுகின்ற அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, மஹாகவி து. உருத்திரமூர்த்தி ஆகிய மூவரும் மகாஜனக் கல்லூரி ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்துக்கு ஈன்று புறந்தந்தவர்களாக அறியப்படுகிறார்கள். பேராசிரியர். தில்லைநாதன் 1973 இல் இவர்களின் பங்களிப்பைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். தமிழின் கட்டுக்கிடையாய்க் கிடந்த தேக்க நிலையையும் எம்மக்களின் அடிமை நிலையையும் அறிந்த மறுமலர்ச்சி வேட்கையும் விடுதலை விருப்புங் கொண்ட இவ்வெழுத்தாளர்கள் தாம் பிறந்து வளர்ந்த மண்ணினைத் தனித்துவம் சிதையாது சீர்படுத்தியதோடு அதற்கு மேற்கிலே தோன்றிய சிந்தனை ஊற்றுக்களினின்றும் நீர் கொணர்ந்து பாய்ச்சி வளம்படுத்தவும் விளைந்தனர் எனலாம்.

மகாஜனாவின் ஆசிரிய பரம்பரை மிக நீண்ட காலமாகவே ஈழத்து இலக்கிய உலகின் முக்கிய பங்களிப்பாளர்களாக இருந்து வந்துள்ளார்கள். பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சஞ்சிகையின் முதல் ஆசிரியர் என்ற பெருமைக்குரிய எங்களின் முன்னாள் அதிபர் திரு. த. சண்முகசுந்தரம் அவர்கள் முதன்மையானவர். இலங்கைக் கலைக் கழக நாடகப் போட்டியில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் முதற் பரிசு பெற்ற நாடகங்களை தானே எழுதி, நெறிப்படுத்திய ஆசிரியர் கதிரேசர்பிள்ளை ஒரு சிறந்த கவிஞர். மகாஜனாவின் கல்லூரிக் கீதமான ஜய ஜய மகாஜனவை எழுதிய புலவர். நா. சிவபாதசுந்தரனார் தமிழிற்கும் சமயத்திற்கும் என்றும் அழியாத செல்வங்களை தந்து மறைந்த தமிழறிஞராவர். இன்னொரு ஆசிரியரான மயிலங்கூடலூர் நடராஜன் அவர்கள் சிறந்த எழுத்தாளராகவும் கவிஞராகவும் அறியப் பட்டதுடன் இன்றைய தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க இளைய பரம்பரை ஒன்றைத் தட்டிக்கொடுத்து வளர்த்த பெருமைக்கும் உரியவராவார்.

படிப்பகம்

www.padippakam.com



கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக உள்ள திரு ஆ. சிவநேசச்செல்வன் அவர்கள் மகாஜனாவின் குறிப்பிடத்தக்க பழைய மாணவர். மயிலங்கூடலூர் நடராசனுடன் இணைந்தும் தனித்தும் மகாஜன இலக்கியப் பாரம்பரியம் என்ற எண்ணக் கரு அறிஞர் மட்டத்திலும் மக்கள் மத்தியிலும் நிலைநாட்டப்படவும் ஏற்றுக் கொள்ளப்படவும் உழைத்தவர்களில் திரு. சிவநேசச்செல்வன் குறிப்பிடத்தக்கவர். கல்லூரியில் பாவலர் நூற்றாண்டு மலர், நிறுவியவர் நினைவுப் பேருரைத் தொடர் என இவர் சிந்தனையில் மலர்ந்தவை பல. தமிழிலக்கியம், தொல்லியல், தமிழில் தொடர்புச் சாதனங்கள் என்பன பற்றிச் சிறந்த கட்டுரைகளையும் இவர் தந்துள்ளார்.

மகாஜனன்களில் அதிக நூல்களைத் தந்தவரான தெல்லியூர் நடராசன், பழந் தமிழிலக்கிய மரபில் மனிதநேய உணர்வு மிக்க நல்ல பல கவிதை நூல்களைத் தந்த புலவர். ம. பார்வதிநாதசிவம், சிறுகதைகள் எழுதுகின்ற கோகிலா மகேந்திரன், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை வழிநடாத்தி வருகின்ற சோமகாந்தன், பௌராணிக வித்தகர் குகசர்மா சிறுகதைத் தொகுதி வெளியிட்டவர்களான வேல்அமுதன், குரும்பசிட்டி கே. எஸ். சிவகுமாரன், கங்கையாளே இசைத்தட்டுப் பாடலை எழுதிய நா. சண்முகலிங்கன், கவிதை, கட்டுரை, நாடகம் என தமிழின் பல துறைகளில் காத்திரமான பங்களிப்புச் செய்த மாவை. நித்தியானந்தன், கவிஞர். பாவை. ஜெயபாலன் லண்டனில் கவிதை நூல் தந்த அங்கயற்கண்ணி, போன்றோரின் தொடர்ச்சியான பங்களிப்பு எங்களைப் பெருமைப் படுத்துவன.

யாழ்ப்பாணத்துப் பெருங் கற்காலப் பண்பாடு என்கிற ஆராய்ச்சி நூலினை தமிழிற்குத் தந்த பொ. இரகுபதி, தமிழ், சமயத்துறைகளில் எழுதி வருகின்ற க. நாகேஸ்வரன், கு. சரவணபவன், பிரான்சில் தொடர்ந்து எழுதுகின்ற மனோகரன் ஜேர்மனியில் ஏலையா என்கிற சஞ்சிகை வெளியிடுகின்ற க. முருகதாசன் சமயத்துறையில் தொடர்ந்து எழுதி வருகின்ற ச. விநாயகரத்தினம் என மகாஜனன்களின் இலக்கியப் பங்களிப்புகள் தொடருகின்றன.

மறுமலர்ச்சிக் காலத்தில் மகாஜனன்களின் காத்திரமான பங்களிப்புப் போலவே இன்றைய போராட்ட காலத்திலும் ஒரு சிறப்பு மிகுந்த இளைய தலைமுறை கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் மகாஜனா தந்துள்ளது என்பது பெருமைக்கு உரியதே. இன்று தமிழுலகின் தலைசிறந்த கவிஞராக கருதப்படுகின்ற சேரன் எங்கள் மஹாகவியின் அருமை மைந்தன். கதை, கவிதை, கட்டுரை எழுதுகின்ற ஆதவன், ஆசிரியர் கதிரேசர்பிள்ளையின் வாரிசு. மகாஜனாவில் படிக்கின்ற காலத்திலேயே புதுசு சஞ்சிகையை வெளியிட்ட சபேசன், ரவி, பாலசூரியன், இளவாலை. விஜயேந்திரன் ஆகியோர் இன்றும் தொடர்ந்த, பயனுள்ள ஆக்கங்களைத் தருகின்றனர். ஊர்வசியும், ஔவையும் இன்று பெயர் குறிப்பிடத் தகுந்த இரு பெண் எழுத்தாளர்கள். மேற்குறிப்பிட்ட நீண்ட தொடரில் விடுபட்ட பெயர்கள் பல இருக்கலாம்.

www.padippakam.com



மகாஜனன்களின் இந்த நீண்ட வரிசையில் புதிதாக சேர்க்க வேண்டிய பெயர் எங்கள் எல்லோரினதும் மதிப்பிற்குரிய ஒருவர். இவர் வேறு யாரும் அல்லர். எங்கள் முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் தான்.

பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றுவது வேறு; அதிபராகப் பணிபுரிவது வேறு. முன்னையது போதித்தலுடன் சம்பந்தப் பட்டது. பின்னையது நிர்வாகத்துடன் இணைந்தது. அதிபர் என்னும் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்திட்ட வேளையிலும் போதித்தலைப் பிரதான பணியாகக் கொண்டு செயற்பட்ட அதிபர்கள் எம்மத்தியில் குறைவு. இவர்களுள் அதிபர் கனகசபாபதி அவர்கள் குன்றின் விளக்காக மிளிர்கின்றார். இதனாலேதான் புலம்பெயர்ந்த நாட்டிலும் பலம் வாய்ந்த மாணவர் கூட்டத்தின் தலைவராக அவரால் திகழ முடிகின்றது.

எங்கள் கல்லூரியின் சிறந்ததும் நீண்டதுமான ஆசிரிய பரம்பரையில் திரு. கனகசபாபதி முதன்மையானவர். கல்லூரியின் பொற்காலம் எனக் கருதப்படுகின்ற அறுபதுகளிலும் எழுபதுகளிலும் காலம்சென்ற மகாஜனச் சிற்பி திரு தெ. து. ஜயரத்தினம் அவர்களுடனும் ஏனைய ஆசிரியர்களுடனும் இணைந்து இவர் ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை. 1976இல் மிக வேண்டிய போது அதிபராக பொறுப்பேற்று மீண்டுமொருமுறை பொற்காலத்தை உருவாக்கியவர்.

விஞ்ஞான ஆசிரியராக இருந்தும் தமிழ்மொழியில் அக்கறையும் ஆற்றலும் பெற்ற அதிபர் அவர்கள் எமது இனத்தினதும் பிள்ளைகளினதும் எதிர்காலத்திலும் அக்கறை கொண்டவராகவே செயற்பட்டு வருபவர். கனடாவில் கடந்த பத்தாண்டுகளாக வசித்து வருகின்ற இவர், அங்கு வெளிவருகின்ற தமிழர் தகவல் என்ற சஞ்சிகையில் தொடராக எழுதிவருகின்ற கட்டுரைகளில் பத்துக் கட்டுரைகளை தெரிந்தெடுத்து கனடா **மணிவிழாக்** குழுவிற்காக **அகிலன் அசோசியேற்ஸ் நிறுவனம்** வெளியிட்ட **அதிபர் ஒருவரின் கூரிய பார்வையில்** என்கின்ற இந்த நூலினை இங்கு நடைபெறுகின்ற மணிவிழாவின் நினைவாக மீண்டும் பிரசுரிக்கின்றோம். இது லண்டன் – பாரீஸ் பழைய மாணவர் சங்கங்களின் கூட்டு முயற்சி.

இந்த நூலுக்கு அருமையான அணிந்துரையை பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் சி. சிவசேகரம் வழங்கியிருக்கின்றார்.

அட்டைப்படம் பனிமலர் சஞ்சிகையின் சிறப்பு விழா ஒன்றின் போது இலண்டனில் ஓவியர் ராஜாவினால் படமாக்கப் பட்டது. பத்துக் கட்டுரைகளினதும் எழுத்துப் பதிவு கனடாவில் தமிழர் தகவலினாலேயே ஒழுங்கமைத்துத் தரப்பட்டது.

இக் கட்டுரைத் தொகுதியை மீண்டும் இங்கு வெளியிட அனுமதியும் உதவியும் நல்கிய தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் அவர்களுக்கும் அதிபர் திரு கனகசபாபதி அவர்களுக்கும் எங்கள் நன்றிகள். இந்நூலை வெளிக்கொணர்வதில் எம்முடன் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகள்.

படிப்பகம்

www.padippakam.com



## அணிந்துரை

**சி. சிவசேகரம்**

நான் மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவனல்ல, எந்தவொரு பழைய மாணவர் சங்க உறுப்பினனுமல்ல. எனது முதலாவது பாடசாலை பெண்கள் பாடசாலை. அவர்களது சங்கத்தில் அனேகமாக எனக்கு இடமிருக்காது. நெடுங்காலமாகப் படித்த பாடசாலைக்கு இங்கே சங்கம் இருப்பதாக தெரியவில்லை. குறுகியளவு காலமே படித்த பிரபல பாடசாலைக்கு உரிமை கொண்டாடும் ஆசையுமில்லை. அனைத்திலும் மேலாக, எல்லாப் பழைய மாணவர் சங்கங்களுமே சமுதாயத்திற் சற்றே மேலெழுந்தவர்களது ஆத்ம திருப்திக்காகவும் சிலர் கூடிக் களிப்பதற்கான வாய்ப்பை அளிக்கும் நோக்குடனுமே இயங்கும் கேளிக்கை இல்லங்களாகவே தெரிந்ததால் இவ்வாறான அமைப்புக்கள் பற்றி எனக்கு அதிக அக்கறை இருக்கவில்லை.

லண்டன் வந்து சில ஆண்டுகளின் பின், மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களது செயற்பாட்டைப் பார்த்த பிறகு, எல்லாப் பழைய மாணவர் சங்கங்களும் இம்மாதிரி இயங்கினால் எவ்வளவு நன்றாயிருக்குமென்றே தோன்றியது. இவர்கள் மற்றவர்கள் செய்கிற காரியங்களையும் செய்கிறார்கள். ஆனாலும் மற்றவர்கள் செய்யாத பல காரியங்களையும் செய்கிறார்கள். புலம் பெயர்ந்தோர் சஞ்சிகைகளிலும் நூல் வெளியீடுகளிலும் நாடகத்துறையிலும் சமூக ஆய்வுக் கூட்டங்களிலும் இவர்களது பங்கும் பற்றுதலும் விகிதாசாரத்திற்கு மிக அதிகம். நல்ல வேளையாக, இந்த மாதிரிக் காரியங்களுக்குத் தரப்படுத்தல், மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கீடு என்பன போல எதுவுமே இல்லை. உள்ள எல்லாவற்றுக்கும் போட்டி போட்டே சாகிற தமிழர்கள் இதிலும் கடுமையாகப் போட்டியிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

ஒரு பாடசாலையிலிருந்து நல்ல இலக்கியவாதி ஒருவர் வந்தால், அது அப் பாடசாலையின் சிறப்பாக இருக்க அவசியமில்லை. ஒரு சிலர் வருவது கூடத் தற்செயலான ஒன்றாக இருக்கலாம். எக்கச்சக்கமான தொகையில் வந்தால் அங்கே என்னவோ விஷயம் இருக்க வேண்டும். அதற்கும் பாடசாலையின் கல்விச் சூழலுக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். வெறும் ஏட்டுப் படிப்பிற்கும் மேலாகச் சமுதாயச் சார்பான விஷயங்கள் பற்றி அக்கறை காட்டும் ஒரு நிறுவனமே அதை இயலுமாக்க வல்லது. அதன் கல்விச் சூழல் நல்ல மாணவர்களைச் சிறந்த மனிதர்களாக்க வல்லது, ஆற்றலுள்ள ஆசிரியர்களை உயர்ந்த வழிகாட்டிகளாக்க வல்லது. இவ்வாறான நிறுவனங்கள் ஒரு நாளில் உருவாவதில்லை. இவற்றிற்குப் பின்னால் உள்ள கடுமையான உழைப்பும் சமுதாய அக்கறையும் ஆரோக்கியமான சிந்தனையுடையோரது பங்களிப்பும், வெளியிலிருந்து பார்க்கும் போது தெரியாது. அவை காலப் போக்கில் மறக்கப் படலாம். எனவே சில விஷயங்கள் பற்றிய பதிவுகள்தேவை. அதையும் மகாஜன பழைய மணவர்கள் செய்கிறார்கள். எனினும், இக் கட்டுரைத் தொகுப்பு வித்தியாசமானது.

www.padippakam.com



புலம் பெயர்ந்த சூழலில் நமது சுய அடையாளம் பற்றியும் நமது சந்ததியினரது எதிர்காலம் பற்றியும் பல கேள்விகள் எழுந்துள்ளன. புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தினரிடையே இருந்து வந்த மனித உறவுகள் புதிய சூழலின் நெருக்குவாரங்கட்கு முகங்கொடுக்க இயலாது திணறுகின்றன. கணவன்–மனைவி, பெற்றோர்–பிள்ளைகள், உறவு, சுற்றம் என்பன பற்றி இருந்து வந்த தெளிவான பார்வைகள் எல்லாமே இன்றைய சூழலின் நிச்சயமின்மையினூடு வழி காட்ட இயலாது தவிக்கின்றன. நாம் வைத்திருந்தனவற்றுள் எதைக் கொள்வது, எதை எறிவது என்று நமக்குத் தெரியவில்லை. புதிய சூழலில் ஏற்கத் தக்கது எது, தகாதது எது எனவும் நமக்குத் நிச்சயமில்லை. மாற்றம் நிச்சயமானது என்பது நன்றாகவே தெரிந்தாலும், அது நம்மைப் பயமுறுத்துகிறது. இத்தகைய ஒரு குழப்பமான நிலையிற் பெற்றேருக்கும் பிள்ளைகட்குமிடையிலான உறவுகள் சிக்கலடைகின்றன. குடும்ப உறவுகள் சீர்குலைகின்றன. நம் புலம் பெயர்ந்த சமுதாயம், நிகழவுள்ள மாற்றத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்ற கேள்விக்குத் தெளிவான பதில்கள் என எதுவும் இல்லை. ஆயினும் பயனுள்ள வழிகாட்டல்களுக்கு இடமுண்டு.

நமது மரபையும் சமகாலத்தையும் விளங்கிக் கொள்ள நமக்கு வழிகாட்டவும் மாற்றங்கட்கு முகங்கொடுக்கும் மனத்திண்மையை நமக்கு வழங்கவும் வல்ல மகாஞானி எவரும் அவதரிக்கப் போவதில்லை. நாம் வேண்டுகிற ஞானம் நம்மிடையிலேயே உள்ளது. திறந்த மனதுடன் நமது அனுபவங்களை ஆராய்வதன் மூலமே அந்த அனுபவக் கடலில் இருந்து அந்த ஞானம் நமக்குக் கிட்டுகிறது. அந்த ஞானம் பெரிய விஷயங்களில் மட்டுமன்றி அன்றாட அற்ப நிகழ்வுகளிற் கூடப் பொதிந்திருக்கிறது. அதைப் பெற்றுப் பிறருடன் பகிர்ந்து செழுமைப் படுத்தும் அக்கறையும் ஆற்றலும் எல்லாருக்கும் ஒருங்கமைவதில்லை.

முன்னாள் மகாஜன அதிபர் கனகசபாபதி அவர்களைப் பற்றி எனக்கு அதிகந் தெரியாது. மூன்றாண்டுகள் முன்னம் பனிமலர் சஞ்சிகையின் சிறப்புக் கூட்டமொன்றுக்கு அவர் தலைமையுரை வழங்குமாறு அழைக்கப்பட்ட போது அவருடன் ஒரு சில சொற்களைப் பரிமாறும் வாய்ப்புக் கிடைத்தது. கூட்டம் முடிந்ததுமே வீடு செல்லும் தேவையால் அவருடன் விரிவாக உரையாடும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவர் கூட்டத்தில் பேசிய சில விஷயங்கள் இன்னமும் மனதிற் தெளிவாக நிற்கின்றன. எல்லோரும் வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடிய எளிய மொழி நடையின் தேவையை அவர் மிகவும் வலியுறுத்தினார். புலம் பெயர்ந்த சூழலிற் தமிழ் மொழி எவ்விதம் தொடர்ந்தும் பயன்படும் என்பது பற்றிய தனது நியாயமான அச்சங்களையும் அவர் குறிப்பிட்டார். அவரது உரை பெருமளவும் அவரது புலம் பெயர்ந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

தெளிவாகவும் எளிமையாகவும் எழுதப்பட்டுள்ள அவரது கட்டுரைகளிற் தெரியப்பட்ட பத்தின் தொகுப்பைக் காணும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. புலம் பெயர்ந்த வாழ்வின் நிசமான பிரச்சனைகட்கு எவ்விதம் முகங்கொடுப்பது என்ற கேள்வியைச் சார்ந்து அவர் எழுதிய கட்டுரைகளில் ஒரு பகுதி சென்ற வருடம் நூல்வடிவு பெற்றது. கனடாவில் வெளியான இந் நூல் இம்முறை ஐரோப்பாவில் உள்ள பழைய மாணவர்களால் மறுபதிப்புச் செய்யப்படவுள்ளது. இது மிகவும் பாராட்டத் தக்க முயற்சி. ஏனெனில் கனடா வாழ் தமிழர்கட்கு எட்டிய அவரது பயனுள்ள கருத்துக்கள் ஐரோப்பா வாழ் தமிழர்கட்கும்

படிப்பகம்

www.padippakam.com



எட்ட இயலுமாகிறது.

கட்டுரைகள் அனைத்திலும் நம் மரபு சார்ந்த சமுதாய விழுமியங்களின் சாயலை நாம் காணலாம். ஆயினும் அந்த விழுமியங்களை புலம் பெயர்ந்த நாட்டில் நாம் வலியுறுத்துவதாயின் புதிய சூழலின் யதார்த்தத்தையும் நாம் கணிப்பிலெடுக்க வேண்டும் என்ற தெளிவும் அங்கே உள்ளது. பிள்ளை வளர்ப்பில் வயதுக்கும் முதிர்ச்சிக்கும் ஏற்ற வாறான ஒரு ஜனநாயக அணுகுமுறையை அவர் வலியுறுத்துவது முக்கியமானது. பாலியற் கல்வி, குழந்தைகளை அடித்தல் போன்ற விஷயங்களில் அவரது அணுகுமுறை நவீனத்துவமானது. ஆயினும் அது மரபு சார்ந்த விழுமியங்களினின்றே எழுவது. குழந்தைகளுடைய ஒழுக்கம் அவர்கள் வளரும் சூழலால் மிகவும் பாதிக்கப் படுகிறது. மாறுபட்ட ஒரு சூழலில் பெற்றோரின் பொறுப்பு மிகவும் பாரியது. அவர்களது முன்மாதிரியான நடத்தையின் அவசியம் பற்றி அவர் பன்முறை வலியுறுத்தியுள்ளார். மொத்தமாகப் பார்த்தால் புலம்பெயர்ந்த வாழ்விற் பெற்றோருக்கும் பிள்ளைகளிற்கும் இடையில் ஏற்பட்டு வரும் விரிசலை எவ்வாறு கையாள்வது என்பதில் பெற்றோருக்கு மிகவும் பயனுள்ள ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இக் கட்டுரைகளைப் பெற்றோர் மட்டுமன்றி இளவயதுப் பிள்ளைகளும் படிப்பது நல்லது. கட்டுரைகளில் வரும் பல அனுபவங்கள் கனடியச் சூழலுக்கு உரியனவாயினும், அயல் மொழிக் கலாச்சாரச் சூழலுட் புலம் பெயர்ந்த சகல தமிழ்க் குடும்பங்கட்கும் அவை பொதுவானவை.

இக் கட்டுரைகளின் முக்கியமான ஒரு பண்பு ஏதெனின், அவற்றின் ஆசிரியர் மிகவும் வலியுறுத்திச் சொல்கிற விஷயங்களையும் மிகவும் சினேகபூர்வமான முறையில், சட்ட திட்டம் போடுவது போலன்றி ஒரு ஆலோசனையின் பாங்கிற் கூறியிருப்பதாகும். இது போன்ற கட்டுரைகள் நமக்கு இன்னும் தேவை. நாங்கள் வாசிக்கப் பழகிவிட்ட குப்பைச் சஞ்சிகைகட்கும் பார்த்துப் பழகிவிட்ட தமிழ்த் திரைப்படக் கழிசல்கட்கும் ஒதுக்கும் நேரத்தில் ஒரு பகுதியையேனும் ஒதுக்கி இத்தகைய பயனுள்ள கட்டுரைகளை வாசித்துப் பயன் பெறுவோமாயின் எங்கள் பார்வை சற்று விரிவடையும். நம்முடைய அனுபவங்களும் பிறருக்கு நற்பயன் தரக் கூடியனவாக அமையக் கூடும்.

புலம் பெயர்ந்த தமிழர் மட்டுமன்றித் தாய் நாட்டின் மாறிவரும் சூழலில் வாழும் தமிழர்களும் படித்துப் பயன் பெற உகந்த விஷயங்கள் இந்த நூலில் உள்ளன. இதை மறுபதிப்புச் செய்யும் இந் நன்முயற்சி பாராட்டுக்குரியது. அதிபர் கனகசபாபதியினுடைய பிற கட்டுரைகளையும் பரவலான வாசிப்புக்கு உட்படுத்த இயலுமாயின் அதுவும் ஒரு பயனுள்ள பணியாகும்.

இவ்வாறான நற்பணிகள் தொடர எனது வாழ்த்துக்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# இளைஞர் இயல்பும் பெற்றோர் நடத்தையும்

தனித்துவம் எதிலும் இருக்க வேண்டும். இது சமூக வாழ்விற்கு இன்றியமையாதது என்று பொதுவாக நாம் சொல்வதுண்டு. "நீ நீயாகவே இருக்கப் பழகு! இன்னொருவரைச் சார்ந்திராதே" என்று பிள்ளைகளுக்கும் போதிப்பதுண்டு. உண்மையான நிலையை நாம் சற்று உற்று நோக்கினால், நாம் நம் பிள்ளைகளிடம் எதனை எதிர்பார்க்கிறோம் என்பது தெளிவாகும். நாம் எமது பிள்ளைகளையும் ஏனைய பிள்ளைகளைப் போன்றே நடத்த வேண்டும், இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம். ஒரேமாதிரி இருந்துவிட்டால் பிரச்சனை இல்லாது போய் விடுகிறது. வாழ்க்கை சுமுகமாகப் போகிறது.

உண்மையைச் சொல்வதானால் நாம் வித்தியாசமானவையை அங்கீகரிக்கத் தயக்கம் காட்டுகிறோம். நாம் பிள்ளைகளுடன் சர்ச்சைக்குரிய விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடும் போது எம்மைக் காத்துக் கொள்ளச் சாதகமான முறையிலேயே பிரச்சனையை அணுகுகிறோம். நம் பிள்ளை இன்னொரு பிள்ளையை மாதிரியாகக் கொள்ள முனைந்தால், அது நமக்கு ஏற்புடையதாய் அமையாவிட்டால், "நீ ஏன் அவரைப் பின்பற்ற வேண்டும்? நீ நீயாகவே வாழப் பழகு" என்போம். எமது பிள்ளை எமது எதிர்பார்ப்புக்கு மாறாக நடக்க முயலும் பொழுது அயலவரின் பிள்ளையையோ அல்லது ஒரு உறவினரின் பிள்ளையையோ உதாரணம் காட்டி எமது நிலையை உறுதிப்படுத்த முனைவோம். இந்த இரண்டு முரண்பாடும் எம்முடன் கூடப்பிறந்த ஒன்று!

நாம் வாழுகின்ற காலமே பிரச்சனைகள் நிறைந்தது. சந்தேகம், நம்பிக்கையின்மை மலிந்து கிடக்கின்றன. பழைய நெறிகள் எமது வாழ்க்கை முறையில் சிதைவுறுகிறதோடு மட்டுமன்றி நாம் கைக்கொள்ள முனையும் விழுமியங்களே ஆட்டம் கண்டு கொண்டிருக்கின்றன. எனவே, ஆற்றல்கள் இன்னும் வலுவாக நிலைபெறாத இளைஞர்களுக்கு அவர்கள் முன்தோன்றும் காட்சி மிகச் சிக்கலானதாக அமைவது உணரக்கூடியதே. அவர்களைப் பொறுத்தமட்டில் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த குடும்ப வாழ்க்கை, சமயம், சட்டம், சம்பிரதாயம், இன்னும் இறுதியாகப் பெறக்கூடிய உத்தியோகம் எல்லாமே தலைகீழாகத் தெரிகின்றன. நம்பிக்கையின்மையிலேயே அவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டியுள்ளது.

இங்குதான் ஓர் இளைஞனுடைய சுயமதிப்பு (self esteem) பற்றிச் சிந்திக்க வேண்டும். சுயமதிப்பிற்கு முன்னோடியாக அமைவது சுயகணிப்பு (self concept). தனது நடத்தை, ஆற்றல், தன் உடல் பற்றிய அறிவு ஆகியவற்றை மையமாக வைத்து ஒருவருக்கு எழும் எண்ணங்கள், மனோபாவங்கள், தீர்வுகள் முழுவதுமே சுயகணிப்பு எனப்படும். பொதுவாகவே "நான் யார்?

படிப்பகம்

www.padippakam.com



நான் எப்படி இருக்கின்றேன்?" என்பன போன்ற வினாக்களுக்கு வரக்கூடிய பதில்களான விளக்கங்களே சுயகணிப்பு ஆகின்றன.

சுயமதிப்பு ஒருவர் தன்னை மதிப்பீடு செய்வதன் பெறுபேறாக அமைகின்றது. "நான் யார்? நான் எப்படி இருக்கின்றேன்?" என்கின்ற அதே வினாக்கள் இங்கு மதிப்பீட்டு வினாக்களாக அமைகின்ற பொழுது ஒருவர் தன் வாழ்க்கையில் திருப்தி அடைந்துள்ளாரா, இல்லையா எனத் தெரிய வருகிறது.

சுயமதிப்பு விருத்தி பிள்ளை பிறந்த முதல் வருடத்திலேயே ஆரம்பித்துப் படிப்படியாக வளர்ச்சியுற்று 10 வயதிலே நிலைத்து விடுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, ஒரு பிள்ளையின் சுயமதிப்பு விருத்தியிலேயே பெற்றோர்கள் மிகவும் வலுவான தாக்கமொன்றினை ஏற்படுத்துகின்றனர். பாடசாலை ஆசிரியர்களின் பங்கும் முக்கியமானதே. பாடசாலைக்குப் பிள்ளை சென்றதும் அங்கு தற்காலிக பெற்றோர்களாக அமைகின்ற ஆசிரியர் பிள்ளையினது சுயமதிப்பு விருத்திக்கு முக்கிய ஏதுவாக அமைகின்றார் என்பது உண்மையே. பாடசாலையிலே பிள்ளையினது கல்வி மதிப்பீடு செய்யப்படுகிறது. அதனை ஒத்தவயதுடையோர் அவதானிக்கின்றனர். அனேக பாடசாலைகள் கல்விப் பெறுபேறுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணத்தால் கல்விப் பெறுபேறுகளே பொதுவாக மாணவர் தம்மைப் பற்றிய மதிப்பீடு செய்வதற்குரிய அளவுகோலாக அமைந்து விடுகின்றன. எனவே, மாணவன் ஒருவனுடைய சுயமதிப்பினை நிலைநாட்டுவதற்கு இன்றியமையாத கருவியாகக் கல்விப் பெறுபேறு அமைந்து விடுவதைக் காணமுடியும். சிறார்களின் சுயமதிப்பு அவர்களது வாழ்க்கை முழுவதும் ஊடுருவிச் செல்வதுடன் அவர்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் பாதிக்கச் செய்கிறது. எனவே, பாடசாலையில் ஏற்படுகின்ற தாக்கத்தினை சில வேளைகளில் முற்றாகவே நிர்மூலம் செய்து பிள்ளையை எதிர்நீச்சல் போடவைக்கின்ற பாரிய செயல் பெற்றோர்களைச் சார்ந்து இருக்கின்றது.

பொதுவாகவே சுயமதிப்பு கல்விப் பெறுபேறு மாத்திரமன்றி, ஒத்தவயதுடையோர் அங்கீகாரம், சமூக அங்கீகாரம் பெற்றோரின் நன்மதிப்பு ஆகிய ஏகோபித்த தாக்கங்களின் பெறுபேறாக அமையும். இங்கு முக்கியமானது சுயமதிப்புப் படிப்படியாக விருத்தியுற்ற போதிலும் அது ஒரு நிலையை அடைந்ததும் நிரந்தரமாகி விடுவதோடு பின்னர் எந்தவிதமான மாற்றத்திற்கும் ஏதுவாக மாட்டாது. ஆகவே, பிள்ளைகள் தாழ்வான சுயமதிப்பினை உருவாக்குவதைத் தடுப்பதில் பெற்றோர் மிகச் சிரத்தை எடுக்க வேண்டியது அவசியம். தாழ்வான சுயமதிப்பு உள்ள பிள்ளைகளை இனம்காண்பது சுலபம். அவர்கள் நடவடிக்கைகள் அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடும். தாழ்வு மனப்பான்மை, தன்னைப் பற்றித் தாழ்வான அல்லது ஏளனமான சொற் பிரயோகம், தன் வருங்காலத்தைப் பற்றி நம்பிக்கையற்ற தன்மை, உடை, நடத்தையில் அக்கறையின்மை, உதாசீனம், பொறுமையின்மை, ஒத்தவயதுடையோருடன் முரட்டுத்தனமாகப் பழகுதல், சிறியவர்களை, வலிமைகுன்றியோரை ஏளனம் செய்தல், துன்புறுத்துதல், நடத்தையில் ஒரு சீரற்ற தன்மை, எந்த நேரமும் எதனையோ இழந்து விட்டது போன்ற போக்கு, முதன்மை தாங்க விருப்பமின்மை, மற்றையோருடன் பழகாமல் ஒதுங்கி வாழ்தல், கல்வியில் அக்கறையின்மை, மனத்தை எதிலும் லயிக்க வைக்காத இயல்பு போன்ற பல குணவியல்புகளைத் தாழ்வான

படிப்பகம்

www.padippakam.com



சுயமதிப்புடைய இளைஞர்களிடம் காணமுடியும்.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளைச் சீராட்டும் அளவிலேயே அவர்களின் சுயமதிப்பு விருத்தி தங்கியுள்ளதாக உளவியல் வல்லுனர்கள் கருதுகின்றார்கள். உதாரணமாக, நிபந்தனையற்ற அன்பினைத் தாம் பிள்ளைகளிடத்தே கொண்டுள்ளதாக அவர்களுக்கு உணர்த்தி, தண்டிக்கின்ற மனப்பான்மை அற்ற முறையிலே அவர்களுடன் உறவாடினால் பிள்ளைகளின் சுயமதிப்பு மிக உயர்ந்த நிலைகளை அடையக்கூடிய வாய்ப்பு உண்டு. இதற்கு நேர் மாறாக, நாம் அவர்கள் மேல் வைத்திருக்கும், செலுத்தும் அன்பு ஓர் நிபந்தனையின் பேரிலே அல்லது அவர்களின் செயலின் விளைவிலே தங்கியுள்ளதென என அவர்கள் உணர்வார்களாயின், நாம் அவர்களுடன் பழகும் முறையிலே இங்கிதம் குறைந்து காணப்பட்டால், எதிலும் குறை கண்டு தண்டிக்கும் மனப்பாங்குடன் பழகுவதை அவர்கள் உணர்ந்தால் அவர்களின் சுயகணிப்பு மிகக் கீழ் நிலைகளை அடையும் சாத்தியம் உண்டு.

கட்டிளமை (adolescent) நிலையைப் பிள்ளைகள் அடைகின்ற பொழுது அவர்களுடைய நடவடிக்கைகளும், பேச்சுக்களும் பெற்றோர்களின் அரவணைப்பிலிருந்து விலகிச்செல்கிறார்கள் என்று எண்ண வைக்கவே செய்யும். அவர்களுடைய நாட்டம், செயல்கள் யாவும் ஒத்த வயதுடையோரைச் சார்ந்திருப்பது புலனாகும். பெற்றோர்கட்கு இது ஒரு சங்கடம் நிறைந்த காலம். சில பெற்றோர் இரண்டில் ஒன்றான அதீத நடவடிக்கை எடுத்து விடுவார்கள். ஒன்று விரக்தியின் எல்லைக்குச் சென்று 'எக்கேடாவது கெட்டுப்போ' என்று தம் கடமையிலிருந்து விலகுவது. மற்றையது மனக்குமுறலைச் சொல்லாலும், செயலாலும் உணர்த்தி நிலைமையை மேலும் சிக்கலாக்கி விடும் இயலாமை நிலை. பிள்ளைகளின் முழுமையான ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்கு என்றும் இருந்து கொண்டேயிருக்கும். அது குறிப்பிட்ட ஒரு காலத்தில் மறைந்து விடுகிறது என்று கருதுவது பிழையானது; ஆதாரமற்ற முடிவு. எத்தகைய உடை உடுக்கலாம்? எங்கு போகலாம்? எவருடன் பழகலாம் போன்ற பல கேள்விகட்கு அவனது ஒத்த வயதுடையோரின் கருத்துக்களே அங்கீகாரம் பெறுகிறது என்பது உண்மையே. ஆனால் பிள்ளையின் அடிமட்ட வினாக்கள் பலவற்றிற்கு பெற்றோர்களே தெளிவான விடைகளைத் தர முடியும். பிள்ளைகள் வீட்டில் இருக்கின்ற நேரம் அதிகம். எனவே அந்த நேரத்தில் பெற்றோர்கள் தங்கள் பங்கினைச் சீரிய முறையிலே செய்ய முடியும்.

பிள்ளையின் சுயமதிப்பை உயர்த்துவதிலும் அதன் விளைவாகப் பாடசாலைப் பெறுபேறுகளை அதிகரிப்பதிலும் பெற்றோரின் பங்கின் முக்கியத்துவத்தைப் புறூக்கோவர் (Brookover) தன் ஆராய்ச்சி மூலம் எடுத்துக் காட்டியுள்ளார். அவரின் ஆய்வின் முடிவுப்படி பாடசாலைப் பெறுபேறுகளில் தற்காலிகமாகக் குறைந்த நிலையிலுள்ள மாணவர்கள், பாடசாலை ஆசிரியரின் விஷேட பயிற்சி முறையாலோ, அல்லது வெளியேயிருந்து வந்த ஒரு வல்லுனர் தரக்கூடிய சிறப்பான பயிற்சி முறையாலோ அடையக்கூடிய பெறுபேறுகளிலும் பார்க்க, அனுசரணையுடைய பெற்றோர் செய்யக்கூடிய மேலதிக பயிற்சி, அப்பிள்ளைகளினது சுய மதிப்பினை அதிகரித்து அதன் விளைவாகப் பாட-சாலைப் பெறுபேறுகளையும் அதிகரித்ததைக் காண முடியும்.

எமக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள உரையாடல்களில் மறைந்து கிடக்கும் விதானத்தை எம்மிற் பலர் உணர்ந்து கொள்வதில்லை. எமது

படிப்பகம்

www.padippakam.com



பாரம்பரியமான உரையாடல் யுக்திகளைச் சற்றே கையாள வேண்டும் என்பதைப் பலர் இன்னும் புரிந்து கொள்வதில்லை. "உன்னால் முடியும் தம்பி" என்பது பாலச்சந்தர் படத்திற்கு ஏற்ற தலைப்பாக அமையலாம். ஆனால் இன்றைய இளைஞர்கட்கு உகந்ததல்ல. "இன்னும் முனைந்தாயாயின் இதிலும் சிறந்த பெறுபேறு பெறுவாய்" என்று எல்லை வகுப்பது ஏற்புடையதாயில்லை என்பதைப் பெற்றோர்கள் பலர் தெரிந்து கொள்ளவில்லை. இப்படிப்பட்ட ஒரு கூற்று பிள்ளைகளை உற்சாகப்படுத்தும் என்று நாம் கருதிய காலம் போய் விட்டது. எல்லை வரையறை செய்து பேசுவது சுயமாக இயங்கமுனையும் அதே சமயத்தில் பெற்றோரைச் சார்ந்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள பிள்ளைகளுக்கு, சுயமதிப்பினைப் பாதிக்கின்ற கூற்றாக அமையும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு பாடசாலைகளிலிருந்து வருகின்ற தேர்ச்சி அறிக்கைகளைப் பற்றிக் கூற வேண்டும். பிள்ளையில் காணக்கூடிய சிறப்புக்களையே சிலாகித்துக் கூறுவார்கள். மேலும் முயல்கிறார்கள் என்று கூறுவார்களே அன்றி முயற்சி எடுக்க வேணும் என்று கூறமாட்டார்கள்.

குடும்ப வாழ்க்கையிலே பெற்றோர்கள் ஏற்கின்ற பங்கு பிள்ளைகளின் சுயமதிப்பின் விருத்திக்குக் காரணமாய் அமையுமெனக் கருதப்படுகிறது. குடும்பத்திலே தாய் ஆதிக்கம் செலுத்துபவராகவும், தந்தை எதற்கும் இயைந்து போகக்கூடியவராகவும் அமையுமாயின் அக்குடும்பத்துப் பெண் பிள்ளைகளின் சுயமதிப்பு விருத்திக்கு அனுசரணையாகவும் ஆண்பிள்ளைகளின் சுயமதிப்பு விருத்திக்கு அனுசரணையற்றதாகவும் அமையும். குடும்பத்திலே தந்தை ஏகாதிபதியாக ஆட்சி நடத்த, தாய் அவரது முடிபுகளை செயற்படுத்துபவராக அமையுமிடத்து அங்கு ஆண் பிள்ளைகளின் சுயமதிப்பு விருத்திக்கு அனுசரணையானதும், பெண்பிள்ளையின் சுயமதிப்பு விருத்திக்கு அனுசரணையற்றதுமான சூழ்நிலை அமையும். எனவே, இரு பெற்றோர்களும் குடும்பம் நடத்துவதில் சமபங்கேற்று, ஜனநாயக ரீதியாகக் கலந்துரையாடிப் பொறுப்புணர்வுடன் நடப்பார்களானால் இருவகைப் பிள்ளைகளும் நல்ல சுயமதிப்பினை உருவாக்கும் ஆற்றல் பெறுவர். பெற்றோர்கள் எந்த நேரமும் யுத்த காண்டம் நிகழ்த்துபவராயும், தம் பிரச்சனைகளைப் பிள்ளைகள் மேல் சாதிப்பவர்களாயும், எதேச்சாதி காரணமான முறையிலே பிள்ளைகளுடன் கலந்துரையாடுபவர்களாயும் இருப்பார்களாயின், பிள்ளைகள் உயர்வான சுயமதிப்பினை விருத்தி செய்யமாட்டார்கள்.

உயர்ந்த சுயமதிப்பு பாடசாலைப் பெறுபேறுகளுக்கு அவசியம் இல்லை என்பது ஆய்வாளர்களின் முடிவு. ஆனால் சிறந்த பாடசாலைப் பெறுபேறுகளைப் பெறுவதற்கு உயர்ந்த சுயமதிப்பு இன்றியமையாதது. எனவே எம் பிள்ளைகள் உயர்ந்த சுயமதிப்பினை உருவாக்க பெற்றோர்கள் உதவ வேண்டியது தலையாய கடன் ஆகும்.

(மார்ச் 1992)

படிப்பகம்

www.padippakam.com



# பிள்ளை வளர்ப்பு
# அணுகுமுறை; கட்டுப்பாடு

"இதென்னடா வில்லங்கம் பிடிச்ச வேலை. நான் என்ரை பிள்ளைக்கு அடிச்சால் அவைக்கு என்னவாம்". இது ஒரு தாயாரின் வேதனைக் குரல்.

மகன் பாடசாலையில், தனக்குத் தாய் அடித்ததாகக் கூறி விட்டான். உடனே பாடசாலை நிர்வாகம் பிள்ளைகட்கு உதவும் (Child Aid) பிரிவுக்கு அறிவிக்கு முன்னர், தாயாருடன் ஒருமுறை இதுபற்றிக் கதைக்க விழைந்தது. தாயினது விரக்தி அவரது விடையிலே பிரதிபலித்தது.

இன்னொரு வேடிக்கையான சம்பவம். பெண்குழந்தை ஒன்று பாடசாலையில் சேர்ந்து இரண்டு வாரங்களே ஆயின. ஒரு காலில் பிளாஸ்திரி போட்டபடி பிள்ளை பாடசாலை செல்கிறது. அதைக் கண்ணுற்ற ஆசிரியை "காலில் என்ன காயம்" என்கிறா. பிள்ளைக்கு ஒன்றும் விளங்கவில்லை. பேந்தப் பேந்த முழிக்கிறது. "அம்மா அடித்தாவா" என்கிறார் ஆசிரியை. பிள்ளை ஆம் எனத் தலையாட்டுகிறது. "அம்மா எப்போதும் அடிப்பாவா?" . "எப்பவும் அடிப்பா, எனக்கும் அடிப்பா; தம்பிக்கும் அடிப்பா" எனத் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் ஜமாய்த்துவிட்டது பிள்ளை. பாடசாலை நிர்வாகம் தன் கடமையைச் செய்தது. பிள்ளை துணைபுரி அனுகூலருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் வீடு சென்று தாயாருடன் கதைத்த பொழுதே உண்மை தெரிந்தது.

பிள்ளையின் காலில் ஒரு சொறி. அது பிறாண்டி விட்டது. இரத்தம் கசியத் தொடங்க, அதனைக் கண்ணுற்ற தாயார் ஒரு பிளாஸ்திரியைப் போட்டு விட்டார். நிகழ்ச்சி பாடசாலையிலே திசைமாறி விட்டது. வீட்டிலே தமிழில் வினாவிய பொழுது அதுவே உண்மையெனப் பிள்ளையும் ஒப்புக் கொண்டது. பின் ஏன் பாடசாலையில் அப்படிச் சொன்னாய் என்ற பொழுதே, பிள்ளையின் அவலநிலை தெரிந்தது. "எனக்கு ஆங்கிலத்தில் சொல்ல முடியவில்லை, முழித்தேன். அப்பொழுது ஆசிரியை "அம்மா அடித்தாவா" என்று கேட்டார். 'ஆம்' என்றேன் என்றது. பிள்ளையோ கனடாவிற்குப் புதிது. அதற்குத் தெரியுமா நிலைமை இப்படிச் சிக்கலாகும் என்று.

வேறொரு சுவையான சம்பவம். யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றோருடன் ரொறன்ரோ வந்த ஒரு சிறுவன் கனிஷ்ட பாடசாலையில் சேர்க்கப்பட்டான். அவனது கால்களில் நிறையத் தழும்புகள். ஆசிரியருக்கு இதனைக் கண்டதும் நெஞ்சில் "குறு குறு" உணர்வு. மாணவனுக்கோ ஆங்கிலம் அட்சரம் கூடத் தெரியாது மதிப்பீடு செய்யப் போனவரை ஆசிரியர் இரகசியமாக அழைத்து 'கொஞ்சம் நன்றாகத் தமிழில் பேசி உண்மையை அறியுங்கோ; பையனுக்குக் கால் முழுக்க சிகரெட்டாலே சுட்ட அடையாளம் நிறைய உண்டு" என அழாத குறையாக வேண்டினார். சிறுவன் "சத்தியமாக இது காலில் புண் வந்து மாறிய அடையாளம்" என்கிறார். ஆசிரியருக்கோ நம்பிக்கை சிறிதும் ஏற்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பின்னர் சிறுவனின் தந்தை அதை விபரமாக விளக்கினார். அவர் வசித்து வந்த கிராமமோ சற்றுப் பின் தங்கியது. இன்றைய சூழ்நிலையிலே அது முற்றாகவே வைத்தய வசதி அற்று இருக்கின்றது. இதனால் காலில் வந்த புண்களுக்கு நல்ல வைத்தியம் செய்யாமையால் அவை சீழ்பட்டு மாறிய பொழுது வந்த தழும்புகள், சுட்டதால் ஏற்பட்ட வடுக்கள் போன்று காட்சி தந்தன.

இவை யாவற்றையும் இங்கு சொல்வதற்குரிய காரணம், பொதுவாகவே இங்குள்ள பாடசாலை ஆசிரியர்கள் நம்மவர்கள் பிள்ளைகளைக் கூடுதலாகத் தண்டிப்பவர்கள் எனக் கருதுகிறார்கள் என்பதற்காகவே.
1985ம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட பிள்ளைகளினதும் குடும்பத்தினதும் சேவை பற்றிய சட்ட மூலத்தின் பிரிவு 1 (C.F.S.A. 68(1)) பிள்ளைகளை நிந்தித்தல் எத்தகையது எனத் தெளிவாக விளக்குகிறது.
"ஒரு பிள்ளைக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் அப்பிள்ளையின் உடலிலே பாதிப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்தாலோ அல்லது பிள்ளையினைப் பராமரிப்பதிலும் சீராட்டுவதிலும் பாதுகாப்பதிலும் தவறிழைத்தாலோ அப்பிள்ளையினை நிந்தித்த குற்றத்திற்கு ஆளாகின்றனர்.

தங்கள் நாட்டு வைத்தியத்தில் அதீத நம்பிக்கை வைத்தமையால், நாட்டு வைத்தியரின் போதனைப்படி நடந்து தமது குழந்தையை இழந்ததோடல்லாமல், குற்றவாளிகளாகக் கணிக்கப்பட்டு கோட்டில் நிறுத்தப்பட்ட அட்றிக்கியன் தம்பதிகள் பற்றிய வழக்கினைப் பலர் அறிந்திருக்கலாம். அன்புக் குழந்தையை இழந்த கொடுமையோடு போஷாக்கு உணவு கொடுக்காமலேயே அதனைக் கொன்றனர் என்ற வசையுடன் கோடேறி நின்று மூன்று வருடச் சித்திரவதையுடன் சென்ற மாதமே (சித்தரை 1992) வழக்குத் தள்ளப்பட்டமையால் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர் அத்தம்பதிகள். இங்கு சட்டம் கொடியது. தனது கரங்களால் தவறு செய்பவர்களை அமுக்க அது ஆயத்தமாக நிற்கிறது.

ஒரு சமயம் சிறுவன் ஒருவன் பாடசாலையில் மாணவர்களை முரட்டுத் தனமாக அடிக்கிறான். ஆசிரியர்களைக் கூட விட்டுவைக்கிறான் இல்லை என்ற முறையீடு. நிர்வாகம் பெற்றோரை அழைத்து அது பற்றிக் கலந்துரையாடுகிறது. "இவனுக்கு நன்றாகச் சாப்பாடு கொடுப்பதால் தான் இப்படி நடக்கிறான். இனிமேல் காலையில் சாப்பாடு கொடுக்காமலேயே பாடசாலைக்கு அனுப்ப வேணும்" என்பது அவர்கள் கூற்று. இது போதும்! வேறு வினை வேண்டாமே!

இது அந்த நேரத்தில் தமது இயலாமையால் வந்த ஆத்திரத்தின் பிரதிபலிப்பே இக்கூற்று என்று எமக்கும் தெரியும். பிள்ளைகளைப் பட்டினி போடும் அளவிற்கு கொடியவர்களாக நம் பெற்றோர் என்றுமே இருந்ததில்லை. பாடசாலை நிர்வாகம் அதனை ஏற்க வேண்டுமே! இரண்டும் இரண்டும் நான்கு என்றே கணக்குப் போடுவார்கள் அவர்கள். பிள்ளையை நிந்தித்தலின் ஒரு அங்கமாகவே மனஉணர்வில் பாதிப்பு ஏற்படுத்துதல் கணிக்கப்படுகிறது. அப்பாதிப்பின் பிரதிபலிப்பு எப்படி இருக்குமென்பதைச் சட்டமூலம் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. தீவிரமான விசாரம், உற்சாகமின்மை, ஆக்ரோஷ நடத்தை, ஒதுங்கியிருத்தல், தனக்கே ஊறு விளைவித்தல் ஆகியவை உணர்வுப் பாதிப்பின் பிரதிபலிப்புக்களே.

படிப்பகம்

www.padippakam.com



எனவே, பாடசாலை நிர்வாகம் பிள்ளை நிந்தனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என ஐயமறத் தீர்மானிப்பதில் குறை ஒன்றும் காணமுடியாது.

இங்கே நாம் ஒன்றினைப் பூரணமாக உணர வேண்டும். இங்குள்ள நம்மில் பலர் உளப்பாங்கிலே, உணர்வின் பிரதிபலிப்பிலே, சிந்தனையின் வெளிப்பாட்டிலே செய்முறையின் நெறிகளிலே இன்னும் ஈழத் தமிழர்களாகவே உள்ளோம். ஆனால் எம் குழந்தைகளோ மிக வேக கதியிலே கனடியர்களாக மாறிவிட்டனர். அது அவர்கள் குற்றமல்ல. வாழும் சூழல் அப்படி. அவர்கள் உணர்விலே, மனப்போக்கிலே, பாவனையிலே ஏற்படக்கூடிய மாற்றம், எமக்கும் அவர்கட்டுமிடையே பாரதூரமான கலாசார இடைவெளியினை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே பல விஷயங்களிலே, சிறப்பாக ஒழுங்காட்சி சம்பந்தப்பட்டவற்றிலே எமது அணுகுமுறையில் மாற்றம் வேண்டும்! புதுமை வேண்டும்! கட்டுப்பாடு வேண்டும். ஆனால் கண்ணியமாகச் செய்ய வேண்டும். கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும், ஆனால் நிந்திக்கக் கூடாது. உணர்விலே உறைக்கக்கூடியவாறு சொல்ல வேண்டும். ஆனால் உணர்வு எழுச்சியிலே பாதிப்பு ஏற்படுத்தக்கூடாது.

சங்கடமாயிருக்கிறதா? ஆம்! எமது பாரம்பரியம் பிள்ளைகளுக்கு மாத்திரமல்லாது, பேரப்பிள்ளைகளுக்குமாகச் சேர்த்து வைக்கும் பாரம்பரியம்.

தன்னை ஒறுத்துத் தன் பிள்ளைகளின் வாழ்வில் இன்பம் காணும் கள்ளமில்லா வெள்ளை உள்ளம் எமது உள்ளம்.

தன் வாழ்விலே தன்னால் சாதிக்க முடியாததைத் தன் பிள்ளையாயினும் சாதிக்க வேண்டுமெனக் கங்கணம் கட்டி நின்று ஆரம்பமுதலே அந்த உணர்வினைப் பாலுடன் சேர்த்து ஊட்டும் பேராசை நிறைந்து நிற்கும் மனம் எமது மனம்.

தியாகம் அளப்பரியதாக இருக்கின்ற பொழுது எதிர்பார்ப்புக்களும் நிறையவே இருக்கும். இது இயல்பு. ஆனால் வில்லங்கம்! நாம் இப்போ வாழ்கின்ற நாடு? இவை யாவற்றையும் இன்றைய சமுதாயம் எதிர்பார்க்கின்றதா?

நமது உளப்பாங்கிலே ஓர் அத்தியாவசியமான மாற்றத்தை ஏற்படுத்துதல் அவசியமாகிறது. தந்தை என்கிற அந்தஸ்து, அதிகாரி என்ற நிலையிலிருந்து ஆலோசகர் நிலைக்கு உயர்ந்தோ, தாழ்ந்தோ மாறுதல் அவசியம். நண்பனாய் நின்று நாளாந்தம் பிள்ளையின் அனுபவங்களைப் பகிர்ந்து தேவையான வழிகாட்டலை நாசூக்காக நடைமுறைப்படுத்தலுக்குப் போதிய சாதுரியம், பொறுமை, அவகாசம் தேவை.

அடிப்பதாலோ, வன்சொல் இயம்புவதாலோ சாதிக்கமுடியாதவையை வேறுபல வழிகளில் சாதிக்கமுடியும்.

குழந்தைப் பராயத்திலே மிகவும் ஒட்டியுறவாடும் தந்தைமார் பிள்ளைகள் கட்டிளமைப் பருவம் வந்ததும் ஒரு இடைவெளியினை அதிக குடும்பங்களில் ஏற்படுத்திக் கொள்கின்றனர். இது வரவேற்கத்தக்கதல்ல. எமது நாட்டில் இருப்பதிலும், இங்குதான் பிள்ளைகளுக்கு உணர்வெழுச்சி ஆதரவு மிக அதிகம் தேவை. பெற்றோர் அதனை வழங்குதல் அவசியம். தினசரி பிள்ளைகளுடன் கலந்துரையாடுதல் அவசியமானது. அதே சமயம் அவர்களுடைய உணர்வுகளுக்கும் மதிப்பளித்து அவர்களையும்

படிப்பகம்

www.padippakam.com



சமமானவர்களாகப் பாவித்து நடப்போமானால், சொல்லினாலேயே அவர்களை நல்ல வழிப்படுத்த முடியும்.

இதைவிடுத்து கோழி செட்டைக்குள் குஞ்சை வைப்பது போன்று நாம் வாழ முனைந்தால் “என் பிள்ளை” “என் பிள்ளை” என அன்பு சொரிந்து அதன் பிரதிபலனாகச் சில உரிமைகளைப் பெறமுனைந்து பெற்றார் என்கிற தகமையை முழுமையாக நிலைநாட்ட விழைந்து நிற்போமாயின் இது ஒரு வில்லங்கம் பிடிச்ச வேலையாகவே அமையும்.

(மே 1992)

படிப்பகம்

www.padippakam.com



# பிள்ளைகளும் கெட்டவார்த்தைகளும்

ஏப்ரல் மாதம் பிற்பகுதியில் பத்திரிகைகளில் அடிபட்ட செய்தி ஒன்றினைப் பலர் வாசித்திருக்கலாம். கனடிய தொலைக்காட்சியில் கூட வந்திருக்கலாம்? (மன்னிக்கவும் நான் தொலைக்காட்சி அதிகம் பார்ப்பதில்லை.)

ஏஜாக்ஸ் கல்விச் சபைப் பாடசாலை ஒன்றிலே 9ம் தர மாணவன் ஒருவன் உப அதிபரைக் கெட்ட வார்த்தையால் பேசிவிட்டான் என்பதனால் அவனைப் பாடசாலை நிர்வாகம் இருபது நாட்கள் பாடசாலையிலிருந்து தற்காலிகமாக விலக்கியது. கல்விச் சபையும் அதனை அங்கீகரித்தது. வார்த்தை ஒன்றும் அவ்வளவு மோசமானது (?) அல்ல. ஏனெனில் அவை நாளாந்தம் பலமுறை நம் காதுகளில் வந்து விழுகின்ற F..... A....... ஆகியவை.

இந்தச் செய்தியைப் படித்ததும், பாடசாலை ஒன்றிலே சிரேஷ்ட கல்வி ஆலோசகராகக் கடமையாற்றும் ஒரு நண்பர் சில, வருடங்களுக்கு முன் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொன்னார். சிவந்த வதனம் அனலெனத் தகிக்க, நீல நயனம் உக்கிரம் தெறிக்க, பூசிய உதடுகள் புழுப்போல் துடிக்க ஒரு மாணவனைக் கையோடு இழுத்து வந்தார் ஓர் ஆசிரியை. "இம் மாணவன் வகுப்பிலே கெட்ட வார்த்தை பேசுகிறான்; பலமுறை சொல்லியும் திருந்தவில்லை. எனவே வகுப்பிலே அவனை வைத்திருக்க முடியாது. இனி நீ பாடு அவன் பாடு" என்று கூறி, வந்த வழியே உடனடியாகத் திரும்பி விட்டார். நண்பருக்குச் சரியான கோபம். இந்த நாவலனை நல்லுலகிற்கு ஈந்த தந்தையைச் சாடுவோம் எனத் தொலைபேசி எண்ணைச் சுழற்றினார் அவர்.

நல்ல காலம் (?) தந்தை உடனேயே கிடைத்து விட்டார். நண்பர் விசயத்தைச் சொன்னார். வந்ததே தந்தைக்குக் கோபம் மகன் மீது. கோபம் என்றால் அது உக்கிரமான கோபம். அட்சர சுத்தமாக உள்ள அத்தனை F........ B......., F........ R....... என அரிச்சுவடி ஒழுங்கிலே அத்தனை சொற்களையும் கூறி மகனைத் திட்டி, நான் பாடசாலையிலே இப்படியான சொற்களைப் பாவிக்காதே எனப் பன்னிப் பன்னி சொல்லி அனுப்பினேனே. என்ன பிரயோசனம்! எனவே F....... A....... வீட்டுக்கு அனுப்பி வையுங்கள் என்றார். ஆசிரிய நண்பர் மலைத்துப் போய் தலையில் கையை வைத்துக் கொண்டிருந்தார். பாம்பின் கால் பாம்பே அறியுமே. எனவே என்ன நடந்திருக்குமெனத் தனயன் உணர்ந்து விட்டான். அவன், நண்பரைத் தேற்றி இனிமேல் தான் ஒழுங்காக நடப்பதாகக் கூறினான். நடந்தானா என்பது வேறு கதை.

இந்த நிகழ்ச்சியில் ஊரறிந்த உண்மை ஒன்று பொதிந்துள்ளது. கட்டிலில் தொடங்கி தொட்டில் வரை சென்று கடைசியில் ஏறும்வரை இந்தக் கெட்ட வார்த்தைகள் இன்றைய சமுதாயத்தினர் சர்வ சாதாரணமாகவே உபயோகிக்கின்றனர். அதனை யாரும் விகற்பமாகப் பார்ப்பதில்லை. பல

படிப்பகம்

www.padippakam.com



பெற்றோர்கள் வீடுகளில் அவதானிப்பதில்லை. பாடசாலைகளில் ஆசிரியர்கள் சட்டை செய்வதில்லை. எனவே தப்பு எங்கே இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

எமது நாட்டிலே இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற முடியுமா? சில வக்கிரங்கள் இருக்கவே செய்வார்கள். அவர்கள் தம் விரக்தியை மலசலகூட இலக்கியங்கள் மூலம் அல்லது அநாமதேயக் கடிதம் மூலம் நிவர்த்திப்பார்கள். அல்லது ஒதுக்குப் புறமாக அசிரியருக்கு ஒரு பட்டமளிப்பு விழா எடுப்பார்கள். இங்கோ சுதந்திரம். எங்கும் சுதந்திரம்! எதிலும் சுதந்திரம்! சுலபமாகச் சுதந்திரம் கிடைக்கும் பொழுது அதன் பூரண தாற்ப்பரியம் விளங்குவதில்லை. அதன் விளைவு சுதந்திரம் நிந்தனையாகிறது. துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

ஏஜாக்ஸ் மாணவன் பிறையன் சிகாறிஸிற்குக் கொடுக்கப்பட்ட தண்டனை பற்றி இரண்டு விதமான கருத்தினிற்கு இடமிருக்கவில்லை. ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகை நடத்திய கருத்துக் கணக்கெடுப்பின்படி 85 வீதம் ஆனோர் தண்டனை சரியானது எனக் கூறியுள்ளனர். வாசகர்கள் பலர் எழுதிய கடிதங்களும் அதற்குச் சாதகமாகவே அமைந்தன. தண்டிப்பது பழிவாங்குவதற்கல்ல, நல்வழிப்படுத்துவற்கே என்ற தத்துவப்படி பார்த்தால் இங்கு மாணவன் தண்டிக்கப்பட்டது எதற்காக? உப அதிபரைக் கெட்ட வார்த்தையால் பேசியதற்காகவே? இதற்கு இளந்தலைமுறையினரிடம் புரையோடிக்கிடக்கும் இந்தச் சீரழிந்த நிலைக்கு யார் காரணம்? எது காரணம்?

அரசு/அமைச்சு திட்டவட்டமாகப் பாடசாலைக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு பற்றியும் அதை மீறுபவர்கள் எப்படித் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் விளக்கமான ஒரு சுற்று நிருபம் அனுப்பியதாகத் தெரியவில்லை. வெவ்வேறு கல்விச் சபையின் அறிவுடைமையைப் பொறுத்தே தண்டனை வழங்கப்படுவதால், ஒரே சீரான தண்டனை முறை இல்லாதது ஒரு பாரிய குறைபாடே. இதனை அமைச்சு நிவர்த்தி செய்ய வேண்டும். பாடசாலை, பல்வேறு காலசாரங்களின் சங்கமம். எனவே வெவ்வேறு கலாசாரங்களிலே காணப்படும் பலதரப்பட்ட கெட்டதும் அங்கீகாரம் பெறாததுமான நடைமுறைகள், சொற்பிரயோகங்கள் மாணவர்களை வந்தடைய வாய்ப்பிருக்கிறது. பொதுவாகவே நல்ல இயல்புகள் சுலபமாகத் தங்குவதில்லை. கெட்ட இயல்புகள் தங்குவது மிகச் சுலபம். "Values are caught, not taught" என்பார்கள். நற்பண்புகள் கற்பித்து வருவவைல்ல. தாமாகவே பற்றிக் கொள்வன. இது அவரவர் மனப்பான்மையும், வளர்ப்பு விதத்திலேயும் தங்கியுள்ளது. பாடசாலை மாணவர்கள் நல் இயல்புகள் பெறுவதற்குரிய தளம் அமைத்துத் தருதல் அவசியம். ஆனால் பல பாடசாலைகளில் என்ன நடக்கின்றது? "பாலர் வகுப்புத் தொடக்கம் இத்தகைய சொல்ல வேண்டாத அசுத்தச் சொற்களே பிள்ளைகளின் மொழிப் பிரவாகத்திலே மலிந்து கிடக்கின்றது" என்கிறார் ரொட் குட்மன். ஆசிரியர்கள் இதனைச் சட்டை செய்வதில்லை. ஆசிரியர்களும் பிள்ளைகளை இத்தகைய வார்த்தைகளால் திட்டுவதாகச் சில மாணவர்கள் குறை கூறுகிறார்கள். இவை அதீத நிகழ்ச்சிகளாக அமையலாம். எது எப்படியாயினும் மாணவர் ஒழுக்கம் பேணுதலில் பாடசாலை தன் கடமையைச் செய்ததா என்பதே பதிலிறுக்க வேண்டிய கேள்வி.

வீடு என்று பார்க்கும் பொழுது, இங்கு உள்ள வீட்டினை நமது நாட்டில் உள்ளதுடன் ஒப்பிட முடியாது. அங்கு உள்ள பாதுகாப்பு இங்கு இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



சாதாரணமாக பெற்றோருடன் பிள்ளைகள் உறவாடும் நேரம் மிகக் குறைவு. இரு பெற்றோர்களும் வேலை பார்க்கின்ற காரணத்தால் பெரும்பாலும் பிள்ளைகள் பெற்றோர் பாதுகாப்பு இல்லாமலே வாழ வேண்டியுள்ளது. இதன் காரணமாக பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஒத்த வயதுடையோர் தாக்கம் மிகவும் அதிகமாக இருக்கும். பத்திரிகைகளிலே, செய்தித் துணுக்குகள், விளையாட்டுப் பகுதி போன்றவற்றிலே அநாகரிகமான கெட்ட வார்த்தைகள் அதிகம் காணப்படுகின்றன. இவ்வார்த்தைகள் இல்லாவிட்டால் தொலைக்காட்சி இல்லை என்ற இக்கட்டான நிலையும் உள்ளது என்றே கருதலாம். அனேகமான மாணவர்களிடையே சாதாரண சம்பாஷணையின் போது இவ்வார்த்தைகள் அபரிதமாக உபயோகப்படுவதைக் காணமுடியும்.

ஜூன் 15ந் தேதியிடப்பட்ட தமிழ் நாட்டிலே பிரசுரிக்கப்படும் Sports Starல் வந்த செய்தி ஒன்றினை இங்கே குறிப்பிடல் வேண்டும். இங்கிலாந்திற்கும், பாக்கிஸ்தானிற்கும் இடையே அண்மையில் நடைபெற்ற ஒரு கிரிக்கட் போட்டியிலே இங்கிலாந்தைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் இயன் போத்தம், பாக்கிஸ்தான் காப்டன் யேவட் மியன்டாட்டைக் கெட்ட வார்த்தைகளால் பேசியுள்ளார். இதனைப் பற்றி எழுதிய Sports Star, "அவ்வார்த்தைகளை இங்கே பிரசுரித்தால், இளைய தலைமுறை கிரிக்கட் வீரர்களைப் பாழ்படுத்தி விடுவோம். எனவே பிரசுரிக்கவில்லை" என்று கண்ணியமாகக் கூறுகிறது. இதே மனப்பான்மையை இங்குள்ள பத்திரிகைகள் கடைப்பிடிக்கின்றனவா? நடந்தவற்றை நடந்தபடியே (?) தருவதுதான் பத்திரிகைத் தர்மம் என்பதைச் சாக்காக வைத்து அத்தனை கெட்ட வார்த்தைகளையும் துப்பி விடுவார்களே!

பொதுவாக இளம் தலைமுறையினர் வாரத்திலே குறைந்தது 17 மணித்தியாலங்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலும், 14 மணித்தியாலங்கள் ரேடியோ கேட்பதிலும், 11 மணித்தியாலங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்கள் கேட்பதிலும் கழிக்கிறார்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே இச் சாதனைகள் மாணவர் மனப்பாங்கில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பதை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

மற்றவர்கள் எக்கேடு கெட்டால் எமக்கென்ன? எமது கலாசாரம், எமது பிள்ளைகள் பற்றிய சிந்தனையே எமக்கு முக்கியம். "எமது பிள்ளைகளும் சோடை போனவர்கள் அல்ல என்பதை சில நிகழ்வுகள் வலியுறுத்துகின்றன. பல பாடசாலைகளிலே எம்மின மாணவர்கள் பிழையான முன்மாதிரிகளைச் (models) தேர்ந்தெடுத்து அவர்கள் போன்று நடை உடை பாவனை போலப் பிரதி பண்ணுவது மனத்திற்குத் துன்பம் தரும் நிகழ்ச்சிகள். சிலவருடங்களுக்கு முன்னர் இங்குள்ள இளைஞர்களின் நடத்தை பற்றிக் கீழ்த்தரமாக யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகை ஒன்று எழுதியுள்ளது. அதனை அப்படியே இங்குள்ள 'தாயகம்' பத்திரிகை பிரசுரித்திருந்த பொழுது நான் அதனைக் கண்டித்து எழுதியிருந்தேன். ஆனால் இன்றைய நிலையை வைத்துப் பார்க்கின்ற பொழுது நம் பெற்றோர்கள் மிகவும் கண்காணிப்புடன் இருக்காவிட்டால் பின்னர் வருந்த வேண்டிய நிலைமை வந்து விடுமோ என அஞ்சுகிறேன்.

மாணவன் ஒருவன் பாடசாலையிலே மற்றைய மாணவர்களுடன் சண்டையிடுகிறான் எனக் குறை கூறப்பட நான் அம்மாணவனுடன் கதைத்தேன். "அடிவாங்கிக் கொண்டு வீட்டிற்கு வரவேண்டாம், அடித்தால்

படிப்பகம்

www.padippakam.com



திருப்பி அடியென அண்ணா சொன்னார்" என வீர முழக்கமிட்டான் அம் மாணவன். இது சரிபோலச் சிலருக்குத் தெரியும். ஆனால் அவன் செயல் வீட்டில் ஆதரவு உள்ள பொழுது பலப்படுகிறது. (reinforce). எனவே காலகதியிலே அவன் ஒரு கொடுமை மனப்பான்மை (bully) உடையவனாக மாறும் வாய்ப்பு இருக்கவே செய்யும். நாம் என்றுமே சட்டத்திற்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட்டு வாழ்ந்துவரும் இனம். எனவே, இத்தகைய முரட்டுத்தனத்தை வளர்க்க அடிகோல வேண்டாம். சாத்வீகமான மாணவர்களாகவே அவர்கள் வாழப்பழகட்டும்.

மனிதன் எப்பொழுதும் ஒத்த அந்தஸ்துடையோருடனேயோ அல்லது ஒத்த குணாதிசயங்கள் உடையோருடனோ அல்லது ஒத்த தேவைகள் ஆசைகள் உடைய இன்னொருவருடனேயோ நேய பாவத்துடன் உறவாடுகிறான்.

எனவே பிள்ளைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இளம் பராயத்தினரைப் பொறுத்த மட்டிலே சம வயதுடையவரின் அங்கீகாரம் இன்றியமையாத ஒரு நிகழ்வு ஆகும். சம வயதுடையோரின் அங்கீகாரம் ஒரு இளைஞனின் வளர்ச்சி, தனித்துவம், பொறுப்புணர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றிற்கு வழிகோலுகிறது. அதே சமயத்தில் ஒவ்வொரு இளைஞனதும் தனியே முடிவெடுக்கும் ஆற்றலைச் சமவயதுடையோர் அங்கீகாரம் பாதிக்கவே செய்கிறது. என்ன உடை உடுக்கலாம்? என்ன வினைத்திறனில் ஈடுபடலாம்? எத்தகைய சங்கீதம் கேட்கலாம்? எந்த விதத்தில் சம்பாஷிக்கலாம்? என்கின்ற யாவற்றிலும் சமவயதுடையோரின் தாக்கம் மிகவும் உன்னிப்பாக இருக்கவே செய்யும். சமவயதுடையோரின் தாக்கம் மிகவும் சாதுரியமான முறையில் ஆழமாகப் பதிந்து விடுகிறது. மாற்றம் எங்ஙனம் ஏற்படுகின்றது என்பது புலனாகாமலேயே மாற்றம் வந்து விடுகிறது. இது தவிர வேறு மாற்று வழிகள் உண்டென்பதை உணராமலேயே அவர்களுடன் உடன்பாடு காணும் ஏமாந்த நிலை வருவதைத் தவிர்ப்பது அவ்வளவு சாத்தியமல்ல.

இத்தகைய சமவயதுடையோரால் ஏற்படக்கூடிய தாக்கத்தின் வலுவினை நாம் உணர்வோமாயின் எம் குழந்தைகட்கு நாம் ஆற்ற வேண்டிய உதவியின் பரிமாணத்தை உணர முடியும். எமது பிள்ளைகளின் நண்பர்கள் பற்றிய ஒரு கணிப்பினை நாம் எடுத்தே தீர வேண்டும். அவர்கள் நடை, உடை, பாவனையை அவதானித்து ஆரம்பத்திலேயே எமது அங்கீகாரத்தை அன்பாக, ஆனால் உறுதியாகப் பிள்ளைகளிடம் சொல்லியே தீர வேண்டும். முளையிலேயே கிள்ளி விடுதல் நன்றல்லவா?

(ஜூலை 1992)

படிப்பகம்

www.padippakam.com



# கிழக்கின் இலட்சியங்களும் மேற்கின் விழுமியங்களும்

இந்நாட்டுக் கல்வி பற்றி, ரொறன்ரோ பல்கலைக்கழக முன்னைநாள் பேராசிரியர் லோறன்ஸ் ஸ்கொற் என்பவர் ரொறன்ரோ ஸ்ராரில் எழுதிய கட்டுரை ஒன்றில் ஆசியாவில் விளங்கிவரும் கல்வி முறையினை மிகவும் சிலாகித்து எழுதியுள்ளார்.

அங்கு நிலவிவரும் கல்வி முறை மாணவர்களிடம் அதிக அளவில் எதிர்பார்க்கிறது. எனவே மாணவர்கள் அதிக நேரம் கடினமாக உழைக்கிறார்கள். இதனால் கூடிய அறிவைப் பெறுகின்றனர். ஆசிய மாணவர்கள், கனடா மாணவர்களிலும் பார்க்க, கல்வியில் ஈட்டக் கூடிய சாதனையைப் பெரிதும் மதிக்கிறார்கள். ஆசிய மக்கள் வாழ்க்கையை வெறுமனே உரிமையாகக் கொள்வதில்லை. சவால் ஆகவே ஏற்கின்றனர். எனவே அங்கு ஆசிரியர் கற்றல் எனும் தொழிற்பாட்டிலே முதன்மையாக நிற்கிறார். ஆசிரியர் வகுப்பினுள் முழுமையாகக் கற்பிக்கின்ற படியால் கல்வி உற்சாகமானதாகவும், உயிர்ப்புடையதாகவும் அமைகின்றது. அவர்களின் பாரம்பரியம் அறிவுக்கும், ஆற்றலுக்கும் தலை வணங்குவதால், ஆசிரியரின் தலைமையை மதிக்கிறார்கள். அவரும் கல்வியூட்டல் எனும் தன் பணியினைக் கண்ணியமாகச் சளையாது செய்கிறார்.

ஆசிரியர் மைய, வகுப்புமைய, முயற்சிமையக் கல்வியைப் புறக்கணித்த கனடா, பிள்ளைமைய, செயற்றிறன் - அக்கறைமையக் கல்வியையே தேர்ந்துள்ளது. இதனால் ஆசிரியரின் பணியிலேயே ஒரு பாரதூரமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆசிரியர் இங்கு ஒரு தலைவராக அமைய மாட்டார். அவர் வெறுமனே ஒரு தொடக்குநராக அல்லது ஊக்குவிப்பவராக மாத்திரமே இயங்குவார்.

பிள்ளைமையக் கல்வி என்பது மாணவர்களின் சுய கௌரவமும் அவன் காட்டும் ஈடுபாடுமே கல்வியின் பிரதான பரிமாணம் என்ற கருத்தின் அடிப்படையிலே 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே தோன்றிற்று.

பிள்ளைமையக் கல்வியானது மாணவனின் சுய கௌரவத்தை நிலைநிறுத்த முனைவதால் அவன் சித்தியடையா விட்டால் அல்லது குறைந்த பெறுபேறுகளைப் பெற்றால் அதற்குரிய காரணகர்த்தா ஆசிரியராகவே கொள்கிறது. "பிள்ளைகள் எப்பொழுதும் சுறுசுறுப்புடன் தொழிற்படுவார்கள். எதையும் துருவி ஆராயும் பண்புடையவர். எள்ளளவும் சந்தேகமில்லாமல் எதனையும் தெரிய வேண்டும் என்ற இயல்பு கொண்டவர். பார்த்த எதனையும் மனத்தில் பதிய வைக்கும் தன்மையுள்ளவர். எனவே அவர்களின் குறைந்த பெறுபேறுகட்குக் காரணம் ஒன்றே ஒன்றாகவே அமைய வேண்டும். ஆசிரியர்! அவரது அக்கறையின்மை, ஏதேச்சாதிகார மனப்பான்மை, அல்லது

படிப்பகம்

www.padippakam.com



மாணவர்களைக் கற்றலில் ஈடுபடச் செய்ய முடியாத இயலாமை அல்லது அவர்கட்குச் சலிப்பினை ஏற்படுத்தும் அவரது அணுகுமுறை போன்ற பல குறைபாடுகள் காரணமாக அமையலாம். எனவே. கனடாவின் இன்றைய கல்வி முறையிலே மாணவனின் சித்தியின்மை கௌரவமாகவே திரைபோடப்பட்டு மறைக்கப்பட்டு விடுகிறது. தேர்ச்சி அறிக்கைகள் விதந்துரைப்பவையாகவும், உற்சாகமூட்டுபவையாகவும், மாணவனின் சுய கௌரவத்தை நிலைநிறுத்துவனவாகவும் அமைகின்றன.

ஓர் ஆச்சரிய(!)கரமான உண்மையை நாம் இங்கு உணர வேண்டும். எமது நாட்டிலேயும் பிள்ளைமையக் கல்வி உள்ளது என்று நாம் கழுதையாகக் கத்தினாலும் இங்குள்ள கல்வி வல்லுநர்கள் அதைக் கண்டு கொள்வதில்லை. அங்கு நடைபெறுவது ஆசிரியர் மையக் கல்வி என்பதே அவர்கள் கணிப்பு. அப்படி அவர்கள் கருதுவதற்கும் இடமுண்டு. ஏன் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

ஜோன் ஸ்ராக்கவுஸ் எனும் பத்திரிகை நிருபர் டெல்கியில் உள்ள ஒரு ஆரம்பப் பாடசாலை பற்றி விதந்துரைக்கிறார். அங்கு கீழைத்தேய எண்ணவளங்களும், மேலைத்தேய விழுமியங்களும் நிலைநாட்டப்பட்டுள்ளன என்கிறார். இக்கரைக்கு அக்கரைப் பச்சையாகத் தெரிகிறது.

எமது நாட்டுக் கல்வி முறையிலே சில முரண்பாடுகள் இருக்கவே செய்கின்றன.

சென்ற ஐந்து வருடங்களிலே நான் வடக்கு யோர்க்கினை சார்ந்த 1000 மாணவர்களுடனாவது உரையாடியிருப்பேன். அவர்கள் நம் நாட்டிலிருந்து இங்கு அண்மையில் வந்தவர்கள். அவர்களிடம் நான் கேட்ட ஒரு கேள்வி, “நீர் பெரியவனாக வந்ததும் என்ன தொழில் செய்ய விரும்புகிறீர்” என்பது. குறைந்தது 950 பேர்களாவது டாக்டர்கள் அல்லது என்சினியர் என்றே கூறினார்கள். இவை இரண்டுமே தொழில்கள். ஏனைய யாவும் வெறும் வேலைகளே என்பது தொன்று தொட்டு எமது உணர்விலே கலந்துவிட்ட மனவருத்தமான உண்மை. இன்னும் பரபரப்பானதும், மூளைக்குச் சவால் விடக்கூடியதுமான பல தொழில்கள் உள்ளன என்பதை நாம் உணரவில்லை அல்லது உணரும் நிலையிலில்லை. எனவே அங்கிருந்து இங்கு வந்த உடனே பல பிள்ளைகட்கு இந்த மனோநிலை இருக்கிறது. காலப்போக்கிலே அவர்கள் உளப்பாங்கிலே மாற்றம் ஏற்படுவதைக் காண முடியும். இதற்குரிய அடிப்படைக் காரணம், பிள்ளையினுடைய படிப்புச் சம்பந்தமான முடிவினை அதிக பெற்றோர் தாமாகவே எடுப்பதாகும். தம்மால் முடியாததைத் தம் பிள்ளைகளைக் கொண்டு சாதிக்கும் திட்ட முறை (Parental Projection) ஆரம்பக் கல்வியிலிருந்தே ஆரம்பமாகி விடுகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி பற்றி வழிகாட்டலாமே அன்றி நெறிப்படுத்தல் ஆகாது.

இந் நாட்டிலே பாடசாலைகளிலே ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளனர். அவர்கள் மாணவர் தகைமை அறிந்து அதற்கேற்ப வழிப்படுத்துகிறார்கள். பிள்ளைகளும் தமக்கு ஏற்ற மனத்தில் லயிக்கும் நெறியினைத் தெரிந்து உற்சாகமுடன் கற்க முனைகின்றனர்.

எம் நாட்டுக் கல்வித் திட்டத்திலே கண்ட இன்னொரு குறை, மிக்க ஆரம்பத்திலேயே மாணவர்கள் கற்கை நெறியைத் தெரிந்து கொள்வதே.

படிப்பகம்

www.padippakam.com



இதனாலே 10ம் தரம் சித்தியடைந்ததும் 11ம் தரம் வந்த உடனேயே ஒரு குறிப்பிட்ட கற்கை நெறியினை மாணவன் தேர்ந்து கொள்கிறான். அதைச்சார்ந்த நான்கு பாடங்களை மட்டுமே கற்று, பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலே பல்கலைக்கழகத்திற்குக் குறிப்பிட்ட ஒரு துறையினில் பயிற்சி பெறச் செல்கிறான். இதன் விளைவாக அவன் கல்வி கற்ற நான்கு பாடங்களில் மாத்திரம் ஆழமானதாகின்றதே தவிர பொதுவான அறிவுத் திறன் விசாலமானதாக அமையும் சாத்தியம் ஏற்படுவதில்லை. இந்நாட்டிலே அந்த நிலை ஏற்படுவதில்லை. பல்கலைக்கழகம் புகும் பொழுதே மாணவர் தம் கற்கை நெறிகளைத் தெரிவு செய்கிறார்கள். பல்கலைக்கழகம் புகுவதற்குத் தேவையான மிகக் குறைந்த 30 விஷேட சித்திகளில் 6 மாத்திரமே 9ம், 10ம் வகுப்புக்களில் பெற முடியும். மிகுதி 24ங்கினையும் 11ம், 12ம், 13ம் தரங்களிலே பெறவேண்டும். இவ்வகுப்புக்களிலே பல பாடங்களைக் கற்பதனால் அவர்களுடைய அறிவு விசாலமானதாக அமைவதுடன் படு வேகமாக முன்னேறி வருகின்ற விஞ்ஞானயுகத்திலே, மாணவர் பின் தள்ளப்படாமல் நிமிர்ந்து நின்று எத்தகைய சவாலையும் உள்ளத் திண்மையுடன் எதிர்க்கும் ஆற்றல் பெறுகின்றனர்.

மாணவர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் பெருமளவில் ஊக்குவிக்கப்படுகிறது. இந்த ஆதரவும், உதவிக் கரமும் மாணவர்களைத் துணிகரமான முயற்சிகளிலே ஈடுபடச் செய்கின்றது. பேராதரவும் பெறுகின்றது. எறின் ரீச்சவட் (Erin Teachout) எனும் 13 வயது நிரம்பிய பெண்பிள்ளை செய்த ஆராய்ச்சி பற்றி செய்தி ரொறன்ரோ ஸ்ராரில் வந்த பொழுது பலர் வாயைப் பிளந்திருப்பீர்கள். விஞ்ஞானப் பாடத்திலே இம் மாணவி செய்த ஆய்வு, கருத்தடை உறைகள் சம்பந்தமானது. அவற்றின் வலு, அளவு, ஒழுகும் தன்மை பற்றிய ஆய்வு செய்து போட்டியில் முதற் பரிசினையும் தட்டிச் சென்று விட்டார். எமது சமூகத்திலே இத்தனை துணிகரமான ஆராய்ச்சி ஒன்றை ஓர் பெண்பிள்ளை செய்ய முடியுமா? செய்வதென்ன? அப்படிச் சிந்தித்தே தவறு என எத்தனை வசவுகள் அவரை வந்தடைந்திருக்கும். அப்பிள்ளையின் தாயார் இவ்விடயத்தில் தான் பூரண ஆதரவு மகளுக்குத் தந்ததாகக் கூறுகிறார். நம்மவர்கள் என்றால் பிள்ளைக்கு குறைந்தது இரண்டு சாத்து சாத்தியிருப்பார்கள்.

இத்தகைய கல்வி முறை மாணவரின் சுய கௌரவத்தைப் பேணுவதுடன் அவர்கள் தன்னம்பிக்கை உடையோராகவும், திடசங்கற்பம் கொண்டோராகவும் வளர்வதற்கு உடந்தையாக இந்நாட்டின் பாடசாலை நிர்வாக நடைமுறைகளில் சில நிகழ்வுகள் அமைகின்றன. ஒவ்வொரு மாணவனும் பல்கலைக்கழகம் புகுவதற்கு முன்னர் மூன்று முறை பட்டமளிப்பு விழாவில் பங்கு கொள்கிறார்கள். ஒன்று ஆரம்பப் பாடசாலையை விட்டு நீங்கி கனிஷ்ட பாட-சாலைக்கு செல்கையில், 6ந் தர முடிவில். இரண்டாவது கனிஷ்ட பாடசாலை செல்லும் பொழுது 8ந் தர முடிவில். இறுதியாக 13ந் தரம் முடிந்து பல்கலைக்கழகம் புகும் பொழுது. ஒவ்வொரு முறையும் பட்டமளிப்பு மிகவும் பாங்காக நடைபெறுகிறது. மாணவன் தான் ஏதோ சாதித்து விட்டதாக உணர்கிறான். சமூகத்திலே தனக்கு ஓர் அந்தஸ்து கிடைத்து விட்டது என எண்ணுகின்றான். அதன் தன்னம்பிக்கை சிறுகச் சிறுக வலுப் பெறுவதை அவன் நடை உடை பாவனையிலிருந்தே கணிக்க முடியும். இந்த மாற்றத்திற்குக் பாடசாலை அதிபர், ஆசிரியர் பெரும் துணை நிற்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



எனது மகள், போலின் ஆரம்பப் பாடசாலையில் ஆறாம் தரம் முடித்து கனிஷ்ட பாடசாலைக்குச் செல்லவுள்ளா. அவரின் பட்டமளிப்பிற்கு நான் சென்றிருந்தேன். பாடசாலை அதிபரின் செயல் என்னைத் திகைக்க வைத்தது. பட்டம் பெற்ற ஒவ்வொரு மாணவரையும் மேடையின் கரையிலே கையைப் பிடித்தபடி குறைந்தது மூன்று நிமிஷமாவது உரையாடினார். என்னடா இந்த மனுஷன் செய்கிறான் என என் மனம் அங்கலாய்த்தது. எமது நாட்டிலே இப்படி ஒரு அதிபர் செய்திருப்பாரா? ஆறாம் தரம்தானே? இது ஒரு படிப்பா? என எண்ணுவோம். ஆனால் இந்த அதிபரின் செயல் மாணவர் மத்தியிலே எத்தனை தன்னம்பிக்கையை ஏற்படுத்தியிருக்க முடியும் என்பதை நாம் உணர வேண்டும்.

அதே அதிபர் சம்பந்தமான இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கு கூறுவது, மாணவர் சம்பந்தமான அவர்கள் ஈடுபாட்டினைக் காட்டவே. பட்டமளிப்பு விழாவிலே அந்த அதிபருடன் நான் பேசும் பொழுது எனது மகளிற்கு விடுமுறையில் நடைபெறவுள்ள அறுவைச் சிகிச்சை பற்றிக் கூறினேன். அவரும் தனது வாழ்த்துக்களைக் கூறிச் சென்று விட்டார். அறுவைச் சிகிச்சை நடைபெற்று சில தினங்களிலே அவர் வைத்திய சாலையுடன் தொடர்பு கொண்டு மகளின் நிலைபற்றிக் கேட்டுள்ளார். அவர்கள் நாம் வீடு சென்று விட்டதாகச் சொன்னதும் வீட்டில் என்னோடு தொடர்பு கொண்டு மகளின் நலன் பற்றி வினவினார். கடைசியில் தான் விசாரித்ததாக என் மகளுக்குத் தெரிவிக்கக் கோரினார். இத்தகைய செயல்கள் மாணவர்களுக்குத் தம் சுயமதிப்பை எந்த அளவினுக்கு உயர்த்தும் என நாம் உணர வேண்டும்.

எனது மருமகன் குவீன் விக்ரோறியா ஆரம்ப பாடசாலையில் வருகிற வருடம் நான்காம் வகுப்பிலே படிக்கவுள்ளார். அவரின் வகுப்பாசிரியர் விடுமுறைக்கு அலாஸ்கா சென்றுள்ளார். அங்கிருந்து அவர்கள் தன் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் கடிதம் எழுதியதுடன், அவர்கள் விடுமுறையை எங்கனம் கழிக்கிறார்கள் என வினவியும் உள்ளார். ஆசிரியர் அதிபர்களுடைய இத்தகைய ஈடுபாடு மாணவரின் முழுமையான ஆளுமையை விருத்தி செய்ய உதவுவதோடு ஆசிரியரை மாதிரியாக ஏற்க மாணவர் உள்ளத்தினில் ஓர் அவாவினை ஏற்படுத்தவே செய்யும்.

நல்லவற்றை மாத்திரம் சொல்லிக் கொண்டே இருக்கப்படாது. எனவே கூடாத ஒன்றையும் இங்கே கூற வேண்டும். கனடாவில் பல்கலைக்கழகம் புகும் மாணவர்களில் 40 வீதமானோர் குறிப்பிட்ட காலத்தில் பட்டம் பெறுவதில்லை. ஏறக்குறைய 24 சத வீதமானோர் முதல் வருடத்திலேயே பட்டப் படிப்பினை விட்டு விடுகின்றனர். இதற்குரிய காரணங்கள் என்ன? பல கூறப்படலாம். என்னைப் பொறுத்த மட்டிலே இதற்கு ஒரேயொரு காரணம் இந்நாட்டில் நடைபெறும் கல்வி முறை.

வெறுமனே பாடசாலை மட்டத்திலே மதிப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையிலே மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதால், பல்கலைக்கழகக் கல்விக்கு அருகதை அற்ற பலர் அங்கு சென்று விடுகின்றனர். அவர்களால் பல்கலைக்கழகத்தின் எதிர்பார்ப்புகட்கு ஈடு கொடுக்க முடிவதில்லை. எனவே விட்டு விலகி விடுகின்றனர். மாகாண ரீதியாகவோ அல்லது தேசிய ரீதியாகவோ ஒரு "தகைமைகாண் பரீட்சை நடத்தி அதன் அடிப்படையிலே மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு

படிப்பகம்

www.padippakam.com



செய்யப்படுவார்களானால் இத்தகைய நிலை ஏற்படமாட்டாது என்றே எண்ணுகிறேன்.

தகுதியுடையோர் மாத்திரமே தெரிவு செய்யப்படுவர். பாடசாலை மட்டத்திலே ஒரு பரீட்சை நடத்தப்படுகிறதே எனச் சிலர் கேட்கலாம். நாமே படிப்பித்து நாமே பரீட்சித்தால் நாம் எதைப் படிக்கிறோமோ அதற்குள்ளேதான் பரீட்சை. குறிப்பிட்ட ஒரு பாட நெறியிலே அருகருகேயுள்ள இரு பாடசாலைகட்குள்ளேயே கற்பிக்கப்பட்ட பாட அளவுகளிலே அதிக வேற்றுமை காணுதல் சாத்தியம்.

எமது நாட்டிலே ஒரு பொதுப் பரீட்சை வைக்கப்படுகின்ற காரணத்தினாலே திறமை உள்ளோர் (தரப்படுத்த முன்னர்) தெரிவு செய்யப்படுகின்றனர். எனவே அங்கு சென்ற பின்னர் விட்டு விலகுகின்றவர்கள் தொகை மிகக் குறைவு.

இங்கு பதின்மூன்றாந் தரத்திலே பெறுகின்ற கல்வி அறிவுக்கும் பல்கலைக்கழக முதல் வருடத்திலே கற்பிக்கப்படுவதற்குமிடையே கடின நிலை வேறுபாடு மிக அதிகம். எனவே மாணவரின் பெயர்ச்சி (Transition) சுமுகமாக அமைவதில்லை. எமது நாட்டிலே உயர்தர வகுப்பிற்கும் பல்கலைக்கழக முதல் வருடத்திற்குமிடையே கடின நிலையில் பாரதூரமான வித்தியாசமில்லாமையால் மாணவரின் பெயர்ச்சி சுமுகமாகவே உள்ளது.

பொதுப் பரீட்சை வைப்பதிலும் ஒரு இக்கட்டு இருக்கவே செய்கிறது. குறிப்பிட்ட ஒரு பாட நெறியினைப் போதிக்கும் எல்லா ஆசிரியர்களும் ஒரே ஆற்றல் உள்ளவர்களாக அமைவதில்லை. இதனால் பொதுப் பரீட்சையிலே ஆசிரியரின் குறைபாட்டினால் மாணவர் பாதிக்கக்கூடிய நிலை ஏற்படலாம். இதைத் தவிர்க்க ஒரு புதிய கலாசாரம் இங்கும் ஆரம்பமாகலாம்.

அதுதான் பிரத்தியேக பாட போதனை! இது தேவையா?

(செப்டம்பர் 1992)

படிப்பகம்

www.padippakam.com



# பாலியற் கல்வியிற் பெற்றோர் பங்கு

'கருச்சிதைவு ஏற்படுத்திக் கொள்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள் அப்பா?"

'அது கொடுமையானது, ஒரு உயிரைக் கொல்வது, தர்மம் அல்ல. அங்கீகரிக்க முடியாதது'.

'அக் கர்ப்பம் ஒரு கற்பழிப்பின் விளைவாக ஏற்பட்டிருப்பின்?'

'கற்பழிக்கப்பட்டதும் பொலிஸில் அறிவித்திருந்தால், கர்ப்பம் தரித்த ஆரம்பத்திலேயே தடுக்கப்பட்டிருக்கலாம். கர்ப்பத்தை அழிப்பதற்காக ஏற்கனவே கற்பழிக்கப்பட்டதாகக் கூறுவதை அனுமதிக்க முடியாது. அண்மையில் ஹம்பர் கல்லூரி மாணவி கற்பழிக்கப்பட்டதாக பொய் கூறினாரே. அது உண்மை அல்ல என பொலிஸ் கண்டுபிடித்துவிட்டதே'

'அதனைப் பொலிஸ் எப்படி அப்பா தெரிந்து கொள்ள முடியும்?'

மருத்துவப் பரிசோதனையில் கண்டுகொண்டிருக்கலாம்......'

'சரி, சரி கொஞ்சம் பொறுங்கோ, யோனி மென்சவ்வு, சுக்கிலம், அது, இது என்று சொல்கிறீர்களே, எனக்கு ஒரு இழவும் விளங்கவில்லையே'.

மேற்படி சம்பாஷணை, அண்மையில் பத்து வயதுடைய ஒரு பெண் குழந்தைக்கும் தந்தைக்கும் இடையே நடைபெற்றது. பிள்ளையினது வினாக்களுக்குத் தந்தை தந்த விடையில் தெளிவு இருந்து அதேசமயம் கொச்சையில்லாமல் அமையுமாயின் பிள்ளை புரிந்து கொள்கின்ற அதேசமயத்தில், அருவருப்பும் அடைய மாட்டாது. இங்கு தந்தை விளக்கும் சாதுரியம், தகுந்த சொற்களைத் தெரிவு செய்யும் லாவகம் பிள்ளையின் பாலியல் அறிவை வளர்ப்பதற்கு மிகவும் அவசியமாகிறது. பொதுவாகவே பிள்ளைகளுடன் பாலியல் பற்றிக் கலந்துரையாடுதல் பெற்றோர்கட்கு மிகவும் கடினமான ஒரு விஷயமே. இந்த நிலைமை மாறவேண்டும்; பெற்றோர்கள் பிள்ளைகளின் பாலியல் கல்வியில் தீவிரம் காட்ட வேண்டும் என 'ரொறன்ரோ திட்டமிட்ட பெற்றோர்' அமைப்பின் துணை இயக்குநர் ஜீன் ஆன்லௌறி (Jean Ann Lowry) எடுத்துக் கூறியுள்ளார். அவரது கணிப்பின்படி 15 சதவீதமான பிள்ளைகள் மாத்திரமே பெற்றோரிடமிருந்து ஓரளவேனும் பாலியல் அறிவினைப் பெறுகின்றனர். பெரும்பாலோர் நண்பர்கள் மூலம் அல்லது சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி மூலமாகவே இதனைப் பெறுகின்றனர். இதனால் ஏற்படும் விளைவுகள்? பிள்ளைகள் பெறுகின்ற தகவல்கள் பெரும்பாலும் பிழையானவையாகவும் அவர்களின் நன்னடத்தைக்கும் நல் வாழ்வினுக்கும் குந்தகம் விளைவிப்பவையாகவுமே அமைகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



ஒன்ராறியோவிலே 'கட்டிளமைப் (adolescent) பராயத்திலே கர்ப்பம் தரித்தல் வீதம் பற்றி ஆய்வு நடத்திய டாக்டர் மொறீன் ஒற்ரென் (Dr. Maureen Orten) 'பாலியல் கல்வி கற்பிப்பதற்குப் பெற்றோர்கள் கூச்சப்படுவதால் அறியாமையை வளர்க்கவே உதவுகிறார்கள்' என்கிறார். மேலும் பாடசாலைகளிலே பாலியல் கல்வி கற்பிக்க ஆரம்பித்ததன் விளைவாக இளம்பராயத்தில் கர்ப்பம் தரித்தல் பெரும் அளவிலே குறைந்து விட்டது' என்கிறார்.

எம் கலாசாரத்திலே பிள்ளைகளுடன் பாலியல் பற்றிக் கலந்துரையாடுவது கற்பனைக்கெட்டாத ஒன்றுதான். எனினும் எமது சிந்தனையில், செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன என்பது உண்மையே. நாம் கொச்சை என்று பிள்ளைகள் முன் கதைக்க விரும்பாத பல சமாச்சாரங்களை பாக்கியராஜ் வெள்ளித் திரையிலும், பாலகுமாரன், சுஜாதா, புஷ்பா தங்கத்துரை போன்ற பிரபல எழுத்தாளர்கள் 'யதார்த்தம்' என்ற போர்வையிலும் நயமான வார்த்தைகளாக்கி விட்டார்களே!

எனவே நாமும் காலத்தின் கோலமென்று மாறவேண்டிய அவசியத்தில் உள்ளோம். சில புள்ளி விபரங்களை நாம் அவதானிப்போமாயின் எமது பிள்ளைகளை எதிர் நோக்கியுள்ள கொடுமையின் தாற்பரியத்தை உணர்வதோடு, பாலியல் கல்வியின் அத்தியாவசியத்தையும் உணர முடியும்.

சென்ற இரு வருடங்களிலே 'எயிட்ஸ்' நோயுடைய இளம் பராயத்தினர் தொகை ஐக்கிய அமெரிக்காவிலே இரட்டித்துள்ளது. 15 வயதுக்கும் 24 வயதுக்குமிடையே உள்ளவர்களின் இறப்பிற்குரிய காரணிகளில் எயிட்ஸ் ஆறாவது இடத்தினைப் பிடித்துள்ளது. பொதுவாகவே எயிட்ஸ் தொற்று ஏற்பட்டுப் பின் நோய் அறிகுறி தோன்றுவதற்குரிய நோய் அரும்பு காலம் 7 வருடங்கள் ஆகும். எனவே இந் நோயினை உடைய பலருக்கு, இளம் பராயத்திலே தொற்று ஏற்பட்டிருக்க வேண்டுமெனக் கணிக்கப்படுகிறது.

பாலியல் தொழிற்பாடு சாதாரணமாக 15 வயது 3 மாதத்திலேயே ஆரம்பிக்கப்படுமெனக் கணிக்கப்பட்ட போதும் 11 வயதினை அடைந்த பல சிறு பெண்கள் கருச்சிதைவினை ஏற்படுத்துதல் இதற்குரிய காரணத்தை வேறு எங்கேயோ தேட வைக்கின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி ஒவ்வொரு பத்து இளம் சிறார்களில் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார். கனடாவினைப் பொறுத்தமட்டிலே, பெண்களில் நான்குக்கு ஒருவரும், ஆண்களில் எட்டில் ஒரு வரும் பதினெட்டு வயதினை அடையுமுன்னர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். ஆகவே எமது பிள்ளைகள் எத்தகைய ஒரு பயங்கர நிலையிலே உள்ளனர் என்பதை உணர வேண்டும். நான் உங்களைப் பயப்படுத்தவில்லை. நிலைமையின் தன்மையை உணரவேண்டுகின்றேன். 'இது என்ன பயங்கரம்? இங்கு ஏன் வந்தோம்' எனக் கவலையுற வேண்டாம். அங்கும் நிலைமை இதுவே. 1992ல் இந்தியாவிலே இதுவரை தெரியவந்த 143 கற்பழிப்புச் சம்பவங்களில் 54 சதவீதமானோர் 15 வயதிற்குட்பட்ட இள நங்கைகளே. 'இந்தியா ருடே'யின் கூற்றுப்படி இந்தியாவிலே பால்ய கற்பழித்தல் மிகப் பயங்கரமாயிருந்த போதிலும் அது அதிகம் வெளிவருவதில்லை. தமது குடும்பத்திற்கே பெரிய அவமானம் இது எனப் பெற்றோர்கள் கருதுவது ஒருபுறம் இருக்க, குற்றவாளிகள் சுலபமாகத்

படிப்பகம்

www.padippakam.com



தண்டனையிலிருந்து தப்பிவிடுகின்ற துர்ப்பாக்கியம் இன்னொரு காரணமாகிறது. பிரபல இந்திய சமூகவியல் அறிஞர்களின் கருத்துப்படி, வெளிவருகின்ற ஒவ்வொரு சிறார் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் வெளிவராதது நூறு ஆகும்.

'அபர்ணா' எனும் 5 வயதுக் குழந்தைக்கு நடந்ததை 'இந்தியா ருடே' விபரிக்கின்றது. அக்குழந்தை இரவிலே திடுமெனப் பயந்து அலறிக் கொண்டு, நடுங்கியபடி எழுந்திருக்கும். உறக்கத்திலே சிறுநீர் விடும். பெற்றோர் இதனைப் பெரிதாக எடுக்கவில்லை. நிலைமை இன்னும் மோசமானது. பிள்ளை பாடசாலை செல்ல மறுத்து விட்டது. இதன் பின்னரே பெற்றோர் பிள்ளையை உளவியலறிஞரிடம் இட்டுச் சென்றனர். பலமுறை சென்ற பின்னரே உண்மை வெளிவந்தது. 'என்னைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்லும் காரோட்டி எனக்கு நோகப் பண்ணுகிறார்' என்றது அந்த மழலை. 'பாடசாலைக்குப் போகும் போதும், வரும்போதும் அவர் என் 'பான்ரீசை' கழற்றிவிட்டு எனக்கு ஊறுவிளைவிக்கிறார். நான் அதைத் தடுத்தாலோ பெற்றோருக்குச் சொன்னாலோ அவர் என்னைக் கொன்று விடுவார்'. அபர்ணாவின் பெற்றோருக்கு இது பயங்கர இடியானது. ஏனெனில் அவர்கள் இதுநாள்வரை அந்தக் காரோட்டியைத் தம் குடும்பத்தில் ஒருவராகவே கணித்து நடத்தினர். நன்றி எந்த ரூபத்தில் வருகிறது பார்த்தீர்களா? இது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை? பொதுவாகவே இத்தகைய கொடுமையைத் தயை தாட்சண்யம் இல்லாமல் இழைப்போர்களில் 80-90சத வீதத்தினர் அப்பிள்ளைகளுக்குப் பரிச்சயமானோரே.

கனடாவில் எப்படி?

35% - 40% - தந்தை, சகோதரன், மாற்றாந்தந்தை, பேரனார், தாயின் காதலன்; 45%- 50%- குழந்தை பராமரிப்பவர், அயல் வீட்டவர், நண்பன், குடும்ப நண்பன்; 10%-15%- அன்னியர்கள்.

பெற்றோர்களின் தலையாய கடமை, பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகாமல் தடுப்பதற்கு அவர்கட்கு வழிவகுத்துக் கொடுத்தலே ஆகும். பிள்ளைகட்கு துஷ்பிரயோகியனது செயல்களிலும் சமிக்ஞைகளிலும் நல்லவை எவை, கெட்டவை எவை என வேறுபடுத்தத் தெரியவேண்டும். துஷ்பிரயோகிகள், பிள்ளைகள் அன்பினுக்கு அங்கலாய்ப்பதைத் தமக்குச் சாதகமாக்கி விடுகிறார்கள். பெற்றோர்கள் இருவருமே வேலை பார்க்கின்ற பொழுது, பிள்ளையுடனே அளவளாவவோ அது வேண்டுகின்ற அரவணைப்பைத் தேவையான அளவு தரவோ சிலருக்கு முடியாது போய்விடலாம். இதனை ஒரு கொடியவன் தனக்கு சாதகமாக்கிக் கொள்கிறான். அவனது சீராட்டலையும் அரவணைப்பினையும் ஆலிங்கனத்தையும் குழந்தை அன்பின் வெளிப்பாடே எனத் தப்புக் கணக்குப் போட்டு விடுகிறது. அவனிடம் தன்னை அர்ப்பணிக்கிறது. அவன் தன் உள்வேட்கையைத் தீர்த்துக் கொள்கிறான்.

இத்தகைய ஒருநிலை ஏற்படாவண்ணம் பெற்றோரினால் தடுக்க முடியும். நல்ல தொடுகை எது, கெட்ட தொடுகை எது என்ற வேறுபாட்டைக் குழந்தைக்கு பெற்றோரால்தான் இலகுவாக எடுத்துச் சொல்ல முடியும். அது பெற்றோரின் பிரதான கடமையும் ஆகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



பாலியல் கல்வி பாடசாலைகளிலே ஆசிரியர்களாலும், வீட்டிலே பெற்றோர்களாலும் மாத்திரமே பிரயோசனம் தரத்தக்க முறையிலே கற்பிக்க முடியும். வேலியே பயிரை மேய்கின்ற நிகழ்ச்சிகள் பல பாடசாலைகளிலே நடைபெறுகின்ற நிலை வருந்தத்தக்கது. எனவே பாடசாலைகளை மாத்திரம் நம்பியிராது பெற்றோர்கள் பாலியல் கல்வியில் கூடிய சிரத்தை எடுத்தல் இன்றைய கால கட்டத்திலே மிக அவசியமாகின்றது.

ஒன்ராறியோவில் பாலியல் கல்வி, தனிப்பாடமாக ஒரு பாடசாலையிலும் கற்பிக்கப்படவில்லை. ஆனால் மூன்று பாடங்களின் தொடர் நிலையாக 1976ம் ஆண்டு தொடக்கம் கற்பிக்கப்படுகின்றதாம். வழிகாட்டல், விஞ்ஞானம், விளையாட்டுக்கல்வி ஆகிய மூன்றுமே அப்பாடங்கள். இங்ஙனம் பாலியல் கல்வி கற்பிக்கப்பட்டமையால் இளம் பராயத்திலே கர்ப்பம் தரித்தல் பெருமளவில் சென்ற பத்தாண்டுகளிலே குறைந்துள்ளதாகக் கணிக்கப்படுகிறது.

திருமதி. லௌறியின் கருத்துப்படி பாலியல் சம்பந்தமாகத் தெளிவாகச் சம்பாஷித்த பெற்றோர்களின் பிள்ளைகள் பிரச்சனைகட்கு ஆளாவதில்லையாம். பிள்ளைகளுக்கு மிகச் சிறு வயதிலிருந்தே படிப்படியாகப் பாலியல் அறிவினைப் புகட்ட வேண்டுமென அவர் கருதுகிறார். தொலைக்காட்சி, பாலியல் கல்வி, சஞ்சிகைகள் முதலியவற்றின் உதவியுடன் பெற்றோர்கள், இரண்டு வயதிலேயே பிள்ளைகட்குப் பாலியல் கல்வி புகட்ட ஆரம்பிக்கலாமென்கிறார். பாலர் வகுப்பிலே பிள்ளை சேர்கின்ற பொழுதே அதற்கு பால் உறுப்புக்களின் பெயர்கள் தெரிந்திருக்க வேண்டும் என்கிறார்.

எம் குழந்தைகள் இன்று குழந்தைகள்தான். ஆனால் என்றோ ஒருநாள் பாலியல் தொடர்பு கொள்ளவே செய்வர் என்பதை நாம் மறுத்தலாகாது. எனவே இதுபற்றிய பூரண அறிவை அவர்கள் பிழையான வழிகளிலிருந்து பெற்று தம் வாழ்வினையும் அழித்து எம் நிம்மதியையும் குலைத்துச் சமுதாயத்தின் நிந்தனைக்கு ஆளாகும் நிலையினைத் தவிர்க்க வேண்டுமாயின், அவர்கட்குப் பாலியல் பற்றிய சீரான, தத்துவார்த்தமான விளக்கம் பெற வழிவகுக்க வேண்டும். இது பெற்றோர்களின் பெரும்பணி. எனவே, பெற்றோர் கூச்சம் எனும் கூட்டில் இருந்து வெளிவந்து பிள்ளைகளுடன் சுயமாகப் பாலியல் பற்றி உரையாடல் அவசியம்.

* மெற்றோ ரொறன்ரோவின் சிறார்களின் பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்குரிய விஷேட குழு 'Journey from A.M.U (All mixed up)' எனும் ஒரு சிறு அற்புதமான நாடகத்தைப் பாடசாலைப் பிள்ளைகட்கென எல்லாப் பாடசாலைகளிலும் நடத்துகிறது. சந்தர்ப்பம் வரும்போது பாருங்கள்.

(டிசம்பர் 1992)

படிப்பகம்

www.padippakam.com



# இன்றைய இளைஞர்கள் கட்டுப்பாடு அற்றவர்களா?

'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகை இப்படியான ஒரு தலைப்பிலே ஒரு கட்டுரையைச் சில மாதங்களுக்கு முன்னர் பிரசுரித்திருந்தது. இன்றைய மாணவர்கள் பற்றிய ஆசிரியர்களின் மதிப்பீடுகளும் புலம்பல்களுமே இக் கட்டுரையின் அடிப்படையாக அமைந்தது. "இன்றைய மாணவர்கள் கட்டுப்பாட்டிற்கு அடங்காத அடங்காப்பிடாரிகள் ஆகிவிட்டார்கள். அவர்களுக்கு வகுப்பிலே கேள்வி கேட்பதற்கு நாமே பழக்கினோம்; அவர்களோ அதனையேதான் முதன்மையாகக் கொண்டு விட்டார்கள். இவர்களோடு அல்லாடிக் கொண்டிருப்பதால் கற்பித்தல் பெருமளவிலே பாதிக்கப்படுகிறது".

"மாணவர்களின் நடத்தை பற்றிய பிரச்சனைகளை தீர்ப்பதிலேயே எமது நேரமும் காலமும் கணிசமான அளவிலே செலவிடப்படுகிறது. பின்னர், கற்பிப்பதற்கு எங்கே நேரம் தேடுவது."

"சிரேஷ்ட பாடசாலைகளில் வந்து சேருகின்ற பல மாணவர்களுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு என்ன என்பது முற்றாகவே தெரிந்திருக்கவில்லை. மேல் நிலையில் உள்ளவர்களை மதிப்பதற்கே தெரிந்திருக்கவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டிலே எவருமே சாதாரணர்தான். அவர்களைச் சட்டை செய்யவேண்டிய தேவையில்லை. பொதுவாக நான்கு வயதுக் குழந்தைகளே ஆசிரியர்களை எதிர்த்துப் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள்."

மேற்கூறிய கூற்றுக்கள் யாவும் விரக்தியின் எல்லையிலே நிற்கின்ற ஆசிரியர்களின் முகாரி. இன்றைய மாணவர்களின் கட்டுப்பாடற்ற முரட்டுத்தன்மை ஒரு சிலரில் மாத்திரமே உண்டு என வாதிடலாம். ஆனால் காலத்திற்குக் காலம் இந்த விகிதம் அதிகரித்துக் கொண்டு போவதை எவரும் மறுப்பதற்கில்லை. இத்தகைய அடாவடித்தனத்துக்கு பல காரணங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இன்றைய சமூகத்திலே சிறார்களுடன் பழகுகின்ற பலர் பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளனர். ஆசிரியர், அதிபர்கள், உடற்பயிற்சியாளர், விளையாட்டுத்துறைப் பயிற்றுனர்கள் ஆகியோர் இதில் அடங்குவர். வேலியே பயிரை மேய்கின்ற நிலை கணிசமான தொகையிலே உண்டு. பத்திரிகை படிப்பவர்கள் இது சம்பந்தமான வழக்கு ஒன்று நடைபெறுவதைத் தெரிந்திருப்பீர்கள். இத்தகைய கொடூரச் செயல்களுக்கு தம் பிள்ளைகள் ஆட்படுத்தப்படாமல் இருப்பதற்காகவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளை முரட்டுச் சுபாவம் உள்ளவர்களாக வளர்க்க முனைகின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. பெற்றோர்களின் வளர்ப்பு முறையினால்தான் அநேக பிள்ளைகள் முரட்டுச் சுபாவம் உள்ளவர்களாகின்றனர் என்பது உண்மையே. ஆனால் பிள்ளைகளின் நடத்தை இதற்காகவே மாற்றப்பட்டுள்ளது என்பதை

படிப்பகம்

www.padippakam.com



முற்றாக ஏற்பதற்கில்லை.

ஒற்றைப் பெற்றோர் உள்ள குடும்பங்கள் இன்னொரு காரணமாகச் சொல்லப்படுகின்றது. ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் பல்வேறு வகை. கல்யாணமாகாமலேயே பிள்ளை பெற்று தனியவனாக வாழ்பவர்கள். கல்யாணமாகிப் பிள்ளை பெற்றபின் விவாகரத்துச் செய்தவர்கள், விதவைகள். இதில் பின்னிரண்டு வகையிலேயே நம்மவர்கள் உள்ளனர். எமது சமூகத்திலே ஒற்றைப் பெற்றோர் என்கின்ற ஒரு தற்காலிக நிலை சிலருக்கு உண்டு. ஒன்றில் கணவனும் பிள்ளைகளும் இங்கு வாழ மனைவி ஈழத்திலும், அல்லது மனைவியும் பிள்ளைகளும் இங்கு வாழ கணவன் ஈழத்திலும் வாழ்வதும் உண்டு. இத்தகைய ஒற்றைப் பெற்றோர் உள்ள குடும்பங்களிலே, பெற்றோர் ஆற்ற வேண்டிய பொறுப்புக்கள் பிள்ளைகளின் தலையிலேயே வந்து வீழ்கின்ற காரணத்தால், அவர்களுடைய அந்தஸ்து கூடுகிறது. அதனோடு சேர்ந்து வந்த அதிகாரம், சிலருக்கு அகங்காரத்தையும் தந்து விடுகின்றது. இந்த நிலை வீட்டில் மாத்திரமல்லாது ஏனைய இடங்களிலும், சிறப்பாகப் பாடசாலையிலும் பிரயோகிக்கப்படுகிறது. வீட்டிலே ஏகபோக சுதந்திரங்களுடன் தன்னிச்சையாகச் செயற்பட்ட ஒருவர் பாடசாலையில் ஆசிரியரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பார் என எதிர்பார்ப்பதற்கில்லை.

அதிகமான மாணவர்கள் பாடசாலை செல்வதுடன் வேலைக்கும் செல்கிறார்கள். புள்ளிவிபரப்படி சென்ற ஆண்டிலே பாடசாலையில் முழுநேரக் கல்வி பயின்ற 15 - 19 வயதுக்குட்பட்ட மாணவர்களில் 34 சத வீதமானோர் ஏதோ ஒரு பகுதிநேர வேலையாயினும் செய்து கொண்டிருந்தனர். இப்படி வேலை பார்ப்பதால் பாடசாலை வருகின்றபொழுது சோர்வுடனும் உற்சாகம் குன்றியும் கல்வி கற்பதற்கு முழுமையாக பக்குவமடையாத மனநிலையிலுமே வருகிறார்கள். சில சமயங்களில் வீட்டு அப்பியாசங்களைக்கூட செய்ய முடியாது வருகின்றனர். கையிலே காசு அதிகமாக இருப்பதால், ஒரு அலட்சிய மனப்பான்மை எதிலேயும், எவரிலேயும் ஏற்படுகின்றது. வேலை ஒன்று கையிலே உள்ளது என்ற நினைவானது அவ்வேலையினால் கிடைத்த சில வசதிகள், கல்வி கற்பதன் அவசியத்தை சற்றுக் குறைவாகவே எடை போடவைக்கின்றது. இதன் விளைவு வக்கிரமான சில நடத்தை முறைகளாக வெளிப்படுகின்றது.

அண்மைய என் அனுபவம் ஒன்றைக் கூறுகின்றேன். ஒரு பாடசாலையில் இரவு நேரம் தமிழ் வகுப்பு நடத்துகிறேன். நான் முதல் வகுப்பிலேயே தமிழ் கற்பிப்பதற்குரிய விளக்கத்தைக் கூறினேன். தமிழ் கற்பதற்காக மாத்திரம் அல்ல, தமிழ் கலாசாரத்தைத் தெரிந்து கொள்வதே முக்கியம். எனவே ஓரளவு வகுப்பிலே கட்டுப்பாடு ஒழுங்கு கடைப்பிடிக்க முற்பட்டேன். சிலர் முதல் வகுப்புடன் தமிழ் கற்பதை நிறுத்திவிட்டார்கள். வேறுசிலர் வகுப்புத் தொடங்கிய பின்னர் வந்து விறாந்தையில் உலாவுவார்கள். இடைவேளைக்குப் பின் வெளியேறிவிடுவார்கள். ஒரு மாணவன் இவ்விதம் மூன்று நான்கு நாட்கள் வந்து போனார். பின்னர் ஒருநாள் இடைவேளைக்குப் பின் வகுப்பிற்குள்ளே வந்தார். நான் அவரை வெளியே போகுமாறு கூறினேன். அவர் தான் தமிழ் கற்க விரும்புவதாகக் கூறினார். நான் அவரை “வகுப்பில் வைத்திருக்க முடியாது; வெளியேறும்” என்றேன். அவர் ஒரு 'F' சொல்லினால் என்னை ஏசிவிட்டு ஓடிவிட்டார். வகுப்பு முடிந்ததும் வந்தார். மிகவும் வருந்தி தன்னிலை

படிப்பகம்

www.padippakam.com



விளக்கம் தந்தார். தான் வேலை செய்வதாகவும், தமிழ் கற்க மிகவும் விரும்புவதால் தான் வருவதாகவும், வந்து சேர இடைவேளை வந்து விடுவதாகவும் கூறினார். அன்றைய தினம், தான் இக் காரணத்தினால் பிந்திவர, நான் வகுப்புக்குள் விடாமையால் ஏற்பட்ட மனத் தாங்கலால் என்னை ஏசியதாகக் கூறி மன்னிப்புக் கோரினார். ஆகவே, அவரது நடத்தை அவர் வேலையால் வந்த ஆயசத்தின் பிரதிபலிப்பே ஆகும்.

பிள்ளைகளின் தனித்துவ விருத்தி பற்றி 1960, 1970 களிலும் முக்கியத்துவம் கொடுப்பதற்கு அறிஞர்கள் எடுத்த முயற்சிகளின் விளைவு தான் இன்றைய அவல நிலைக்குக் காரணமாகிறது என பல கல்வியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். பிபி (BIBBY) எனும் சமூகவியல் பேராசிரியர், மாணவர்கள் மீண்டும் 50ஆம் ஆண்டின் நிலையினுக்குத் தள்ளப்பட்டு எதேச்சிகாரமான வாழ்க்கை முறையினுக்குத் தள்ளப்படக் கூடாது என்ற போதிலும் தனிநபர் சுதந்திரம் மிகவும் எக்கச்சக்கமான முறையில் தலைதூக்கி விட்டதே என ஏக்கமுறுகிறார். அன்றைய காலகட்டத்திலே, தாமே சுயமாகச் சிந்திக்கக் கூடிய திறமையும், சுதந்திரமாக இயங்கக்கூடிய தனித்துவமும், பிரச்சனைகளைத் தன் போக்கிலேயே அணுகி சுயமாகத் தீர்க்க முனையும் உளப்பாங்கும் உடைய ஒரு மாணவனுக்குப் பாடசாலை எந்தவிதமான உதவியைச் செய்யாவிட்டாலும் அவன் விருத்தியையும் மட்டம் தட்டி வந்தது என்பது உண்மையே. ஆனால், இன்றைய மாணவர்கள் கிடைக்கின்ற இன்றைய சலுகைகளை துஷ்பிரயோகம் செய்கின்றார்களோ என ஆதங்கம் கொள்ள வைக்கிறது.

மாணவர்களைச் சுயமாகச் சிந்தித்து அவர்களது தனித்துவத்தை வளர்ப்பதில் வெகுஜன தொடர்புச் சாதனங்கள், சிறப்பாகத் தொலைக்காட்சி ஆற்றிய பங்கினைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. அதே சமயத்தில் இன்றைய மாணவர் சமூகத்தின் போக்கிற்கு உடந்தையாய் நின்ற குற்றத்திற்கும் தொலக்காட்சி பொறுப்பேற்கவே வேண்டும்.

டாக்டர் பென்ஜமின் ஸ்பொக், தொலைக்காட்சியில் காட்டப்படும் வன்முறைகள் சிறார்களை உணர்வற்ற போர் வீரர்களாக மாற்றிவிடுகின்றன என்கிறார். அவர்களுக்குக் கொலை செய்தல், குரூரமாகத் துன்புறுத்தல், வக்கிரப் பேச்சு போன்றவை சாதாரண நடைமுறைச் சம்பவங்கள் போன்றே புலப்படுகின்றன. அந்தவிதமாகவே அவர்கள் சிந்தனை செல்லத் தொடங்குகிறது. சாதரணமாக ஒரு சிறுவன் தனது 18வது வயதினை அடைய முன்னர் 18000 கொலைகளைத் தொலைக்காட்சியில் காணமுடிகிறது என்கிறார் டாக்டர் பென்ஜமின் ஸ்பொக். இதனால் கொலை ஒரு சர்வ சாதாரண நிகழ்ச்சி போல புலப்படுகிறது.

எற்றோபிக்கோ கல்விச் சபை பெற்றோருக்கான வழிகாட்டி ஒன்றினை வெளியிட்டுள்ளது. பெற்றோர், பிள்ளைகளுடன் அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்க்கும் பொழுது பலதிறப்பட்ட நல்ல விஷயங்களை அவர்களுக்குப் புகட்டலாம் என அது விளக்குகிறது. வன்முறைக் காட்சி ஒன்று வந்தபோது, வன்முறைப் பிரயோகம் இல்லாமல் அந்தப் பிரச்சனையை எங்ஙனம் தீர்க்க முடியுமெனப் பிள்ளைகளுடன் ஆராயலாம். இப்படியான வன்முறை வாழ்க்கை முறைக்கு ஏற்புடையதா? வாழ்வில் நடக்கக்கூடியதா என அவர்களுடன் ஆராயலாம். இன்னும் சில காட்சிகளை பெற்றோர் இருப்பதால், பிள்ளைகள் பார்க்காமலேயே தவிர்த்து விடவும் கூடும். இது மாத்திரமல்லாது வீட்டிலுள்ள பெரியவர்களின் நடத்தை சிறார்களின் குறை நலன்களை அதிகம் பாதித்தல்

படிப்பகம்

www.padippakam.com



ஜதார்த்தமான உண்மை. எனவே வீட்டில் உள்ளோரின் சச்சரவு, சல்லாபம், சரசம் அங்கே உள்ள சிறார்களைத் தொற்றிக்கொள்ளாதிருக்க வேண்டுமாயின் பெரியவர்கள் ஒழுங்காக, கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்வது அவசியம்.

(நவம்பர் 1993)

படிப்பகம்

www.padippakam.com



# பெற்றோரே பிள்ளைகளுக்கு முன்மாதிரி

ஒன்ராறியோ பிரதமரால் நியமிக்கப்பட்ட உடல்நலக் குழுவின் தலைவராகிய டாக்டர் டான் ஒப்போட் (Dr. Dan Offord) "எமது பெற்றோர்கள் போன்று பிள்ளைகளை வளர்ப்பதற்குரிய நேர அவகாசமோ மூல வளங்களோ இன்றைய பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லை; எனவே, இன்றைய சிறார்கள் மிகச் சுலபமாக மாறுபடும் தன்மையில் உள்ளனர்" என்கிறார்.

இன்றைய சிறார்கள் வளரும் முறை, அவர்கள் ஏற்கும் நெறிகள் பெரும்பாலும் பெற்றோர்களின் வியாக்கியானத்துக்கு ஆளாகிறதைக் காணமுடிகிறது. விரும்பியோ விரும்பாமலோ இதில் பெற்றோரும் சம்பந்தப்பட்டுள்ளனர் பொதுவாகவே ஒவ்வொரு வருடமும் குடும்பங்கள் மேலும் மேலும் பாதுகாப்பற்ற சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றன. நேரமின்மை, வசதியின்மை ஆகிய இரண்டும் குடும்ப வாழ்க்கையை அமுக்கி விடுகின்றன. இதனால் வாழ்க்கை விசாரம் நிறைந்ததாகவும், திகில் உணர்வு கொண்டதாகவும் அமைகின்றது என்கிறார் பிரபல பொருளியலறிஞர் ஜூடித் மக்வெல். எமது பிரச்சனைகள், விசாரங்கள், விரக்திகள், எமது பிள்ளைகளைப் பாதித்து அவர்கள் சமூக விருத்தியைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வது எமது தலையாய கடமை.

இன்றைய சிறார்களின் சமூக விருத்தியினைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாக விரிவுபட்ட குடும்பம் (extended family), பெற்றோர் இருவரும் வேலை பார்த்தல், குடும்பம் அடிக்கடி வதிவிடம் மாற்றுதல், தொலைக்காட்சியால் ஏற்படும் பாதிப்பு, பின்பற்றும் முன்மாதிரிகளை வெளியே இருந்து பெறுதல் ஆகியன அமைகின்றன.

அம்மம்மா, தாத்தா, சித்தி, மாமா என்று எல்லோருமே கூட்டாக வாழ்ந்த நிலை அருகிவிட்டது. "நாம் இருவர், நமக்கு..." என்ற நிலைதான் இன்று அநேக குடும்பங்களின் நிலை. குடும்பம் சிறிதாக இருக்கலாம். ஆனால் விசாரம் பெரிதாகிறது. கூட்டுக் குடும்பம் என்று பார்க்கும் பொழுது யாராவது ஒருவர், சிறப்பாக பாட்டியோ பாட்டனோ வீட்டில் இருப்பர். குழந்தைக்குத் தேவையான உளவியல் ஆதரவுக்கு அது வேறு எங்குமே செல்ல வேண்டியதில்லை. பாட்டியின் மடியில் அமர்ந்தபடி உணவு உட்கொள்ளும் பொழுதோ, அவருடன் சிறுகதைகள் பேசிக் கூடி விளையாடும் பொழுதோ, அல்லது அவரின் அரவணைப்புடன் பேசிப்பேசி உலாவரும் பொழுதோ தன்னை அறியாமலே குடும்ப நெறிகள், கோட்பாடுகள் பிள்ளையின் உள்ளத்தில் பதிந்து விடுகின்றன.

இன்றைய வாழ்க்கை முறையில் இது ஏது? மேலைநாட்டு நாகரிகம் எமது

படிப்பகம்

www.padippakam.com



வாழ்க்கை முறையிலும் ஊடுருவுவதால், பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் பிள்ளை சேர்க்கப்படும் வரை சில சமயங்களின் பாட்டன், பாட்டியின் உதவி தேவைப்படுகின்றது. அதன் பின்னர் நீ யாரோ, நான் யாரோ என்று வேறொரு பிரச்சனை ஏற்படுவதுண்டு. சிறார்கள் குழந்தை பராமரிப்பு நிலையங்களிலோ அல்லது ஆரம்பப் பாடசாலைகளிலோ சேர்ந்த சில காலத்திலேயே தாய் மொழியை மறந்து விடுகின்றனர். ஆங்கிலத்தில் பேசும் புலமை பெற்று விட்டதும், பாட்டன் பாட்டியுடன் சல்லாபிக்கும் நேரம் குறைந்து விடுகின்றது. தொடர்பு தொடர மொழி தடையாகி விடுகின்றது.

எங்கள் ஊர்களில் பெரும்பாலும் ஆண்களே தொழில் பார்ப்பதுண்டு. பெண்கள் குடும்பத்தை நிர்வகிப்பர். அல்லது பெண்கள் வேலைக்குச் சென்றாலும், நான்கு மணிக்கு வீடு வந்து விடுவார்கள். எஞ்சிய நேரத்தைப் பிள்ளைகளுடன் செலவிடுவர். இங்கு வந்துள்ள நம்மவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் எத்தனையோ? இருவரும் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். வேலைக்குப் போகும் வரும் நேரம், வேலை செய்யா விட்டாலும் பாடசாலை சென்று தனது ஆற்றலை அதிகரிக்கச் செய்ய வேண்டிய அவசியம் எனப் பல்முனைத் தாக்கங்கள். இதன் விளைவாக சிறார்களுடன் செலவிடக்கூடிய காலம் பெருமளவிலே குறைந்து விடுகின்றது.

அலுவலகத்திலே வேலை செய்த அலுப்புடன் வீட்டிலே வந்து வேலை செய்வது பல பெண்களை முழுமையாகவே களைப்படையச் செய்து விடுகின்றது. இதனால் அவர்கள் பிள்ளையோடு செலவிடும் நேரம் குறைகின்றது. இது பிள்ளைகளைப் பெருமளவிலே பாதிக்கின்றது. தங்களைப் பெற்றோர்கள் சிரத்தையுடன் கவனிக்கவில்லை என்ற குறைபாடு அவர்களை முரட்டுத்தனம் உடையவர்களாகவும், மூர்க்கர்களாகவும் ஆக்குவதுடன் பெற்றோர்களையும் துச்சமென மதிக்கும் மனப்பாங்கினையும் ஏற்படுத்துகின்றது' என்கிறார் டாக்டர் போல் ஸ்ரியின் ஹேர் என்னும் வல்லுனர்.

வசதிக்கு ஏற்ப நமது வதிவிடத்தை நாம் இங்கு மாற்றுவதுண்டு. அப்படி மாறுகின்ற பொழுது பிள்ளைகளின் சுற்றாடல், ஒத்த வயதுடைய நண்பர் குழாம் ஆகியவற்றை முற்றாகவே அப்புறப்படுத்தி விடுகின்றோம். சிறுவர்களைப் பொறுத்தமட்டிலே இதனால் பெரிய பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. புதிய சூழல் அந்நியமானது. எனவே ஆதரவு தேடி நிற்கும் குழந்தை, பிழையான நெறிகொண்ட ஒத்த வயதுடையோரைச் சரணடைந்து பின்னர் தெரியவந்ததும் தன்னைப் பிரிக்க முடியாது தவித்து அவர்களின் நெறி முறைகளுக்கும் ஆட்பட்டு விடுவதுண்டு.

பெற்றோரோடு அதிக நேரம் செலவிட முடியாத பிள்ளைகள் துர்ப்பாக்கியமான இன்னொரு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தமது குடும்பத்துடன் தொடர் பில்லாத அயலவர் ஒருவரை, முன்மாதிரியாகத் தெரிந்தெடுக்க முயல்வர். பொதுவாக அவர் ஒரு ஆசிரியராகவோ அல்லது தொலைக்காட்சியில் காணும் கதாநாயகன்/கதாநாயகியாகவோ அமையலாம். குழந்தையின் உள்ளத்திலே இந்த உருவகம், மிக இளம் வயதிலேயே உருவாகுதல் உகந்ததல்ல.

குடும்பத்துக்கு வெளியே உள்ள ஒருவரைக் குழந்தை முன்மாதிரியாகக் கொள்ளும்போது அதன் குடும்ப நெறிமுறைக் கோட்பாடுகளுக்கும், அதன் முன்மாதிரியின் நெறிமுறைக் கோட்பாடுகளுக்குமிடையில் முரண்பாடு

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுகையில் அதன் நிலை இக்கட்டாகி விடுகின்றது. மேலும், அந்த முன்மாதிரியால் குழந்தைக்கு வேண்டிய வழிகாட்டலையோ, ஊக்கத்தையோ தொடர்ந்து தரமுடியாது போய்விடவும் கூடும். இதனால் ஏற்படக்கூடிய இடைவெளி அவசரம் அவசரமாக நிரப்பப்படலாம். ஒத்த வயதுடைய இன்னொரு மாணவன் அந்த இடத்தை நிரப்பலாம். இதில் பெரும் அபாயம் ஏற்பட வாய்ப்புண்டு. இந்த நாட்டு வெள்ளை இன மக்கள் எம்முடன் சேராது ஒதுங்கி நிற்பதாகக் கழிவிரக்க நிலை ஏற்பட்டு அதன் விளைவாகக் கறுப்பு இனத்தவரை முன்மாதிரியாக நமது சிறார்களில் அதிகமானோர் எடுத்திருப்பதைப் பலர் கண்டிருக்கலாம்.

சிறுவர்கள் பெரும்பகுதி நேரத்தைத் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே செலவிடுகின்றனர். தொலைக்காட்சிகளில் பெருமளவில் வன்முறைகள், நம்ப முடியாத நிகழ்வுகள், சமூகம் அங்கீகரிக்காத நெறிமுறைகள், முன்னுக்குப் பின்னர் முரணான நடைமுறைகள் மலிந்து காணப்படுவதால் தொலைக்காட்சியிலிருந்து பிள்ளைகள் பெறக்கூடிய முன்மாதிரிகள் அபத்தமானவையாகவும், அங்கீகாரம் பெறாதவையாகவுமே அமையும். இந்தச் சந்தர்ப்பத்தில் எமது பெற்றோர்களுக்கு இந்தன் பொக்ஸ் என்னும் ஆராய்ச்சியாளர் ஒரு சஞ்சிகையில் எழுதியதைக் குறிப்பிடுவது அவசியமாகும். “ தொலைக்காட்சியில் தோன்றும் பிம்பங்கள் அசைந்து கொண்டிருக்க, அதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் சிறார்களின் கண்கள் காட்சிகளில் நிலையாகவே அமைந்திருப்பதால், தசைகள் தளர்ந்து விடுகின்றன. இதனால் பின்னர் வாசிப்பதற்கோ, பார்ப்பதற்கோ கண்மணியை நேர் நிறுத்தும் ஆற்றல் தசைகளுக்கு இல்லாமல் போய்விடுகின்றது” என்கிறார்.

குழந்தை வளர்ப்பு என்பது சுலபமானதல்ல. நாம் வாழுகின்ற இன்றைய யுகம் மனப் பிராந்தியும் அங்கலாய்ப்பும் நிறைந்தது என்பது உண்மையே. நிறையச் செய்ய வேண்டியுள்ளது. அவகாசம் குறைவாகவுள்ளது. இதனால் மனதிலே என்றுமே ஒரு நிறைவின்மை உணர்வு ஏற்படவே செய்கின்றது. வருங்காலம் நம்பிக்கை தருவதாக இல்லை. மனம் பேதலிக்கிறது. இதன் விளைவு - எமது நெறிமுறைகள், கோட்பாடுகள் ஆட்டங்காணுகின்றன. இதனால் எம்மிலும் பார்க்கப் பெருமளவிலே பாதிக்கப்படுபவர்கள் நமது இளைய தலைமுறையினரே.

எனவே எமது சிறார்களின் சமூக விருத்தியிலே எமது பங்கு என்ன என்பது பற்றி பெற்றோர்கள் சிந்திக்க வேண்டியது இன்றியமையாதது. எமது பிள்ளைகளின் நடத்தையும் ஆளுமையும் தீர்மானிக்கப்படுவதில் தாய் தந்தையருடன் அவர்களுக்குரிய உறவினளவு முக்கியம் வாய்ந்ததாகும். குழந்தை எந்த அளவுக்குப் பெற்றோருடன் இனங்காணுகிறது என்பதனைப் பொறுத்ததே அதன் ஆளுமை விருத்தி.

“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடனே” என்றோ, “எல்லாக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே” என்றோ கூறுவதில் அர்த்தமில்லை.

குழந்தை பிறந்த நாளிலிருந்து அது பின்பற்றக்கூடிய மாதிரி வகையாக நாம் தொழிற்பட ஆரம்பிக்கின்றோம். எமது நடத்தை ஒவ்வொன்றையும் குழந்தை

படிப்பகம்

www.padippakam.com



தீர்க்கமாகக் கவனித்து தன்னகத்தே பதித்துக் கொள்கிறது. எனது செயல்கள், எண்ணங்கள், பரிவர்த்தனங்கள் யாவுமே முக்கியத்துவம் பெறுகின்றன. நடைபெறுபவை யாவும் அதன் சிறிய மூளையில் ஒளிப்படம் போன்று பதியப்பட்டு விடுகின்றன. தாய் தந்தையரிடையே உள்ள உறவுமுறை, உற்றார் உறவினரிடையே உள்ள பந்த பாசம், தனது சகோதர சகோதரிகளோடு பெற்றோருக்கு உள்ள பிணைப்பு, பெற்றோர் தன்மீது காட்டும் பரிவு, அயலவருடன் பழகும் இங்கிதம் என எல்லாமே அதன் குறுகுறுக்கும் கண்களுக்குத் தவறுவதில்லை. எனவேதான் பெற்றோர்கள் பிள்ளைகள் பின்பற்றக்கூடிய முற்போக்கான முன்மாதிரி ஒன்றைத் தரவேண்டியது அவசியமாகின்றது. அது கிடைக்காத பட்சத்திலேதான் ஒரு குழந்தையின் பாரம்பரியமான உலகம் சிதிலமடைகின்றது. பல பிள்ளைகள் பாடசாலையில் சேருவதற்கு முன்னர் குழந்தை பராமரிப்பு நிலையங்களிலே சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். அங்கு அவர்கள் காண்பது அன்பு நிறைந்த பெற்றோருக்குப் பதிலாக கண்டிப்பும் அதிகாரமும் நிறைந்த ஒரு அந்நியரையே. இது பெற்றோரின் பணியை இன்னமும் கடினமாக்குகின்றது.

வீடுகளில் பெற்றோர் இருவரும் அன்புடன் உறவாடி, கருத்துக்களைக் கண்ணியமாகப் பரிமாறி வருவார்களாயின் பிள்ளை சுயமதிப்புடையவராகவும், மற்றையோரை மதித்து நடப்பவராகவும்,, முற்போக்கான நெறியுடையவராகவும் உருவாகும் வாய்ப்புண்டு. சிறு பிரச்சனைகளையும் பெற்றோர் பெரும் போராட்டமாக்கிக் கொள்வார்களாயின், ஒருவரை ஒருவர் புரிந்து வாழப்பழகாவிடின், சிறுமையும் சீற்றமும் வீட்டில் கொலுவீற்றிருக்குமாயின், பிள்ளை நையாண்டிக்காரராகவும், மனத்துணிவுடன் எதனையும் தீர்க்கமாக எதிர்கொள்ளும் தைரியமற்றவராகவும், குரூர மனப்பாங்கு கொண்டவராகவும், விருத்தியுற வாய்ப்புண்டு. எனவே எமது நடத்தை கண்ணியம் நிறைந்ததாகவும், வரைமுறைக்குள்ளே அமைந்ததாகவும், கட்டுப்பாட்டுடன் கூடியதாகவும்அமைதல் அவசியம். அப்படியெனின், உங்கள் தேவைகள் , ஆசைகள் யாவற்றையுமே பிள்ளைகளுக்காகத் தியாகம் செய்ய வேண்டுமா? தேவையில்லை. தியாகம் செய்துவிட்டு அந்த விரக்தியுடன் வாழுபவர் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக என்றுமே அமையமாட்டார்.

"நிறைய நேரம் பிள்ளைகளுடன் செலவிடுகிறோம் தானே" என்று சொல்கின்ற பெற்றோர்கள் உள்ளனர். ஆனால் அந்த நேரம் பிள்ளைக்குப் பிரயோசனமாக அமைகின்றதா என்று சிந்திக்க வேண்டும். பிள்ளையைத் தம் கண்காணிப்பிலேயே வைத்துக்கொண்டு தொலைபேசியில் சம்பாஷித்துக் கொண்டிருப்பதோ, சினிமாப்படம் பார்ப்பதோ, சமையல் அல்லது பிற வேலைகள் செய்வதோ பிள்ளையுடன் செலவிடும் நேரமாகக் கருதப்படக்கூடிய தன்று. அவருடன் சேர்ந்து விளையாட வேண்டும். அவருடன் சேர்ந்து வாசிக்க வேண்டும். அவர் சொல்வதைக் கேட்டுப் பொறுமையாகப் பதில் கூறுவதுடன், அவரின் சாதுரியத்தை மெச்ச வேண்டும். அவரின் சுயமதிப்பை உயர்த்தக் கூடிய வழிமுறைகளைக் கையாள வேண்டும். இன்னும் சொல்லப்போனால் அவருடன் இன்னொரு குழந்தை சேர்ந்து விளையாடுவதற்குரிய உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் உங்கள் நெறிமுறைகள், கோட்பாடுகள் யாவும் அவரை மிக இலகுவில் பற்றிக்கொள்ளும். அவரில் நீங்கள் உங்களைக் காண்பீர்கள்.

(ஜூன் 1994)

படிப்பகம்

www.padippakam.com



# பிள்ளைகளைத் தாக்குவதும் வன்முறையே

நான் ஒரு வீடு தேடுகின்றேன்' என்றார் திரு.
'ஏன் உங்கள் வீட்டுக்கு என்ன ' என்று கேட்டேன்.

'இது வேறு. இரண்டு சிறார்கள், அவர்களுக்குப் பெற்றோர் அடித்ததனால் ஏற்பட்ட பிரச்சனையால் அவர்களைச் சிறிது காலத்துக்குப் பராமரிக்க வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. அன்பாகப் பராமரிக்கக் கூடிய ஒரு குடும்பம் கிடைத்தால் நல்லது' என்றார்.

'இப்படிப்பட்ட முறைகேடுகள் எமது சமூகத்தில் உள்ளதா?' என்று கேட்டபொழுது, 'இப்பொழுது அதிகரித்து வருகின்றன' என்று திரு சொன்னார். எனவே இம்முறை இதுபற்றி எழுதலாம் என எண்ணினேன்.

கனடாவைப் பொறுத்த மட்டிலே வருடமொன்றுக்கு 225,000 சிறார்கள் வன்முறைக்கு ஆளாகிறார்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 'ஒவ்வொரு சிறுபிள்ளையையும் அதற்குரிய தனித்தன்மையையும் சில அடிப்படை வேறுபாடுகளையும் நீக்கிப் பார்ப்பின், ஒரே தன்மையான ஆற்றல்களைக் கொண்டதாகவே இருக்கும். அக்குழந்தைகள் தமது உள்ளடக்கிய ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கும், சமூகத்திலே சுயமாக உறவாடவும், சந்தோஷமாக வாழ்வதற்கும் வேண்டிய சமூக பொருளாதார உரிமைகள் ஒரே தன்மையில் வழங்கப்பட வேண்டும்' என்கிறார் சமூக விஞ்ஞானி ஹில் (Gil). ஆகவே, சமூகம் ஒவ்வொரு சிறாரினதும் முழுமையான வளர்ச்சிக்கு அனுசரணையான சூழல் காரணிகளை அமைத்துத் தரவேண்டியது அவசியம். அவ்வாறு வழங்கப்படாத சந்தர்ப்பங்களிலே வன்முறை பிரயோகிக்கப்படுகிறது எனக் கருதப்படவேண்டும்.

வன்முறை என்பது பாலியல் வன்முறை, உளப் பாதிப்பு அசிரத்தை, சரீர வன்முறை எனப் பல வகைகளை உள்ளடக்கிய போதிலும் சரீர வன்முறையே எமது சமூகத்தில் அதிகம் காணப்படுவதால் அது பற்றி இங்கு ஆராய்வோம்.

சரீர வன்முறை பொதுவாக குடும்பத்தில் உள்ளேயே நடைபெறுகின்றது. பெற்றோர் சம்பந்தப்பட்டவையாகவே இது இருக்கும். பெற்றோருக்குரிய கடமைகள் மிகவும் பாரியவை. அக்கடமைகள் யாவற்றையும் முழுமையாக ஆற்றுவது அவ்வளவு சுலபமானதல்ல. ஆனால் வெகுஜன தொடர்புச் சாதனங்களும், பாடசாலைகளும் பெற்றோர்களின் கடமைகளைப் மிகைப்படுத்தியே கூறுகின்றன.

பிள்ளையின் முழுமையான விருத்திக்கு அனுசரணையான எல்லாவற்றையும் செய்வதற்கு எமது சமூகத்தில் பெரும்பாலானோருக்கு வேண்டிய அவகாசமோ, பொருளாதார வசதியோ இல்லை என்பது வருத்தத்துக்குரிய உண்மையாகும்.

படிப்பகம்

www.padippakam.com



புதிதாக வேறு நாடுகளில் வந்து குடியேறுகின்ற பொழுது அந் நாட்டிற்குரிய கல்வித் தகைமைகளோ, அல்லது தொழிற் தகைமைகளோ இல்லாதிருக்கும். எவரையும் எதிர்நோக்கும் பிரச்சனை இதுவே. வன்முறை பிரயோகிப்பதற்குக் காரணமான மனநிலை பின்வருவனவற்றால் ஏற்படலாம்.

**1. மனப்பழு** (Stress): வேலையின் தாக்கம் அல்லது வேலை செய்யும் இடத்தில் ஏற்படுகின்ற விரக்தி மனத்திலே ஏற்படுத்துகின்ற பழு, ஒருவரை உணர்ச்சிவசப்பட வைத்து விடுகின்றது. எனவே, அந்த உணர்ச்சி தன்னை அறியாமலேயே வன்முறைப் பிரயோகத்தின் மூலம் வெளிப்படுகின்றது.

**2. பற்றாக் குறையான குடும்ப வருமானம்**: குடும்பத்தின் தேவைகளோ ஏராளம். இன்னொரு குடும்பத்தின் வசதியான வாழ்க்கை முறை கண்டு ஏக்கம், ஏற்படும் விரக்தி, குடும்பத்தின் தேவைகளை ஈடுசெய்ய முடியாத கையாலாகாத்தன்மை, பெரிய குடும்பமாயின் யாவரது தேவைகளையும் ஈடுசெய்யமுடியாத மன உளைச்சல், பாதுகாப்பின்மை ஆகிய காரணங்களால் தனது தோல்வியை மறைக்கும் கேடயமாக வன்முறை பிரயோகிக்கப்படுகின்றது.

**3. வன்முறை கையாளும் முன்மாதிரிகள்**: வன்முறை உபயோகித்த பெற்றோரின் பிள்ளைகளே, பெரும்பாலும் தாம் பெற்றோர் ஆனதும் வன்முறையைப் பிரயோகிக்கின்றனர். ஒரு சிறுவனோ சிறுமியோ, தனது இளமைக் காலங்களில் வன்முறைக்கு ஆளாகி வளர்ந்திருந்தால் , அவரது மனப்பாங்கிலே இரண்டு முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். தான் எப்படி வன்முறைக்குப் பயந்து தனது மனதுக்கு ஏற்காத செயல்களைச் செய்தாரோ, அதேபோன்று மற்றவர்களையும் வன்முறையினால் செய்துவைக்க முடியும் என்ற எண்ணம் உறுதிபெறுகின்றது.

ஸ்காபரோ கல்விச்சபை வன்முறையில் ஈடுபடும் மாணவர்களைப் பாடசாலையிலிருந்து முற்றாகவே நீக்கிவிடுவதை அறிந்திருப்பீர்கள். இவ்வருடத்தில் (1994) மாத்திரம் இதுவரை ஏழு பிள்ளைகளைப் பாடசாலையிலிருந்து நீக்கியுள்ளது. நீக்கப்பட்ட மாணவன் வெறுமனே 13 வயதுப் பாலகன். இன்னொரு மாணவனுடன் பாடசாலையில் சண்டையிட்டு அவனது மணிக்கட்டில் கத்தியால் வெட்டிவிட்டான் என்பதே குற்றச்சாட்டு. இந்த மாணவன் கல்வி கற்கும் பன்னிரண்டாவது பாடசாலை இது. அவனுக்கு வன்முறை தவிர வேறு எதுவுமே தெரியாது. இதற்குரிய காரணத்தைப் பார்த்தால் அவன் இப்படி வந்ததற்கு அவனது வளர்ப்பு முறையையே குறை கூறவேண்டும்.

இவனின் தாய் இம்மாணவனின் தந்தையை விட்டு நீங்கி இன்னொருவரிடம் தஞ்சம் புகுந்தாள். தன் பிள்ளையிடம், 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் நின்றலைக் கடனே' என்று புதிய கணவரிடமும் சொல்லி விட்டாள். அவனோ பிள்ளையை மாத்திரமல்ல தாயையும், நின்றால் அடி இருந்தால் உதை என்ற ரீதியிலே சான்றோராக்க முனைந்தான். சில வருடங்கள் இந்த இம்சை தொடர. பிரிட்டிஷ் கொலம்பியாவில் வாழ்ந்தவர்கள் அக்கொடியவனுக்குத் தெரியாமல், இங்கு ஓடிவந்து விட்டார்கள். அவனின் தாக்குதலிலிருந்து தப்பி விட்டோம் எனத் தாய் மகிழ்ந்தாள். ஆனால் தனயனையோ ஒரு புதிய அணுகுமுறை கைக்கொண்டு விட்டது. எதற்கும்

படிப்பகம்

www.padippakam.com



வன்முறை பரிகாரம் காணும் என்று அவனுக்குத் தோன்றியது. நடைமுறையில் சில வெற்றிகளையும் கண்டான். இன்று பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளான்.

வன்முறைக்கு ஆளாகும் ஒரு பிள்ளை சில சமயங்களில் அதே நெறிமுறைகளைப் பாடசாலையில் கல்வி கற்கின்ற காலங்களிலே உபயோகிக்காமல் விடலாம். ஆனால் அது அவன் மனதின் அடித்தளத்திலே புதைந்து கிடந்து, பிற்காலத்தில் விஸ்வரூபம் எடுத்து அவனை ஒரு வக்கிர புத்தியுடைய குரூரமனம் படைத்தவனாக மாற்ற முடியும்.

**4. சரீர வன்முறையை அங்கீகரிக்கும் சமூகம்:** எமது சமூகம் பிள்ளைகளைத் திருத்துவதற்கு ஓரளவு வன்முறை உபயோகிப்பதை அங்கீகரிக்கவே செய்கிறது. "அடியாத மாடு படியாது" என்பது பொதுவான ஒரு வாய் மொழி. தந்தை பொதுவாகவே தண்டனை வழங்குபவராகக் கருதப்படுபவர். "அப்பா வரட்டும் சொல்லி விடுகிறேன்" என்று அம்மா கூறிப் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவது நாளாந்த நடைமுறை. வன்மம் தீர்ப்பதற்காக வன்முறை பிரயோகிக்கப்படுவதில்லை. பிள்ளைகளை நல்லவர்களாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலேயே செய்யப்படுகின்றது.

'அடிக்கிற கை தான் அணைக்கிறது' என்று கூறுகின்றோம். இதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் என்ன செய்வது? இந்த நாட்டு அரசும் சமூகமும் இதனை அங்கீகரிப்பதில்லையே. பொதுவாக இங்கு வந்து கல்யாணம் செய்து குடும்பம் நடத்துகின்ற பெரும்பாலோர் பிள்ளை வளர்ப்பிலே இந்த நாட்டுக் கலாசாரத்தைப் பின்பற்றுகிறார்கள். அவர்களுக்குப் பிரச்சனைகள் அவ்வளவாக இருப்பதில்லை.

ஈழத்திலே குடும்பம் நடத்தி அந்தக் கலாசாரப் பின்னணியிலே பிள்ளைகளை வளர்த்த நடுத்தர வயதுப் பெற்றோர்களுக்கு இங்கு வந்து கலாசாரப் பின்னணியிலே பிள்ளை வளர்ப்பது ஒரு பெரிய பிரச்சனையாகவே அமைகிறது. பிள்ளைகளுக்கோ இங்குள்ள முறை சாலச் சிறந்தது போலத் தோன்ற, அவர்கள் பெரும்பாலோர் மிகவிரைவிலேயே மாறிவிடுகிறார்கள். பெற்றோர்களின் நிலை இக்கட்டாகிவிடுகிறது. ஒழுக்கம், கட்டுப்பாடு பற்றிய அவர்களின் வரைவிலக்கணத்தில் மாற்றம் ஏற்பட்டமையால் விளையும் முரண்பாடு அவர்களை விரக்தியடையத் தூண்டி வன்முறையாளர்களாக்கி விடுகிறது. "சில சந்தர்ப்பங்களில் உங்கள் பிள்ளைக்கு அடிக்க வேண்டியது அவசியமானதும் அறிவுபூர்வமானதும் ஆகும்" என இளவரசர் சார்ள்ஸ் அண்மையில் கூற, அதனைக் குழந்தை வளர்ப்பகங்களும், குழந்தை வளர்ப்பு நிபுணர்களும் கண்டித்துள்ளனர்.

ஒருவர் கூறியது எந்தளவுக்கு அவரது விரக்தியைப் புலப்படுத்துகிறது என்பதனைப் பாருங்கள். "பிள்ளையினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு அடி உதவுகிறது. அவருக்கு உடனடியாக வேண்டிய செய்தி சொல்கின்றது. நீ திருந்த வேண்டும் என்கிறது. இதைவிடுத்து அவருடன் நீண்ட நேரம் உரையாடுதல், மீண்டும் மீண்டும் ஒழுங்கு கட்டுப்பாட்டு முறைகளை நினைவுகூர்தல், வலியுறுத்தல், போதித்தல், இச்சகம் பேசல், உற்சாகப்படுத்தல், நடத்தையைக் கண்காணித்தல், இன்னும் லஞ்சம்

படிப்பகம்

www.padippakam.com



கொடுத்தல் போன்ற எல்லா முறைகளுமே ஒரு அடி கொடுத்தலுக்கு ஈடாகாது' என்கிறார்.

சில சமயங்களிலே பாடசாலைகளில் கடமையாற்றுகின்றபொழுது, நானும் இப்படிச் சிந்தித்ததுண்டு. "ஒரு அடி அடித்தேன் என்றால் எல்லா மாணவர்களையும் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடலாமே" என ஆதங்கப்படுவதும் உண்டு. ஆனால் பிள்ளைகளின் மனச்சாட்சியை விருத்தி செய்வதற்கு அடி உதவமாட்டாது என்பதை உணர வேண்டும். அடிக்குப் பயந்து நடப்பவர்கள் தொடர்ந்தும் அதே குற்றத்தைச் செய்யலாம். ஆனால் போதிய போதனைகள் மூலம் தூயமனச் சாட்சியை உருவாக்கிவிட்டால், அவர் அதே குற்றத்தை வாழ்க்கை முழுவதுமே செய்யமாட்டார் என எதிர்பார்க்கலாம்.

இங்குள்ள பாடசாலையொன்றின் மாணவன் ஒருவனின் தலையினை முற்றாகவே பிரம்புக் கூடையினால் மூடியபடி அரை மணி நேரம் வரை அதிபர் தமது அறையினில் வைத்திருந்தார். எனது பார்வைக்கு அது குரூரமான தண்டனை போலவிருந்தது. நானாக இருந்தால் அவனை அலுவலகத்துக்கு அழைத்து அவன் செய்த குற்றத்தை விளக்கி இரண்டு அடி அடித்துவிட்டு அனுப்பியிருப்பேன். அது சிறந்த முறை என்பேன் நான். இது சிறந்த முறை என்கிறது இந்த நாட்டு அரசு. எனவே நாம் மாறவேண்டியது அவசியம். அதுவே விதி.

**5.பிள்ளையின் தகைமைக்கு உகந்ததாக அமையாத பெற்றோரின் எதிர்பார்ப்புகள்:** இது எமது சமூகத்திலுள்ள பெரிய குறைபாடு. பிள்ளைகளின் கல்விப் பெறுபேறுகளை மிகப்பெரிய அளவிலே எதிர்பார்க்கின்றபொழுது, பிள்ளையினுடைய ஆற்றல்கள் பற்றிச் சிறிதேனும் சிந்திப்பதில்லை. பிள்ளைகளுடைய கல்விச் சாதனை பற்றிப் பெரும்பாலான பெற்றோர் திருப்தி அடைவதேயில்லை. இன்னும் சிறப்பாகச் செய்திருக்க வேண்டும் என்றே எண்ணுவார்கள். இதன் விளைவு, பிள்ளையின் மனதிலே ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்பட அவர் பாடசாலைக்கு மட்டம்போடும் நிலைகூட ஏற்படலாம். தம் விருப்பத்தைப் பிள்ளை ஈடுசெய்யவில்லை என்ற கோபத்தினால் பெற்றோர் வன்முறையில் இறங்குகின்றனர்.

எமது பெரும்பாலான பெற்றோர்கள் வன்முறையை வக்கிர புத்தியுடன் உபயோகிப்பதில்லை. பிள்ளையின் வருங்காலம் சிறப்பாக அமையவேண்டும், நல்ல ஒழுக்க சீலராக வாழவேண்டும், சிறந்த கல்வி அறிவு பெற்று சமூகத்திலே பேரும் புகழுடனும் வாழவேண்டும் என்ற அபிலாஷைகளுடனேயே பிள்ளைகளை வளர்க்கிறார்கள். இதற்கு முரணாக பிள்ளை போகின்றபொழுதே விரக்தியின் விளைவாக வன்முறை உபயோகிக்கின்றனர். அவர்கள் நோக்கத்திலும் குறை சொல்வதற்கில்லை. ஆனால் இந்நாட்டிலே வன்முறையால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றிய கவலையால் வன்முறை பிரயோகிப்பது சட்டப்படி குற்றமாகக் காணப்படுகிறது.

குழந்தை-குடும்ப சேவைகள் சட்ட மூலத்தின் பிரிவு 75ன் பிரகாரம் பிள்ளை ஒன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஒருவர் (அ) பிள்ளையின்மேல் வன்முறை பிரயோகிக்கப்படாது, (ஆ) பிள்ளைக்குப் போதிய பாதுகாப்போ, கண்காணிப்போ தராமல் அப்பிள்ளையை வன்முறைக்கு ஆளாக விடுவதோ, பிள்ளையின் விருத்தியைத் தடைப்படுத்தக்கூடிய விதத்தில் மனப்பயத்தை

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுத்துவதோ அங்கீகரிக்கப்படமாட்டாது. இது தண்டனைக்குரிய குற்றமாகும். சில பெற்றோர்கள் தாம் தங்களின் பிள்ளையின்மீது வன்முறை பிரயோகிப்பதைப் பிள்ளையின் ஆசிரியர்கள் காட்டிக்கொடுத்து விட்டார்கள் என்று குறைகூறுவதை நான் கேள்வியுற்றிருக்கிறேன்.

பொதுவாகவே நமது சமூகத்தவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அடிப்பவர்கள் என்று இங்குள்ள ஆசிரியர்கள் எண்ணுகிறார்கள். எனவே ஒரு பிள்ளையின் உடலிலே ஒரு கீறலோ, சிராய்ப்போ இருந்தால்கூட சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கிறார்கள். ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டாலும் கூட அதனை உடனடியாக அறிவித்து ஆவன செய்தல் அவர்களது கடமையாகும். குழந்தை-குடும்ப சேவைகள் சட்ட மூலத்தின் 72வது பிரிவின்படி ஒரு பிள்ளை வன்முறைக்கு ஆளாகியுள்ளது என்ற சந்தேகம் ஏற்படுமாயின் அதனை உடனடியாக அறிவித்துவிட வேண்டியது சட்டமாகும். அவ்வாறு அறிவிக்காதுவிட்டு அவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து ஆயிரம் டாலர் வரை அபராதமும் ஒரு வருடச் சிறைத் தண்டனையும் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

ஆகவே நாம் இந்த நாட்டு நடைமுறைக்கு ஏற்ப நடக்கப் பழக வேண்டும். வேறு எந்த இனத்திலும் காணமுடியாத அளவுக்கு எமது இனத்திலே குடும்ப பாசம், தியாக உணர்வு அதிகம். அந்த உணர்வுகளின் புலப்பாடே சில சமயங்களில் வன்முறைப் பிரயோகத்துக்கும் காலாக அமைந்துவிடுகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும். பிள்ளைகளோடு நாளாந்தம் கலந்துரையாடுவது, அவர்கள் செய்கின்ற பிழைகளின் பலாபலன்களைப் பற்றி அறிவுறுத்துவது, எமது எதிர்பார்ப்புகள் பற்றி அவர்களுக்குத் தெரிவித்து அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டுத் தீர்ப்பு எடுப்பது, சில நல்ல கருத்துகளை மீள மீள வலியுறுத்தி அவர்களின் மனச்சாட்சியை அந்த வழியில் சிந்திக்க வைப்பது, தோழமையுடன் பழகி ஒரு நண்பன் போன்று தேவையான பொழுது புகழ்ந்து, கடிந்து, விதந்து வாழ முனைவோமானால், வன்முறை என்ற பேச்சுக்கே இடம்வர மாட்டாது. பெற்றோராயிருப்பது சுலபமல்ல; அது தியாக வாழ்வு.

(ஜுலை 1994)

படிப்பகம்

www.padippakam.com



# தலைமுறை இடைவெளி

புதிய நாடு, புரியாத பழக்க வழக்கங்கள். புரிந்து கொள்ளக் கஷ்டமான பண்பாடு. எம்மை எதிர்நோக்கும் பிரச்சனைகள் பல. பரம்பரை இடைவெளி என்பது எல்லாச் சமூகத்தினதும் ஏகோபித்த பிரச்சனை என்ற போதிலும் கனடா வந்துள்ள நம்மவருக்கு விஸ்வரூபமெடுத்து நிற்பதைக் காணமுடியும். பொதுவாகவே மற்றைய சமூகங்களிலிருந்து வேறுபட்ட நோக்குடன், 'நாம்-குடும்பம்' என்பதைப் பார்க்கின்ற காரணமே இத்தகைய இடைவெளி பாரிய பரிமாணம் எடுப்பதற்குக் காரணமாகின்றது.

கனடிய குடிசன மதிப்பீட்டின் வரைவிலக்கணத்தின்படி "ஒரு வீட்டில் வாழுகின்ற கல்யாணமான இருவரையும், அவர்களது கல்யாணமாகாத பிள்ளைகளையும் அல்லது கல்யாணமாகாத பிள்ளைகளுடன் வாழ்கின்ற தனியான பெற்றோரைக் கொண்டதே ஒரு குடும்பம்" என்பதாகும். சமூகவியல் அறிஞர்கள் 'குடும்பம் என்பது இரத்த உருத்தினால் அல்லது கல்யாணம் மூலம் ஒன்றுபட்டோர் ஒன்றாக வாழ்தல்' என்கின்றனர். இவர்கள் குடும்பம் என்பதை இல்லத்தவர்களிலிருந்து வேறுபடுத்துகின்றார்கள். குடும்பத்தவர் இரத்த உறவினால் அல்லது கல்யாணத்தின் மூலம் ஒன்று பட்டிருந்தாலும் ஒன்றாக சேர்ந்து வாழவேண்டிய தேவையில்லை. இல்லத்தவர் என்போர் ஒரே வதிவிடத்தில் வாழ்வோர்; எந்தவிதமான உறவும் அவசியமில்லை.

இந்த இரண்டு வரைவிலக்கணங்களையும் சற்று நீட்டினால்தான் எமது பாரம்பரியமான குடும்ப நிலையை விபரிக்க முடியும். பொதுவாகவே இந்நாட்டு மக்களுடைய குடும்பங்கள் கருவுலக் குடும்பங்கள் (Nuclear families). ஆனால் எம்மதோ விரிந்த அல்லது விரிவுபட்ட குடும்பங்கள் (Extanded families). இங்கு பேரன் பேத்திகளும் கூட பொதுவாக இன்றியமையாத அங்கங்களாகி விடுகின்றனர். இதன் விளைவு? பாரம்பரிய இடைவெளி பாரிய அளவினுக்கு வந்துவிட்டது போன்ற போலியான தோற்றம் தருகின்றது.

கடந்த டிசம்பர் 12ம் திகதியிட்ட ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகையில் கார்லின் கவாகென்ஸ்ரீன் என்னும் வடக்கு யோர்க்கிலுள்ள நியுட்டன்புக் பாடசாலை மாணவியின் உள்ளக் குமுறலை வாசித்தேன். வயதானவர்களை நார் நாராகக் கிழித்துள்ளார். "உலகில் நடைபெறும் குற்றங்கள், வேலையில்லாமை, கல்வித்தர வீழ்ச்சி, சுற்றச் சூழல், மாசுபடல் போன்ற பல்வேறு உலகப் பிரச்சனைகள் எம் தலையிலே போடப்படுகின்றன. பெரியார்களை மதியாமை, சீரற்ற வாழ்க்கைமுறை, அறிவு அற்ற நிலை போன்றவை எம்மிலுள்ளதாகக் காணப்படும் குறைபாடுகள். வயதானோர் உலகில் நாம் பின்பற்றக் கூடிய மாதிரிகளில் உள்ளனரா என்று இச் சந்தர்ப்பத்தில் நான் கேட்க விரும்புகின்றேன். ஒரு இளவயதுப் பிள்ளை பிசைந்த களிமண் போன்றது. அது எப்படிப்பட்டதாக வளையப் போகின்றது என்பது அதன் கண்ணில் தோன்றும் மாதிரி உருவங்களைப் பொறுத்தது.

படிப்பகம்

www.padippakam.com



"இன்றைய வயதானோர் சிறிது காலத்தின் முன்னர் இளைஞர்களாக வாழ்ந்தவர்கள். அப்போது அவர்களும் அறிவு அற்றவர்களாக, புரட்சியாளராக, போதை மயக்கம் உடையவர்களாக, ஒழுங்கற்றவர்களாக, முரட்டுத்தன்மை உடையோராக வாழ்ந்தவர்களே. இவர்களிடமிருந்து நாம் எதைக் கற்றுக் கொள்வது? சுயநலம், சோம்பேறித் தன்மை, கூடாத மனப்பாங்கு ஆகியவைகளையா?" இந்த மாணவியின் கோபம் நியாயமற்றது என்று கூறமுடியாது. ஆனால் சற்று மிகைப்படுத்தப்பட்டுள்ளது.

எமது இளம் தலைமுறையினருக்கும் நமக்குமிடையே பல முரண்பாடுகள்; இல்லை பிணக்குகள் ஏற்படவே செய்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்குரிய சுமுகமான வழிகளை இளம் தலைமுறையினர் தெரிந்து கொள்வதில்லை. அவர்கள் வயது நிலையில் அது தேவையுமில்லை. தெரிய வேண்டிய அவசியமுமில்லை. எனவே, அனுபவமும் அறிவும் நிறைந்த பெற்றோர்கள் அவற்றினைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளை, பொறுமை, சாதுரியம், கனிவு, கண்ணியம் ஆகியவைகளைக் கடைப்பிடித்து நெருக்கடி நிலையிலிருந்து மீள உதவ வேண்டும்.

<u>பிள்ளை வளர்ப்புமுறை x சுதந்திரமாகச் செயற்படுதல் (Parenting Styles x Independence)</u>

பொதுவாய் பெற்றோர்களை மூன்று வகையினராகப் பிரிப்பார்கள். இங்கு பெற்றோர் என்பது நமது சமூகத்தில் பெருமளவில் தந்தையாகவே இருப்பார்(?).

1. சர்வாதிகாரமான பெற்றோர் (Authoritarian Parent); தாமே முடிவுகள் யாவும் எடுப்பது; தமது முடிவுகளை ஏனைய குடும்பத்தவர் மேல் திணிப்பது; குடும்பப் பிரச்சனைகள் யாவற்றையும் தனது தலைமேல் போட்டு ஏனையோரது கருத்துக்களுக்கோ, உணர்வுகளுக்கோ மதிப்புக் கொடுக்காமல் செயற்படுவது. "தந்தை சொல்மிக்கதோர் மந்திரமில்லை" என்று விரும்பியோ விரும்பாமலோ கூறவேண்டியது அவசியம்.

2. கீழ்ப்படியும் பெற்றோர் (Submissive Parent); இது முன்னையதற்கு நேர்மாறு. பெற்றோர் தமது உரிமைகள் யாவற்றையும் பிள்ளையிடம் சர்வதியாகம் செய்து விடும் நிலை. (?) இங்கு பிள்ளையே முடிவு எடுக்கின்ற இக்கட்டான நிலை. எந்த ஒரு பிரச்சனையும் பெற்றோரின் அங்கீகாரமோ பங்களிப்போ இல்லாமல் பிள்ளையாலேயே தீர்த்து வைக்கப்படுகின்றது.

3. ஜனநாயகமான பெற்றோர் (Democratic Parent); இங்கு பெற்றோர் ஒவ்வொரு பிள்ளையினுடைய முதிர்ச்சியையும் மதிப்பீடு செய்து அதற்கேற்பப் பிரச்சனைகளை அவர்களுடன் கலந்துரையாடி சரியான முடிவினை எடுக்க முயல்கின்றனர்.

இவற்றிலே மூன்றாவது முறையே சிறந்தது என்பது முற்றிலும் உண்மை என்ற போதிலும், இன்னும் பலர் முதலாவதோ இரண்டாவதோ முறையைக் கையாளவே செய்கின்றனர்.

எமது பிள்ளைவளர்ப்பு முறையுடன் முரண்படுவது இளம் தலைமுறையினரின் சுதந்திரமாகச் செயற்பட வேண்டுமென்ற உணர்வு. நாம் பொதுவாகவே மிகையான பாதுகாப்பு உணர்வுடைய பெற்றவர்கள் (Over Protective Parents). பிள்ளைகள் மேலுள்ள அபரிமிதமான அன்பினால் அவர்கள் எவ்வளவு

படிப்பகம்

www.padippakam.com



வளர்ந்தாலும் அவர்களைச் சிறியவர்களாகவே எண்ணி அவர்களின் தன்மான உணர்வுக்குப் பங்கம் ஏற்படுத்திச் சிறுமைப்படுத்துகின்றோம்.

ஜார்விஸ் கல்லூரியில் கல்வி கற்கும் வியட்நாம் மாணவி ஒருத்தி அப்பாடசாலையின் சஞ்சிகை ஒன்றிலே இதுபற்றி எழுதியுள்ளார். தினசரி பிற்பகல் ஐந்து மணிக்கு முன்னதாக அவர் வீடுவந்துவிட வேண்டும் என்பது நடைமுறையிலுள்ள வீட்டு விதி. பிந்தி வந்தால் தாயாரின் விசாரணையும், நீதி வழங்கலும் தீராத தலையிடி. சக மாணவர்களின் ஏளனம் அவருக்கு. மனம் உறுத்திய போதிலும், தாம் வேண்டுமென்றே ஒருநாள் இரவு 9.00 மணிவரையும் வெளியே திரிந்து விட்டு வீடு திரும்பினாராம். வீட்டில் பிரளயம் நடக்கும் என்று தெரியும். ஆனால் தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமென்ற வெறி அப்படிச் செய்தது என்கிறார்.

நம்மில் பலர் இதே பிழையினைச் செய்கிறோம். பிள்ளை வளர்ந்து விட்டது என்பதை உணர்வதில்லை. இன்னும் குழந்தை போன்றே பாவிப்பதால் அதன் சுய கௌரவத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறோம். இதன் விளைவு பிள்ளைகள் ஒத்த வயதுடையோர் ஏளனம், அவமதிப்புக்கு ஆளாகி அதனால் பெற்றோரினது அதிகாரத்தை எதிர்க்க வேண்டும் என்ற தீவிர எண்ணத்தால் திசை மாறிப்போய் பிழையான வழிகளில் ஈடுபடவும் செய்யலாம்.

ஒத்த வயதுடையோர் தாக்கம் x பெற்றோர் முன்மாதிரி

அல்பேர்ட்டா பல்கலைக்கழகத்தின் உளவியல் கல்விப் பேராசிரியர் டாக்டர் மிற்செல், "குழந்தைப் பராயத்திலே பிள்ளைகள் தம் அடிப்படைத் தேவைகளைப் பெற்றோரிடமிருந்து பெறுகின்றனர். அவர்கள் கட்டிளமைப் பருவம் அண்மிக்கின்ற போது அவர்களது தேவைகள் பலப்பல. இவற்றினை எந்த ஒரு பெற்றோரும் தாமாகவே தனித்து வழங்குதல் சாத்தியமில்லை. ஆகவே, கட்டிளமை வயதுடையோர் தமது தேவைகளை ஈடுசெய்ய ஒத்த வயதினரையும் நண்பர்களையும் நாடுகின்றனர்" என்கிறார்.

ஒத்த வயதுடையோர் தாக்கம் என்பது கட்டிளமைப் பராயத்தினருக்கு மட்டுமன்றி அனைவருக்குமுள்ளது. அவரவர் தத்தம் வயதுக்கேற்றவருடன் தமக்கேயுள்ள முறையில் தமக்குரிய பல பொதுவான பிரச்சனைகள் பற்றி அலசுவார்கள். கட்டிளமை வயதுடையோரின் இந்தத் தாக்கமானது, பெரிது படுத்தப்படுவதற்குக் காரணம் அவர்கள் பெற்றோரின் பிடியிலிருந்து விலகிச் செல்வதும், சில சமயங்களில் வேண்டத்தகாத சகபாடிகளைப் பெறுவதுமே. ஒத்த வயதுடையோர் தாக்கமானது நெறிமுறை தவறாத தாக்கத்தை ஏற்படுத்தலாம். பாடசாலை நிகழ்ச்சிகள், சமூக நிகழ்ச்சிகள், சேர்ந்து கற்றல் போன்ற நல்ல பல விஷயங்களில் ஒத்த வயதினர் தாக்கம் அமையும். குடி, போதைப் பொருள், பாடசாலைக்கு மட்டம் போடுதல், களவு எடுத்தல், நாசவேலை, மற்றையோருடன் அநாவசிய சண்டை சச்சரவு, பெற்றோர்களை மதியாமை போன்ற எதிர்மறைவான விளைவுகள்தாம் எம்மைப் பயம் கொள்ள வைக்கின்றன.

பெரும்பாலான பிள்ளைகளுக்குத் தாம் பின்பற்றுவதற்கு மாதிரி உரு (Role Model) ஒன்று அவசியமாகின்றது. இதனை அவர்கள் தமது ஒத்த வயதினரிடமிருந்தோ அல்லது திரைப்படம்/தொலைக்காட்சிகளிலிருந்தோ பெற்றுக் கொள்கிறார்கள். பிள்ளைகள் பின்பற்றக் கூடிய முன்மாதிரியை

படிப்பகம்

www.padippakam.com



பெற்றோர் தரும் பட்சத்தில் இத்தகைய பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பில்லை. இங்குதான் காரலின் கவாஹெஸ்ரீன் கூறியதை மீண்டும் நினைவுகூர வேண்டும். சுயநலம், கூடாத கோட்பாடுகள், நல்ல நெறிமுறைகள் இல்லாமை, சமூகவிரோதச் செயல்களில் ஈடுபாடு போன்ற பல்வேறு எதிர்மறையான செயல்களைப் பெற்றோர்கள் புரிகின்ற பொழுது அவர்கள் எவ்வாறு பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக அமைய முடியும். 'ஒரு கோப்பையிலே என் உயிரிருக்கும்' என மதுக்கிண்ணத்துடன் தனது ஒத்த வயதினருடன் களியாட்டம் ஆடும் பெற்றோர், குடித்தல் கூடாது என்று பிள்ளைக்கு எப்படிக் கூற முடியும்? வாழ்ந்து காட்டுதலே சிறந்த முன்மாதிரி.

செந் நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலால் - அந்நெல்
வயல் நிறையக் காய்க்கும் வளவலூர
மகனறிவு தந்தை யறிவு!

என்கிறது நாலடியார். புதல்வனுடைய அறிவு ஒழுக்கங்களை விரும்பும் தந்தை தான் நல்லொழுக்கம் உடையவனாய் விளங்குதல் வேண்டும்.

<u>சுயமதிப்பு x சமூக மேன்முக ஆதரவு (Self Esteem x Social Mobility)</u>

கட்டிளமைப் பருவப் பிள்ளைகளுக்கு சுயமதிப்புப் பிரச்சனைகள் பலவற்றை ஏற்படுத்தும். பலரின் உள்ளத்திலே முரண்பட்ட பல எண்ணங்கள் தோன்றும். தீர்மானம் எடுக்க முடியாமை, தாழ்வுணர்ச்சி போன்றவை உள்ளத்தில் தோன்ற அவை பெற்றோரின் அதிகாரத்தை (Authority) எதிர்த்தல், ஒத்த வயதினரைத் தேடி ஓடுதல் போன்றவற்றில் பிரதிபலிக்கும். இந்த வயதினிலேயே பெற்றோர்களும் தெரிந்தோ தெரியாமலோ தமது அபிலாஷைகளைப் பிள்ளைகளுக்குத் தெரிவிப்பது வழக்கம்.

நம்மால் சாதிக்க முடியாததை நம் பிள்ளைகள் மூலமாவது சாதிக்க வேண்டுமென்ற வைராக்கியம் எம்மிடம் உண்டு. இதன் மூலம் தான் சமூகத்தில் ஏற்ற நகர்வு ஏற்பட முடியும் என்பது உண்மையே. ஆனால் பல பெற்றோர்கள் சாத்தியமில்லாத அசாதாரண இலக்குகளை எய்துமாறு பிள்ளைகளைத் தூண்டும் போது அவர்களால் அதனை ஈடுசெய்ய முடியாத போது ஏற்படுகின்ற விரக்தியின் விளைவாக அவர்களின் சுயமதிப்புப் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது.

பாடசாலைத் தேர்ச்சி அறிக்கையைப் பார்வையிட்டதும் நம்மில் பெரும்பாலோர் குறைவாக எடுத்த புள்ளிகளைப் பற்றியே விசனம் காட்டுவோம் அல்லது இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாமே என வினவுவோம். இல்லையேல் இன்னொரு பிள்ளையின் அறிக்கையுடன் ஒப்பிட்டுப் பேசுவோம். நாம் எம்மை அறியாமலேயே நமது பிள்ளையினுடைய சுயமதிப்பைத் தாழ்த்துகின்றோம் என்பதை நாம் உணர்வதில்லை. கட்டிளமைப் பருவப் பிள்ளைகள் பெருமளவிலே பெற்றோரின் விதந்துரைகளையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறார்கள். எனவே தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களைப் புகழ்தல் அவசியம். இதற்கு தேர்ச்சியறிக்கை ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருகிறது. அவர்களின் திறமையான செயற்பாடுகளை அப்போது போற்றலாம்.

"உனது ஆற்றலுக்கேற்ப மிகவும் திறமையாகச் செய்துள்ளாய். நான்

படிப்பகம்

www.padippakam.com



சந்தோஷப்படுகிறேன்" என்று கூறுவதில் நாம் ஒன்றையும் இழக்கவில்லை. ஆனால் அவனது மனத்தில் எத்தகைய உற்சாக உணர்வை ஏற்படுத்துமென்பதை நாம் உணர்தல் அவசியம்.

விழுமியங்கள் x விழுமியங்கள் (Values)

விழுமியங்கள் காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம், வயதுக்கு வயது என மாறிக் கொண்டே போகின்றன. நாம் யௌவனராக இருந்த பொழுது கொண்டிருந்த விழுமியங்களை இப்போது கொள்கிறோம். சமயக் கோட்பாடுகள், அரசியல் கொள்கைகள், ஆண் பெண் உறவு போன்றவற்றில் பலப்பல மாற்றங்கள். என்ன விதமாக உடுக்கிறார்கள், எந்த வகை இசை கேட்கிறார்கள், எப்படி முடி வளர்க்கிறார்கள் போன்ற பல விஷயங்கள் பெற்றோர்களுக்குப் பிள்ளைகளின் மேல் கோபம் ஏற்படச் செய்யலாம். ஆனால் இவை யாவும் எந்த விதமான வேண்டத்தகாத நிலைகளையும் உருவாக்குவதில்லை. இவற்றைப் பெற்றோர் அனுசரித்தே அக வேண்டும். இவற்றினைத் தடுக்கவோ, மாற்றவோ முற்பட்டால் சில சமயங்களில் இவற்றுக்குப் பதிலாக வேறுபல வேண்டத்தகாத செயற்பாடுகளில் பிள்ளைகள் இறங்க நேரிடலாம். எனவே பெற்றோர்கள் சாதுரியத்துடன் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும்.

நெறியறிவின்மை x சமய நம்பிக்கைகள் (Moral Illiteracy)

நாம் பொதுவாக நல்ல நெறிமுறைகளைச் சமயத்துடன் பிணைத்தே சொல்கிறோம். எது நீதியென்று சட்ட ரீதியாகப் பார்க்காமல், எது பாவமென்று சமய ரீதியாகப் பார்த்து ஒழுகுவது நமது பண்பு. அதே சமயத்தில் கட்டிளமைப் பருவத்தை அடைகின்ற பெரும்பாலோர் சமயக் கோட்பாடுகளுக்கு எதிராகவே போர்க் கொடியினை முதலில் உயர்த்துவர். சமய சம்பிரதாயங்கள் மூடத்தனமானவை என அவர்கள் எண்ணுகின்ற போது, சமயத்துடன் பிணைந்து காணப்படும் நெறி முறைகளையும் அவர்கள் அங்கீகரிக்கத் தயக்கம் காட்டுவர். அவர்கள் உள்ளத்திலே உண்மையான நீதி நெறிகள் எவை என்கின்ற வினா விஸ்வரூபம் எடுக்கின்றது. இது தற்காலிகமானது என்பதை பெற்றோர் உணர்ந்து பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தொடர்பு இடைவெளி

கட்டிளமை வயதுடையோருக்கும் அவர்கள் பெற்றோருக்குமிடையே நடைபெறுகின்ற கலந்துரையாடலை "பராமரிப்புப் பேச்சு" (Maintanence talk) என்றே அழைப்பார்கள். நாளாந்தம் நடைபெறும் சம்பாஷணை (?) "பாடம் படித்தாயா? அறையை ஒழுங்காக வைக்க மாட்டாயா? கடைக்குப் போய் வாறியா?" என்பவை. இத்தகைய வினாக்களும் ஏவல்களும் "பிரச்சனைகள் அற்றவையாக இருப்பதால் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே முரண்பாடுகளை ஏற்படுத்த மாட்டா என்பது உண்மை. ஆனால் பெற்றோருக்கும் பிள்ளைக்குமிடையே உள்ள பிரதான பிரச்சனையாகிய "அவர் நம்மை விட்டு விலகிச் செல்கிறார்" என்ற ஆதங்கத்தை நிவர்த்தி செய்வது இத்தகைய பராமரிப்புப் பேச்சுக்கள் அல்ல.

சீராட்டுப் பேச்சு (Caring Talk) அவர்களைச் சுலபமாகக் கைக்குள் போட வைத்து விடுவதால் அவை தடவிக் கொடுத்தல்கள் (Strokes) என அழைக்கப்படுகின்றன. "மிக்க நன்றாக அறையினை வைத்திருக்கின்றாய். பாராட்டுக்கள்"; "பாத்திரங்கள் கழுவுவதற்கு நீ உதவியபடியால் வேலை

படிப்பகம்

www.padippakam.com



சுலபமாய் முடிந்து விட்டது"; "நீ கடைக்குப் போனதால் எனது வேலை சுலபமாக முடிந்து விட்டது"; "நீ எவ்வளவு உதவி செய்துள்ளாய்" போன்று உற்சாகமாகக் கூறுவதால் நாம் எதனையும் இழந்து விடப் போவதில்லை. இவை பிள்ளைகளின் சுய மதிப்பினை அதிகரிக்கச் செய்வதுடன் எமக்கும் அவர்களுக்குமிடையேயுள்ள இடைவெளியைக் குறைக்க உதவும்.

பாலியல் விஷயங்களைக் கூட ஓரளவுக்கு நம் பிள்ளைகளுடன் பேசலாம். நாங்கள் மேலெழுந்த வாரியாக அதனைச் சொல்லிக் கொடுக்காவிட்டால் அவர்கள் வேறு யாரிடமேனும் அதுபற்றித் தெரிய முனைகையில் சில நேரங்களில் விபரீதம் ஏற்படலாம். பொதுவாகவே பிள்ளைகளுடன் கலகலப்பாகப் பேசுவது இன்றியமையாதது. சில கோணங்கிச் சேட்டைகளைச் செய்தும் இறுக்கமான சூழல்களைத் தளர்த்த முடியும்.

தொடர்பு இடைவெளி ஏற்படாமல் தடுப்பதற்கு விலக்க வேண்டியவை:
1. கட்டளையிடுதல், உத்தரவிடுதல், வழிநடத்த முனைதல்.
2. போதனை அல்லது உபதேசம் செய்தல், ஒன்றைச் செய்யுமாறு வற்புறுத்துதல்.
3. குறை கூறல், ஏளனம் செய்தல், தாழ்த்திப் பேசுதல்.

பரம்பரை இடைவெளி என்பது எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும். நேற்றைய இளைஞர் இன்றைய பெற்றோர். இன்றைய இளைஞர் நாளைய பெற்றோர். ஒவ்வொரு தலைமுறையிலும் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே கட்டிளமை வயதில் பிரச்சனை எழவே செய்யும். ஆனால் பொறுமையுடன் விவேகத்தையும் கடைப்பிடிப்போமாயின் எம் பிள்ளைகள் எம்முடனேயே நிற்பர்.

(பெப்ரவரி 1995)

படிப்பகம்

www.padippakam.com



# எமது பெற்றோரின் அதீத பாதுகாப்புத்தன்மை

"எனக்கும் உன்னைப் போல் ஒரு மகள் உள்ளார். அவருக்கு ஓர் இளைய சகோதரியும் இருக்கிறார். அவர்களின் தாய் இறந்து விட்டமையால், சென்ற எட்டு வருடமாய் நான் தான் தாய், தந்தையாய் செயற்பட்டு வருகிறேன்" என்றேன். "அப்படியா? அவர்களுக்கு 'CURFEW' நேரம் எப்பொழுது" என்றார் அம் மாணவி. "curfew"வா? அப்படி ஒன்றும் எமது வீட்டில் இல்லை. நான் தாய் போன்று பாசமும், பரிவும் காட்டி, தந்தை போன்று ஒழுங்கு, கட்டுப்பாடு வேண்டி நிற்கின்றேன். அவர்கள் எனக்குத் தெரியாமல் எங்கும் போவதில்லை. எங்கு சென்றாலும் குறிப்பிட்ட நேரத்தில் வீடு வந்து விடுவார்கள். வரச் சற்றுப் பிந்துமானால் தொலைபேசி மூலம் செய்தி தந்து விடுவார்கள்" என்றேன்.

மேற்படி சம்பாஷணை சில நாட்களுக்கு முன்னர் ஓர் பாடசாலை மாணவிக்கும் எனக்கும் இடையே நடைபெற்றது. அம் மாணவிக்கும் பெற்றோருக்குமிடையே சிறு பிரச்சனை. அது பாடசாலை வரைக்கும் வந்து விட்டது. பெற்றோர்கள் எமது கலாசார பாரம்பரியத்தில் வாழ்ந்தவர்கள். அது உன்னதமானது என்ற நம்பிக்கையுடன் வாழ்பவர்கள். மகளோ இந் நாட்டிலே சில வருடங்கள் முக்கியமான உடல் மாற்றம், உளமாற்றம் ஏற்படுகின்ற காலகட்டமான யௌவன வயதிலே இங்கு வந்ததால், இந் நாட்டில் நடைமுறையில் உள்ள கலாசார நடைமுறைகளில் சிலவற்றால் கவரப்பட்டு அவற்றினைத் தாமும் கடைப்பிடிக்க விரும்பும் இரண்டும் கெட்டான் வயதிலே உள்ள யுவதி. இதனால் இரு சாராருக்குமிடையே சில அபிப்பிராய பேதங்கள்; ஒன்றும் பாரதூரமானவையல்ல.

"உமக்கு என்ன பிரச்சனை" என நான் கேட்டேன்.

"என்னை இன்னும் சின்னப்பிள்ளையாகவே இவர்கள் பாவிக்கிறார்கள். எங்கு போனாலும் சொல்லிவிட்டுத்தான் போக வேண்டுமாம். தேவையெனில் தாங்களே கூட்டிக் கொண்டு போவார்களாம்; அல்லது யாருடன் போகிறேன் என்று கூற வேண்டுமாம். குறிப்பிட்ட நேரத்திற்கு முன் (curfew) வந்துவிட வேண்டுமாம், அப்படி வரப் பிந்தினால் அங்கிருந்து தொலைபேசி மூலம் ஏன் பிந்தியது, எப்போ வருவேன், யாருடன் வருவேன் என்று அறியத்தர வேண்டுமாம்" என்று குற்றச்சாட்டுக்களைப் பட்டியல் போட்டுத் தந்தார்.

"இதில் எது நியாயமற்றது. அவர்கள் செய்வது யாவும் உமது நன்மை கருதியே. உமது பாதுகாப்பில் அக்கறை காட்டுகின்றனர். உமது வருங்காலம் சிறப்புற வேண்டுமென்ற அவாவின் காரணமாக சில செயல்கள் செய்கிறார்கள். ஆகவே அவர்களின் விருப்பப்படி நடப்பதில் உமக்கு எவ்வித சங்கடங்களும் ஏற்படப் போவதில்லையே" என்றேன். என்ன நீங்கள் பேசுகிறீர்கள். நான் என்ன குழந்தையா? பதினெட்டு வயது நிரம்பிய யுவதி. இப்போ நான் சுதந்திரமாக இயங்காவிடில் பின் எப்போது இயங்குவது" எனச் சூடாகப் பதில் வந்தது.

படிப்பகம்

www.padippakam.com



உமக்கு எத்தனை வயதானாலும் நீர் அவர்களுக்கு என்றும் குழந்தையே. அவர்களோ கனடாவில் வாழ்ந்தாலும், உளப்பாங்கிலே கலாசார பிரதிபலிப்பிலே இன்னும் ஈழத் தமிழர்களே. நீரோ இங்கு சில வருடங்கள் வாழ்ந்து விட்டமையால் இந்நாட்டுக் கலாசாரத்திலே ஒரு சிலவற்றைத் தேர்ந்து எடுத்து விட்டு உமதாக்க விரும்புகிறீர். அங்குதான் முரண்பாடு ஏற்படுகிறது. நீரும் ஒரு தாயாக வருகின்ற பொழுது தான், பெற்றோர்களின் அங்கலாய்ப்புப் பற்றித் தெரிந்து கொள்வீர். எனது மகனுக்கு முப்பது வயது. இன்னும் எனது அனுமதியுடன் தான் செயல் முடிவுகளை எடுக்கிறான். எங்கு போனாலும் சொல்லிவிட்டே போகிறான். வரப் பிந்துமாயின் அங்கிருந்து கூப்பிட்டுச் சொல்கிறான். இது எமது கலாசாரத்தின் பிரதிபலிப்பு. நீர் பெற்றோர் குறுக்கீடு என்று கருதுவதை அவர் பெற்றோரின் வழிகாட்டல் எனக் கருதுகிறார். எனவே, தயவு செய்து உமது பெற்றோரின் அறிவு, அனுபவம் ஆகியவற்றிற்கு மதிப்புக் கொடுத்து அவர்கள் வழிகாட்டலை அங்கீகரித்து வாழும்" என அறிவுரை கூறி அனுப்பி வைத்தேன்.

நான், என் உரையாடலை இத்தனை விபரமாகச் சொன்னது இளைய தலைமுறையினருக்காகவே. அவர்களில் எத்தனை பேர் இதனை வாசிக்கிறார்களோ தெரியாது. இத்தகைய ஒரு அபிப்பிராயம் எமது இளைய தலைமுறையினருக்கு உள்ளது. அம் மாணவி எமது இளைய தலைமுறையினரின் பிரதிநிதி என்றே நான் கருதுகிறேன். சில மாதங்களுக்கு முன்னர், கல்விச்சபை ஒன்றின் பெற்றோர் சம்மேளனத்திலே, தமிழ் பெற்றோருக்கு உரை நிகழ்த்துமாறு பணிக்கப்பட்டேன். இத்தகைய சந்தர்ப்பங்களிலே நான் எனது பெண் பிள்ளைகளுடன் கலந்து ஆலோசிப்பது உண்டு. ஆகவே என்ன பொருள் குறித்து உரை நிகழ்த்தலாமென அவர்களைக் கேட்டேன். பளிச்செனப் பதில் வந்தது. ஏன், அதீத பாதுகாப்புத் தரும் பெற்றோர்கள் (OVER PROTECTIVE PARENTS) அல்லது பெற்றோரின் மிகையான எதிர்பார்ப்புகள் (VERY HIGH EXPECTATIONS) பற்றிப் பேசுங்களேன் என்றார்கள். இது எனக்கு விழுந்த சூடு. ஈழத்துப் பெற்றோர்களின், எண்ணங்கள், போக்குகள் என்னிலும் பிரதிபலிக்கின்றன. இதனை என் பெண் பிள்ளைகள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை அவர்கள் கூறிய பதில் எனக்குக் காட்டியது.

எம்மவர்களின் அதீத பாதுகாப்பு உணர்வைப் பற்றி விதந்து கூற அண்மையில் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. நடந்து கொண்டிருக்கின்ற பேர்னாடோ வழக்கு எல்லோர் கவனத்தையும் ஈர்க்கும் வழக்கு. சிலர் பத்திரிகைகளிலும், வேறு சிலர் தொலைக்காட்சி மூலமும், அதிருஷ்டம் உள்ள ஓர் சிலர் நேரடியாகவும் வழக்கு விபரங்களை அறிந்திருக்கலாம். இதில் மிகக் குரூரமான முறையிலே கற்பழிக்கப்பட்டு காட்டுமிராண்டித் தனமாக உடல் சிதைக்கப்பட்ட பாடசாலை மாணவி லெஸ்லி மஹாஃபி என்பவர். இப் பெண்ணுக்குப் பதினைந்து வயது. மஹாஃபி பெற்றோர் கட்டுக்கடங்காத தன்னிச்சையாக வாழ்ந்த யுவதி. வீட்டிற்கு காலம் தாழ்த்தி வருவதை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. இதனால் அவள் சில சந்தர்ப்பங்களிலே தனியார் விடுதியிலேயும், வேறோர் சிநேகிதி வீட்டிலேயும் இரவு நேரத்தை கழித்திருக்கிறாள். அவளைக் காமுகன் கடத்திக் கொண்டு சென்ற அன்றிரவு என்ன நடந்தது? தனது நண்பன் ஒருவன் இறந்ததற்காக அஞ்சலி செலுத்தப் போனவள் நண்பர்களுடன் லூட்டி அடித்து விட்டு அதிகாலை 3.00 மணிக்கு வீடு வருகிறாள். உள்ளே செல்வதற்குத் திறப்பு

படிப்பகம்

www.padippakam.com



இல்லை. உள்ளே உறங்கும் பெற்றோரை எழுப்புவதற்குத் துணிவு இல்லை. தனியார் விடுதியிலே தங்கப் பணம் இல்லை. தனது சிநேகிதிக்குத் தொலைபேசியில் அழைத்து இரவு தங்குவதற்குக் கேட்ட பொழுது அவர் மறுத்து விட வேறு வழியில்லாமல் வீட்டின் பிற்புறத்திலே தங்கியிருக்கும் பொழுது காமுகன் கண்ணில் பட்டதால் நடந்தவையாவும் ஊரறிந்த உண்மை. இதை நான் எனது பிள்ளைகளுக்குக் கூறி தமிழ் பெற்றோர்கள் அதீத பாதுகாப்பு உணர்வுள்ளவர்கள் என்கிறீர்களே, தமிழ்க் குடும்பம் எதிலாவது இத்தகைய ஒரு கொடுமை பதினைந்து வயது நிரம்பிய ஒரு சிறு பெண்ணுக்கு நடந்திருக்குமா" என்று கேட்டேன்.

1. எந்த ஒரு தாயோ தகப்பனோ தனியே போன பெண் பிள்ளை வீடு திரும்பவில்லை என்றால் நிம்மதியாக உறங்குவாரா?

2. முதலிலிருந்தே ஒரு கட்டுப்பாடு உணர்வினை ஏற்படுத்தியிருந்தால், அதீத சுதந்திரம், அதன் உண்மையான தன்மை தெரியாத சிறு பெண்ணுக்குக் கொடுப்பதைத் தவிர்த்து இருந்தால், அவர் நேரம் தாழ்த்தி வீடு வருகின்ற தன்மையைக் கட்டுப்படுத்தியிருக்கலாமல்லவா?

3. எமது பெற்றோர்கள் எந்த அளவினுக்கு பாதுகாப்பு உணர்வுடையவர்களாக உள்ளார்களோ அதே அளவினுக்கு தம் பிள்ளைகளிலும் நம்பிக்கை வைத்துள்ளார்கள். வீட்டின் உள்ளே செல்வதற்கு ஒரு திறப்பினை அச் சிறுமியிடம் கொடுத்திருந்தார்களென்றால், அவள் உயிர் இந்த அற்ப வயசிலே போவதைத் தவிர்த்திருக்கலாமல்லவா? இதுதான் எம் இனப் பெற்றோருக்கும் இங்கு வாழ்கின்றவர்களுக்குமிடையே உள்ள வேறுபாடு? பொதுவாகவே எமது பெற்றோர்கள் பெண்பிள்ளைகளைத் தனியே எங்கும் செல்வதை அங்கீகரிப்பதில்லை. வேறு யாரேனும் தெரிந்தவர்களுடன் செல்வதையே விரும்புவர். அப்படி நடந்திருக்குமாயின் லெஸ்லி மஹாஃபி இன்னும் புத்தம் புது மலராய் பாடசாலை சென்று வந்திருப்பாள்.

எனது பிள்ளைகள் எனது கருத்தினை அன்று (?) அங்கீகரித்தனர். எத்தனை நாளைக்கோ?

எனது சக ஊழியர் இத்தாலியர். அவர்கள் சமூகம் ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்னர் இந் நாட்டிற்குப் புலம் பெயர்ந்து வந்தது. அப்பொழுதும் இதே போன்று பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையே அக்கப்போர் நடைபெற்றதாகக் கூறினார். பெற்றோர்கள் பழைமை விரும்பிகள். இதனால் பல பெண்பிள்ளைகள் வீட்டிலிருந்து பாடசாலை புறப்படுகையிலே பெற்றோர் விரும்பும் உடையினை அணிந்து சென்று வழியிலே வியாபார நிலையங்களிலே தமது விருப்பமான உடைகளுக்கு மாற்றிச் சென்றார்களாம். அந்தச் சமூகம் இப்போ கனடிய கலாசாரத்திலே மூழ்கி நிற்கிறது. இந்த நிலை எமது சமூகத்திற்கும் கட்டாயம் ஏற்படவே செய்யும். இத்தகைய மாற்றங்களிலே முதலில் இழப்பது மொழி. அதனைத் தொடர்ந்து கலாசாரம். எமது முதலாவது கட்டம் நடந்து கொண்டிருப்பதை பலர் உணர்ந்திருப்பீர்கள்.

சில நாட்களுக்கு முன்னர் பத்திரிகைகளில் வந்த ஒரு செய்தியை பலர் வாசித்திருக்கலாம். உலகிலேயே மிகவும் வயதில் குறைந்த ஒரு வைத்திய கலாநிதி பதினேழு வயது நிரம்பிய பாலமுரளிகிருஷ்ணா. இவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். தாய் தமிழர், தந்தை தெலுங்கர். அமெரிக்காவிலே படித்து வைத்திய

படிப்பகம்

www.padippakam.com



கலாநிதியாகியுள்ளார். **பாலமுரளியின் தாயார் கோமதியம்மாள் கூறியதை** ஒருமுறை எமது பெற்றோர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தருகிறேன். "நானும் அவரும் பிள்ளைகளுக்கு ரெலிவிஷன் மோகத்தை ஆரம்பத்திலேயே தடைசெய்து விட்டோம். நாங்கள் எங்காவது ஷொப்பிங் போனாலும் அவர்களை நாங்கள் விட்டுச் செல்லும் இடம் நூலகமாகத்தான் இருக்கும். குழந்தைகளுக்கு நல்ல சூழ்நிலையும், பெற்றோர்களின் திட்டமிடுதலும், கொஞ்சம் தியாகமும் இருந்தால் போதும், கட்டாயம் எப்பேர்ப்பட்ட பிள்ளையும் அறிவாளி ஆகிவிடும். பெற்றோர் ஆகிய நாம் எமது கடமையைச் செய்கிறோமா? சிந்திக்க வேண்டும்.

(ஜுலை 1995)

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்